
சைவ சமய சந்தானக் குரவர்கள்

வண்ணப்படக்கதை



கௌரி ராஜகோபால்

சைவ சமய சந்தானக் குரவர்கள்

வண்ணப்படக்கதை

எழுதியவர்
கௌரி ராஜகோபால்

ஓவியம்
ஆர். வெங்கட்

ஸ்ரீராமகிருஷ்ண மடம்
மயிலாப்பூர், சென்னை-4

வெளியிடுபவர்
தலைவர்
ஸ்ரீராமகிருஷ்ண மடம்,
சென்னை-4

I-2M 3C-7-2014
ISBN 978-81-7883-571-6

அச்சிட்டோர்:
ஸ்ரீராமகிருஷ்ண மடம் அச்சகம்
மயிலாப்பூர், சென்னை-4

பதிப்புரை

'தோத்திரமும், சாத்திரமும் ஆனார் தாமே' என்று திருவாலங்காட்டு திருத்தாண்டகத்தில் சிவபெருமானை அப்பர் பெருமான் போற்றுகிறார். இதன்மூலம் இறைவன் தோத்திரங்கள் வடிவிலும் சாத்திரங்கள் வடிவிலும் விளங்குகின்றார் என்பது தெளிவு. எம்பெருமான் எங்கும் எதிலும் நீக்கமற நிறைந்தும் அவற்றைக் கடந்தும் விளங்குபவர்; இருப்பினும் அவர் பக்தர்கள் தம்மை அடைவதற்காகத் தோத்திரங்களையும் சாத்திரங்களையும் இறையருளாளர்கள் மூலம் தோற்றுவித்து அருள்பாலிக்கிறார்.

தோத்திரங்கள் இறைவனது பெருமையை, புகழைப் பாடுபவை; சாத்திரங்கள் இறைவன், உயிர், உலகு ஆகியவற்றின் இயல்பை எடுத்துக் காட்டி இறைவனை அடைவதற்கானப் பாதையினை விளக்குபவை. பக்தியால் கனிந்து தோன்றியவை தோத்திரங்கள்; அறிவால், ஞானத்தால் விளைந்தவை சாத்திரங்கள்.

சிவபெருமானை நேரில் தரிசித்து அகம் நெகிழ்ந்து அவரது பெருமையைத் தோத்திரங்களாக அருளியவர்கள் சமயக் குரவர்கள்; சைவ சித்தாந்த சாத்திரங்களை அருளியவர்கள் சந்தானக் குரவர்கள்.

சந்தானக் குரவர்களைப்பற்றி கிடைத்துள்ள செய்திகளைக் கொண்டு அந்த மகான்களின் வாழ்க்கையினை வண்ணப்படங்களுடன் இந்நூலில் தந்துள்ளோம். மேலும், சைவ சித்தாந்தத்தைப் பற்றிய ஒரு சிறு குறிப்பு, சந்தான பரம்பரை, சைவ சித்தாந்த நூல்களை இயற்றிய ஆசிரியர்கள் போன்ற விவரங்களையும் பிற்சேர்க்கையில் கொடுத்துள்ளோம்.

இந்நூலை எழுதியவர் எமது மடத்தின் பக்தையும் இசைப் பேருரையாளருமான கலைமாமணி திருமதி கௌரி ராஜகோபால் எம்.ஏ., அவர்கள். வண்ணப்படங்களை வரைந்தவர் திரு ஆர். வெங்கட். எமது மடத்தின் துறவியாகிய சுவாமி அபவர்கானந்தர் அச்சுப்பிரதிகளை சரிபார்த்ததுடன் சிலப் பகுதிகளையும் இணைத்தார். மடத்து பக்தர்களும் அதற்கு உதவினர். இந்நூலுக்காகப் பணியாற்றியவர்களுக்கும் நூலைப் படிக்கும் பக்தர்களுக்கும் தெய்வத் திருமூவரின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

24 ஜூலை 2014

சுவாமி ராமகிருஷ்ணானந்தரின் 152-ஆம் ஜெயந்தி

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

அறிமுகம்

சந்தானக் குரவர்கள் துதி

அகச்சந்தானக் குரவர்

அருட்குழகன் எழிற்கயிலை முழுக்காவல்
நந்திபிரான் அடிகள்போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சனற்குமர
முனிவன்இரு திருத்தாள் போற்றி
இருட்டுமலத்தகல் சத்ய ஞானதரிசனி
சரண இணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி அருஞ்சீல
குருபரன்கால் மலர்கள் போற்றி.✣ [82]

புறச்சந்தானக் குரவர்

ஈராண்டில் சிவஞானம் பெற்றுயர்ந்த
மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க்கு அருள் புரிந்த
அருணந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர் மறைஞான
சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லை நகர் உமாபதியார்
செம்பதுமத் திருத்தாள் போற்றி.✣ [82]

இலக்கியமும் இலக்கணமும்

'இலக்கியம் கண்டு அதற்கு இலக்கணம் இயம்பலின்' என்ற நன்னூல் சூத்திரத்தின்படி, இலக்கியம் முதலில் தோன்றுகிறது.

பிற்சேர்க்கையில் பார்க்க; இனி, இந்த குறியீடு ✣ உள்ள பாடல்களின் பொருள் அடைப்புக் குறியிலுள்ள [82] பக்க எண்ணில் தரப்பட்டுள்ளது.

இதன் பின்னர், அதற்கு வரையறை செய்வதுபோல், இலக்கணம் எழுகின்றது. வாழ்வியல் முறைகளிலும், மக்கள் நடைமுறை முதலில் தோன்றுகிறது. இவற்றை வழிபடுத்தும் சட்டங்கள் பின்னர் எழுகின்றன.

தோத்திரமும் சாத்திரமும்

திருஞானசம்பந்தர் முதலான இருபத்தேழு ஆச்சாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட பன்னிரு திருமுறைகள் 'தோத்திரங்கள்' எனப்படும். மெய்கண்டார் முதலாகிய ஆச்சாரியர்கள் அருளிச் செய்த பதினான்கு சித்தாந்த நூல்கள் 'சாத்திரங்கள்' எனப்படும்.

திருமுறைகளும், மெய்கண்ட நூல்களும் சைவ சமயத்தின் இரு கண்களாய் விளங்குகின்றன. இரண்டு கண்களும் ஒரே பொருளைக் காண்பதுபோல, தோத்திரமும் சாத்திரமும் சிவபெருமானது திருவருளாகிய ஒரே பொருளைப் பற்றிக் கூறுகின்றன.

சமயக் குரவர்கள் நால்வரும் அருளிச் செய்த தேவாரத் திருப் பதிகங்களில், சைவ சித்தாந்தத் தத்துவ உண்மைகள் கூறப்பட்டுள்ளன. இவர்களது இலக்கியத்திற்கு இலக்கணமாய்த் தோன்றியவையே சைவசித்தாந்த சாத்திரங்கள். இலக்கணக் கல்வியின்றி, இலக்கியக் கல்வி தெளிவாகாது. இதுபோலவே, சாத்திர உணர்வு இல்லாமல், தோத்திர உணர்வு தெளிவு பெற இயலாது. ஆகவேதான், சமயப்பெரியோர் பலரும், மக்களிடையே சாத்திர உணர்வு உண்டாவதற்கான நூல்களைப் போதித்து வந்துள்ளனர்.

சாத்திரங்கள் விதிக்கும் வாழ்வியல் உண்மைகளை, மக்கள் நன்கு சிந்தித்து உணர வேண்டியது அவசியம். நாம் செய்யும் நல்வினை தீவினைகள், உடனுக்குடனேயோ அல்லது காலப்போக்கிலோ நமக்கு நன்மை தீமைகளை விளைவிப்பதை இவை தெளிவாக உணர்த்துகின்றன.

கடவுள் தன்மை

கடவுளைக் காண முடியுமா என்ற ஒரு கேள்வி அனைவரிடத்திலும் எழுவது இயல்பு. ஞானிகளாய் இருப்பவரும், பரம்பொருளின்

தன்மையை அனுபவித்து உணர முடியுமே அன்றி, அந்த பரம்பொருளை முழுமையாகக் காணுதல் என்பது இயலாது. 'கண்ணால் யானும் கண்டேன் காண்க; சிவன் என யானும் தேறினன் காண்க' என்று திருவண்டப் பகுதியில் கூறிய மாணிக்கவாசகர், 'கேட்டறியோம் உனைக் கண்டறிவாரை' என்று திருப்பள்ளியெழுச்சியில் கூறுகிறார். இது என்ன! ஒன்றுக்கு ஒன்று முரணாக இருக்கிறதே என்ற சந்தேகம் எழும். இரண்டிலும் உண்மை இருக்கிறது. இறைவனை மாணிக்கவாசகர் கண்ணால் கண்டது உண்மை. ஆயினும் இறைவனது இயல்பை முற்றிலும் கண்டது இல்லை என்பதும் மறுக்க முடியாத உண்மை. இதனை, சாத்திர நூலாகிய திருக்களிற்றுப்படியாரில் ஓர் உவமையின் மூலம் விளக்குகிறார் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்:

கடலில் ஒருவன் நீராடச் செல்கிறான். இவன் கடலைப் பார்க்கிறான். இதே கடற்கரையில் வாழும் மக்களும், நாள்தோறும் கடலைக் காண்கின்றனர். ஆயினும் கடலில் நீராடச் சென்றவனோ அல்லது கடற்கரையில் தினமும் வாழ்க்கை நடத்துபவர்களோ, கடலை முற்றிலும் கண்டார்களா? கடலின் ஆழம் என்ன, அதன் அகலம் என்ன, கடலில் என்னென்ன உள்ளன என்பதை துல்லியமாக அளந்து அறிந்தனரோ என்றால், 'இல்லை'.

இதே போலத்தான், கடவுளை முற்றிலும் கண்டு உணர்ந்தவர்கள் இல்லை என்று திருக்கடவூர் உய்யவந்த தேவர் திருக்களிற்றுப் பாடியாரில் கூறுகிறார்:

> கடல் அலைக்கே ஆடுதற்கு கைவந்து நின்றும்
> கடல் அளக்க வாராதால் போல – படியில்
> அருத்தி செய்த அன்பரை வந்து ஆண்டதுவும் எல்லாம்
> கருத்துக்குச் சேயனாய்க் காண். (பாடல் 90)

ஆகவே, தோத்திரங்களும் சாத்திரங்களும் நமக்கு எழக்கூடிய ஐயங்களை நீக்கி, நாம் கடவுளை ஓரளவு உணரவும் உய்யவும் ஏற்ற வழிவகைகளைக் கூறுகின்றன.

சமயக் குரவர்களும் சந்தானக் குரவர்களும்

சமயக் குரவர்கள், திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடி சமுதாயத்தைப் பண்படுத்தினார்கள். இவர்களுக்குப் பின் வந்த சந்தானக் குரவர்கள், தாம் இருந்த இடத்தில் இருந்துகொண்டே, தம்மை நாடி வரும் தகுதியானவருக்கு, உண்மைப் பொருளை உணர்த்தியுள்ளனர். தரிசு நிலத்தை நன்செய்நிலமாக்கி விளைவு கண்ட திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும், 'சமயாசாரியர்கள்' அல்லது 'சமயக் குரவர்கள்' என்றும், அவர்கள் விளைத்த பயனை ஒழுங்குபடுத்தி, வகைப்படுத்தி, முறை செய்து காப்பாற்றிய மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியர், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும், 'சந்தானாசாரியர்கள்' அல்லது 'சந்தானக் குரவர்கள்' என்றும் போற்றப்படுகின்றனர்.

சந்தானம்

சந்தானம் என்றால் 'புத்திரன்' அல்லது 'மகன்' என்று பொருள். இந்த உலகத்திலே வாழும் ஒருவனுக்கு, இந்த உடல் அல்லது ஊன் சம்பந்தமுடைய மகன், எப்படி வழிவழி வாரிசாக, பரம்பரை வாரிசாக ஆகின்றானோ, அதுபோலவே, அறிவு அல்லது ஞானசம்பந்தமுடைய புத்திரனாக, வழிவழி வாரிசாக, கயிலாயப் பரம்பரையில் சிவஞான உபதேசத்தை இடைவெளியில்லாமல் வெளிப்படுத்தி, சைவ மரபைக் காத்து வருபவரே, 'சந்தானம்' அல்லது 'ஆன்மீக வாரிசு' ஆவர். பரம்பரையாக, பல கிளைகளாக வந்தது 'நந்தி மரபு' என்றும், 'மெய்கண்ட சந்தானம்' என்றும் அழைக்கப்படும்.

அகச்சந்தானம்

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதல் தமிழகத்தில் மெய்கண்ட சந்தான பரம்பரையை இறையருள் தோற்றுவித்தது. முதலில், திருக்கயிலாயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகண்டபரமேசுவரன், சைவ சித்தாந்தத்தை, தாமாகவே நந்தியெம்பெருமானுக்கு உபதேசிக்க, அவர் சனற்குமாரருக்கு உபதேசிக்க, சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகளுக்கு உபதேசிக்க, அவர் பரஞ்சோதி மாமுனிகளுக்கு உபதேசம் செய்தருளினார். திருநந்திதேவர் முதலான


நால்வரும் கயிலாயத்தில் வாழ்பவர்கள். எனவே திருநந்திதேவர், சனற்குமாரர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதிமாமுனிகள் ஆகிய நால்வரும், 'அகச்சந்தான குரவர்' என்று அழைக்கப்பட்டனர்.

புறச்சந்தானம்

அகச்சந்தான குரவர் நால்வருள், நான்காவதாகப் போற்றப்படுபவர் பரஞ்ஜோதி மாமுனிகள் ஆவார். அவர் ஒருசமயம், திருக்கயிலாயத்திலிருந்து, விண்வழியாகத் தென்திசை நோக்கி வந்தார். அப்படி வரும்போது, திருவெண்ணெய்நல்லூரில் வசித்து வந்த சுவேதவனப் பெருமான் என்று அழைக்கப்பட்ட இரண்டு வயது குழந்தையைக் கண்டு, இந்த ஞானக் குழந்தையின் பக்குவத்தை உணர்ந்து, கீழே இறங்கி வந்து, சிவஞான உபதேசம் செய்தருளினார். 'சத்திய ஞான தரிசனிகள்' என்ற தமது ஆசாரியரின் பெயரையே, தூய தமிழில், 'மெய்கண்டார்' என்று தீட்சா நாமமாகச் சூட்டினார். மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியருக்கும், அவர் மறைஞான சம்பந்தருக்கும், அவர் உமாபதி சிவாச்சாரியருக்கும் வழி வழியாக, சிவஞானோபதேசம் செய்தருளினர். மெய்கண்டார் முதலான நால்வரும், கயிலைக்கு புறத்தே, அதாவது இந்த நில உலகத்தில் வாழ்ந்தவர்கள். எனவே, மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியர், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும், 'புறச்சந்தான குரவர்' என்று போற்றப் பெறுகின்றனர்.

சந்தானக் குரவர்களாகிய மெய்கண்டதேவர், அருணந்தி தேவர், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகிய நால்வரும் சைவசமயத்தின் கொள்கைகளை வரையறுத்து, சிவஞானபோதம் முதலாக உள்ள சாத்திர நூல்களின் மூலமாக, நமக்குத் தெளிவாக விளக்கியவராவர். இவர்களைப் பற்றிய அறிமுகத்தை இந்த நூல் தருகின்றது.

* * *



ஸ்ரீமெய்கண்டதேவர்

1 ஸ்ரீமெய்கண்டதேவர்

சிந்திப்பாம் வெண்ணெய் நகர் மெய்கண்ட தேவனடி
வந்திப்பாம் வாழ்த்தி மகிழ்வாம். ✣ [82]

அவதாரம்

சிறப்படைந்த திருமுனைப்பாடி, நடுநாடு என அழைக்கப்படுகிறது. திருநாவுக்கரசு நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் அவதாரம் செய்தது இந்த நடுநாட்டில்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய நடு நாட்டிலே, திருப்பெண்ணாகடம் என்று ஒரு சிவத்தலம்.

திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்து வந்த அச்சுதகளப்பாளர், நெடுங் காலமாக, தமக்கு புத்திரபாக்கியம் இல்லாமையால், திருத்துறையூரில் வசித்து வந்த தமது குலகுருவாகிய சகலாகமபண்டிதரிடம் தமது மனைவி யுடன் சென்றார். அவரைப் பணிவுடன் வணங்கி, 'சுவாமி! சைவசமயம் விளங்கச் செய்யும் புத்திர பாக்கியம் எனக்கு உண்டாக அருள் புரியுங்கள்' என்று வேண்டினார். உடனே குலகுருவும், தேவாரத் திருமுறையைப் பூஜித்து, அடங்கன்முறையில்* கயிறு சாத்திப் பார்த்தார். அப்போது, திரு ஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பாடல்கள் அடங்கிய இரண்டாம் திருமுறை, திருவெண்காடு திருத்தல பதிகத்தில், இரண்டாம் பாடல் கிடைத்தது—

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனவே தோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே. ✣ [82]

---

* கலைச்சொற்கள் பார்க்க; இந்த [*] குறியீடு உள்ள வார்த்தைகளுக்கு கலைச்சொற்களில் விளக்கம் காணலாம்.



இந்தப் பாடலில், 'திருவெண்காட்டு இறைவனாகிய சுவேதவனப் பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலில் அமைந்திருக்கும் முக்குள நீரில் மூழ்கி எழுந்து, இறைவனை நம்பிக்கையுடன் தினமும் வழிபட்டு வந்தால், நினைத்தவை கிடைக்கும், புத்திரபாக்கியம் நிச்சயம் ஏற்படும், சந்தேகமே வேண்டாம்' என்று குறிப்பிட்டிருந்தது. சகலாகம பண்டிதரும், தமது சீடராகிய அச்சுதகளப்பாளரை, அவர் தம் மனைவியாருடன் திருவெண்காடு சென்று, அங்கே உள்ள சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் ஆகிய முக்குளத்திலும் ஒவ்வொரு நாளும் மூழ்கி, சுவேதவனப்பெருமானைப் பேரன்போடு வழிபட்டு வந்தால், புத்திர பாக்கியம் ஏற்படும் என்று அருள் செய்தார்.

அதுபோலவே, அச்சுதகளப்பாளரும் தம் மனைவியாருடன் திருவெண்காடு வந்தார். முக்குளத்தில் நீராடி, சுவேதவனப்பெருமானை ஒரு மண்டலகாலம், அதாவது 48 நாட்கள் மிகுந்த நம்பிக்கையுடனும் பக்தி சிரத்தையுடனும் தவறாமல் வணங்கி வந்தனர்.

அச்சுதகளப்பாளரின் பக்திக்கு இரங்கிய இறைவன், ஒருநாள், இவருடைய கனவில் தோன்றினார். 'அன்பனே! விதிப்படி, உமக்கு இந்தப் பிறவியிலே புத்திரப்பேறு கிடைக்க வாய்ப்பில்லை' என்று அருளினார். இதனைக் கேட்ட அச்சுதகளப்பாளர், இறைவன் தனக்குக் கனவிலாவது காட்சி தந்தானே என்பதை நினைத்து சந்தோஷப் படுவதா அல்லது புத்திரபாக்கியமே கிடையாது என்று இறைவனே சொன்னதைக் கேட்டு துக்கப்படுவதா என்று கலங்கினார். ஆயினும், அவர் சிறிதும் மனம் தளரவில்லை. தேவாரப்பதிகத்தின் மீது தாம் வைத்திருந்த திடமான நம்பிக்கையையும் கைவிடவில்லை.



'எல்லாம் உணர்ந்த இறைவனே! ஆட்டு வித்தால் ஆரொருவர் ஆடாதாரே! தங்களது திருவுள்ளப்படியே அனைத்தும் எல்லா உலகிலும் நடைபெறுகின்றன என்பது திண்ணம். ஆயினும், ஞானப் பால் உண்ட திருஞானசம்பந்தர் வாக்கு சத்தியமானது. அது ஒருக்காலும் பொய்யாகாது என்பதை நான் நன்கு அறிவேன். ஆகவே தயவு

செய்து அடியேனுக்கு இரங்கி அருள்செய்ய வேண்டும்' என்று உள்ளம் உருகி வேண்டினார். இறைவனும் சிரித்துக்கொண்டே, 'உமது வினைப்பயனாக, இந்தப் பிறவியில் உமக்கு புத்திரப்பேறு கிடையாது. ஆனாலும், ஞானசம்பந்தனின் வார்த்தையில் மிகுந்த நம்பிக்கைக் கொண்டு, எம்மை தவறாது வழிபட்டு வந்த காரணத்தினால், தமிழ் மறையாகிய தேவார பதிகத்தின் மேன்மை விளங்கவும், சம்பந்தனின் வாக்கு சத்திய வாக்கு ஆக்குவதற்காகவும், சைவநெறி தழைத்து ஓங்கவும், ஞானசம்பந்தனைப் போலவே ஒரு புதல்வனை உமக்கு அளிக்கின்றோம்' என்று பரிபூரண ஆசி நல்கி மறைந்தருளினார்.

அளவிலாத மகிழ்ச்சி அடைந்த அச்சுதகளப்பாளர், மேலும் சில நாட்கள் அங்கு தங்கி, சுவேதவனப் பெருமானை வழிபட்டு, பிறகு தமது மனைவியாருடன் பெண்ணாகடம் திரும்பினார்.

நல் வியாதமுனி உரை செய் சூத்திரத்தின்
பாடியமோர் நான்கும் கொண்ட
சொல்வாய்மை பொருள் வாய்மை தெளிதலுற்ற
தோராது சோகமுற்றோர்
எல்லாரும் அத்துவித சுத்த நிலை
இனிது எய்திச் சோகமேயப்
பொல்லாத சமயிகளும் அதிசயிப்பப்
புவனி மிசைப் போதம் ஏற ✣ [83]

என்று சந்தானாசாரியர் புராணச் செய்யுள் மெய்கண்டார் அவதாரச் சிறப்பைப் போற்றுகின்றது. சைவ சமய முடிபுகளை எல்லாம் ஆராய்ந்து, பிற சமயங்களின் நிலையையும் அளவிட்டு, அறிதற்குக் கருவியாக 'சிவஞானபோதம்' என்னும் மெய்ஞ்ஞான நூலை அருளிச் செய்து, அதன் கருத்துக்களை, கருத்துரை வார்த்திகம் எனும் பொழிப்புரையாகவும் இயற்றியருளவே, ஞான பானுவாகிய மெய்கண்டார் திருஅவதாரம் ஏற்பட்டது என்று சந்தானாசாரியர் புராணச் செய்யுளால் விளங்குகிறது. எனவே, சித்தாந்த சைவ செந்நெறி செழித்து விளங்க, இவர்களுக்கு ஓர் அருமையான மைந்தன் பிறந்தான். அளவிலா ஆனந்தத்தில் திளைத்தனர் பெற்றோர்.



குழந்தை பிறந்தவுடன், தாங்கள் பிரார்த்தனை செய்துகொண்ட தலங்களுக்குச் சென்று மகப்பேற்று சடங்குகள் செய்து பெயரிடுவது உலக வழக்கம். எனவே பெண்ணாகடத்தில் பிறந்த குழந்தையை, திருவெண்காட்டுத் தலத்திற்கு எடுத்துச் சென்றனர். தமது பூர்வவினையை நீக்கி, சுவேதாரண்யர் அருளால் கிடைக்கப் பெற்ற தவக்குழந்தை என்பதால், இறைவனது திருநாமத்தையே, அதாவது, 'சுவேதவனப் பெருமான்' என்றே பெயரிட்டு, பாலூட்டி, தாலாட்டி, சீராட்டி பேரன்போடு வளர்த்து வந்தனர். மகப்பேற்று சடங்குகளும், பெயர் சூட்டு விழாவும், திருவெண்காட்டில் நிகழ்ந்தன என்பதை மாதவச் சிவஞான சுவாமிகளும்[1] அருளியிருக்கிறார்.

---

1 & 2. இவர்களைப் பற்றிய விவரங்கள் பக்கம்13-இல் தரப்பட்டுள்ளது.

பிறந்து இரண்டாண்டுகள் ஆன சமயத்தில் பெற்றோரை இழந்த சுவேதவனப்பெருமான், தமது தாய் மாமனால், திருவெண்ணெய் நல்லூருக்கு எடுத்துச் செல்லப்பட்டார். இவரது மாமன் பெயரை 'வெண்ணெய்நல்லூர் காங்கய பூபதி'[2] என்று சைவ எல்லப்பநாவலர் இயற்றிய திருவெண்காடு தலப்புராணம் குறிப்பிடுகிறது.

இளமையிலேயே மெய்கண்டார், சாமுசித்தராக விளங்கினார் என்று கூறப்படுகிறது. 'சாமுசித்தர்' என்றால், முன் பிறவிகளில் சரியை, கிரியை யோகங்களை முறையாகக் கடைப்பிடித்து, முன் செய்த தவத்தினால், பிறக்கும்போதே பூர்வஞானத்துடன் பிறந்து, மோட்சத்தையே விரும்பியிருக்கும் ஞானியர் ஆவர். இவர்களுக்கு சிவபெருமானே நேரில் அனுக்கிரகம் செய்திருப்பதால், வேறு ஞானநூல்கள் எதுவும் தேவைப்படுவதில்லை.

திருநந்திதேவரது சீடர் சனற்குமாரர். சனற்குமார முனிவரது சீடர் சத்திய ஞான தரிசினிகள். இவரது சீடர் பரஞ்சோதி முனிவர். இந்த பரஞ்சோதி முனிவர், ஒருசமயம் திருக்கயிலாய மலையிலிருந்து, பொதியமலைக்கு, அகத்திய மாமுனிவரைத் தரிசிப்பதற்காக ஆகாய வழியாகச் சென்று கொண்டிருந்தார். அப்படி அவர் செல்லுகின்ற விமானத்தின் நிழல், திருவெண்ணெய்நல்லூரில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு வயது சுவேதவனப்பெருமான் மீது பட்டது. என்ன அதிசயம்! இவரது விமானம் இதற்கு மேல் செல்ல முடியாமல் தடைபட்டு ஆகாசத்திலேயே நின்றுவிட்டது.

பரஞ்சோதி முனிவர், விமானம் நின்ற காரணத்தை ஞானதிருஷ்டியால் அறிந்துகொண்டார். அப்போதே இறையருளால் இந்த திருவெண்ணெய்நல்லூரில், தன்னால் ஆட்கொள்ளத்தக்க ஒருவர் இருக்கிறார் என்பதை உணர்ந்தார். உடனே அவர் கீழே இறங்கிவந்தார். அங்கே, ஞானப் பொலிவுடன் காட்சிதரும் இரண்டு வயதே ஆன ஞானக் குழந்தையாகிய சுவேதவனப்பெருமானைக் கண்டார். அந்தக் கணத்திலேயே மிகுந்த மகிழ்ச்சியுடன், இந்தப் பிள்ளைக்கு தமது அருட்பார்வையினாலேயே சட்சு தீட்சை* அளித்து, தாம் தம்முடைய



அகச்சந்தான குருபரம்பரையில் பெற்ற சிவஞானபோதத்தை ஞானோபதேசமாகச் செய்து வைத்தார். தமது குலகுருவாகிய சத்திய ஞானதரிசனிகளின் திருப்பெயரை, ஞானக்குழந்தையாகிய இரு வருக்குத் தமிழில் 'மெய்கண்டார்' என்று தீட்சாநாமமாகச் சூட்டி மறைந்தார். இந்தக்கணம் முதல் சுவேதவனப்பெருமான் என்ற பெயர் மறைந்து 'மெய்கண்ட தேவர்' என்று பெயர் நிலைத்துவிட்டது. இவ்விதம் புறச்சந்தான கயிலாயப்பரம்பரை உருவானது.

மெய்கண்டார் இளமைப் பருவம் முதலே யாரிடமும் பேசாமல் மௌனியாக வாழ்ந்து வந்தார். திருவெண்ணெய் நல்லூரில்

திருவருட்துறையில் வீற்றிருக்கும் பொல்லாப் பிள்ளையாரது திருமுன்பு வந்து அமர்ந்தார். அவரையே தமது ஞான குருவாகவும் கொண்டார். பொல்லாப்பிள்ளையார் அருளால், தமிழ் இலக்கண இலக்கியங்களையும், வடமொழி வேதாகமங்களையும் கற்றுணர்ந்தார். சைவ சமயக் கலைகளையும், தமிழ் மறை எனப் போற்றப்பெறும் திருமுறைகளையும் கற்றுத் தெளிந்தார். திருவைந்தெழுத்தை இடைவிடாது சிந்தித்து வந்தார்.

சிவஞானபோதம் எழுந்தது

இறையருளாலும், குருவருளாலும், தாம் பெற்ற சிவானுபவத்தை, தமிழகம் உய்யும் பொருட்டும், தமிழ் நாட்டின்மூலம் உலகமே உய்யும் பொருட்டும், 'சிவஞானபோதம்' என்னும் சைவசித்தாந்த சாத்திர நூலாக, வார்த்திகப் பொழிப்புயுடனும் உதாரண செய்யுட்களுடனும் தமிழில் அருளிச் செய்தார். உண்மையான ஆர்வத்துடன் தம்மை நாடி வந்த மாணவர்களுக்கு, சைவசித்தாந்தக் கருத்துக்களை உபதேசித்து வந்தார்.

பன்னிரண்டு சூத்திரங்களால் ஆன சிவஞானபோதம் என்னும் நூலின் நுண்பொருளை இவரிடம் நேரில் கேட்டுத் தெளிந்த மாணவர்கள் நாற்பத்தொன்பதின்மர் என்று கூறப்படுகிறது.

சீடரான சகலாகமபண்டிதர்

மெய்க்கண்டாரின் தந்தைக்கு குலகுருவாகத் திகழ்ந்தவர் சகலாகமபண்டிதர். பரம்பரை பரம்பரையாகக் கடைப்பிடித்து வரும் குலவழக்கப்படி, மெய்கண்டார் தம்மை தரிசிக்க வராத காரணம் என்ன, என்று பலவாறு சிந்தித்துப் பார்த்தார். ஒன்றுமே புரியவில்லை. பிறகு, தாமே புறப்பட்டு, திருவெண்ணெய்நல்லூர் வந்து சேர்ந்தார். இங்கு வந்த பிறகும், மெய்கண்டதேவர் சகலாகமபண்டிதரைப் போய் பார்க்கவில்லை. இதனால் பண்டிதர், தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து, தமது மாணவர்களில் ஒருவரை மெய்கண்டாரிடம்

அனுப்பிவைத்தார். மெய்கண்டார் அப்போது சிவஞானபோதத்தைப் பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். பண்டிதர் அனுப்பிய மாணவர், இந்த போதனையைக் கேட்டு, தாமும் அங்கேயே பாடம் கேட்டபடி இருந்துவிட்டார். திரும்பிச் செல்லவில்லை. பிறகு மற்ற மாணவர்களையும், ஒவ்வொருவராக சகலாகமபண்டிதர் அனுப்பிய போது, அவர்கள் ஒவ்வொருவரும், மெய்கண்டாரிடம் வந்து பாடம் கேட்டுக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டார்கள்.

மெய்கண்டாரிடம் தாம் அனுப்பி வைத்த மாணவர்கள் ஒருவருமே திரும்பி வராததால், மிகுந்த குழப்பமும், ஆச்சரியமும் அடைந்த சகலாகமபண்டிதர், தாமே புறப்பட்டு நேராக மெய்கண்டார் பாடம் சொல்லித்தரும் இடத்திற்கு வந்துவிட்டார். வந்தவர் சும்மாயிராமல் எப்படியாவது மெய்கண்டார் தம்மை நோக்கி எழுந்து வர வேண்டும் என்ற மமதையுடன், பாடம் சொல்லிக்கொண்டிருந்த மெய்கண்டதேவரின் முன்னால், அவர் கண்ணில் படுமாறு உலாவிக்கொண்டிருந்தார்.

இந்த சமயத்தில், மெய்கண்டதேவர், தம் மாணவர்களுக்கு ஆணவத்தைப்பற்றி பாடம் போதித்துக் கொண்டிருந்தார். இதை கேட்டுக் கொண்டிருந்த சகலாகமபண்டிதர், அவர் முன்பு வேக வேகமாக வந்தார். 'ஆமாம்! நீ பாடம் சொல்லிக்கொடுக்கின்றாயே! இந்த ஆணவத்தின் இயல்பு என்ன என்பதை சொல் பார்க்கலாம்' என்று கம்பீரமாகக் கேட்டார். இதற்குப் பதிலாக, வாய் திறந்து எதுவும் சொல்லாத மெய்கண்டதேவர், கேள்வி எழுப்பிய சகலாகமபண்டிதரை, மிகவும் சாந்தமாக, தமது அருட்பார்வையால் நோக்கி, அவரது உள்ளத்தில் உள்ள ஆணவ மலமாகிய அழுக்கனைத்தும் அடியோடு துடைத்து எடுப்பது போன்றதொரு அருள் மழையைப் பொழிந்தார்.

பிறகு, மௌனமாக, தமக்கு எதிரே நின்று கொண்டிருந்த சகலாகமபண்டிதரையே, தமது சுட்டு விரலால் சுட்டிக்காட்டினார். ஆணவத்தின் உண்மையை, மௌன தீட்சையின் மூலமாகவே உணர்ந்துகொண்ட சகலாகமபண்டிதர், அந்தக் கணத்திலேயே தமது



ஆணவம் அழிந்து தவிடுபொடியாக, மெய்கண்டாரின் திருவடிகளில் பணிந்து, அவரிடம் உபதேசம் பெற்றார்; நாற்பத்து ஒன்பது மாணவருள் உபதேசம் பெற்ற முதல் மாணாக்கராகவும் ஆனார்.

மெய்கண்டதேவர், தமது முதல் மாணவராகிய சகலாகம பண்டிதருக்கு, 'அருணந்தி சிவம்' என்று தீட்சா நாமம் செய்து வைத்தார். சைவசித்தாந்தத்தை போதித்தார். தம்மிடம் வந்த தகுதி வாய்ந்த பலருக்கும் மெய்கண்டதேவர் இவ்வாறு உபதேசம் செய்தருளினார்.

தமக்குப்பிறகு, தமது சந்தான பரம்பரை வாரிசாக, அருணந்தி தேவரை முதன்மை ஆசிரியராக நியமித்தார். மெய்க்கண்டார் அருளிச்செய்த சிவஞானபோதத்திற்கு உரைநூல் போல சிவஞான சித்தியார் என்ற அரிய நூலை அருணந்தி தேவர் நமக்குத் தந்துள்ளார்.

இப்படி சைவ சித்தாந்தக் கருத்துக்கள் உலகில் தழைக்க, சந்தானப் பரம்பரையை உருவாக்கிய மெய்கண்டதேவர், ஐப்பசி சுவாதி நன்னாளில் சிவபரிபூரண நிலையை எய்தினார்.

மெய்கண்டாரது பெற்றோர் குறித்த
ஒருசில ஆராய்ச்சி குறிப்புகள்

அச்சுதகளப்பாளர், பெண்ணாகடத்தில் ஒரு சிற்றரசர். இவர் சிவனடியாராகவும் திகழ்ந்தார். இவரது மனைவியார் மங்களாம்பிகை என்றும், இவர் கம்பரை ஆதரித்த திருவெண்ணெய்நல்லூர் சடையப்ப வள்ளலின் மகனாகிய காங்கய பூபதியின் தங்கை என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். அச்சுதகளப்பாள அரசர், சோழ மன்னன் கோப்பெருஞ்சிங்கனின் மகளை சுமார் கி.பி.1250-இல் மணம் செய்துக் கொண்டிருக்கலாம். திருமணமாகி, சுமார் பத்து ஆண்டுகள் அச்சுதகளப்பாளருக்கு, பிள்ளைப்பேறு வாய்க்காமல் இருந்தது என்றும் இதன் பிறகு குலகுருவின் அருளுரைப்படி நடந்த பிறகு, கி.பி. 1260-இல் மகப்பேறு வாய்த்திருக்க வேண்டும். இதன் பிறகு பாண்டிய அரசன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் கி.பி.1262-இல் சேந்தமங்கலம் போரில் படையெடுத்து வந்தபோது கோப்பெருஞ் சிங்கன் தோல்வி அடைந்தான். இந்தப் போரில் அச்சுதகளப்பாளர் வீரசொர்க்கம் அடைந்திருக்க வேண்டும் என்றும், உடனே அவர் மனைவியான மங்களாம்பிகை உயிர்நீத்திருக்க வேண்டும் என்றும், அப்போது இரண்டே வயதாகி இருந்த மெய்கண்டாரை, அவருடைய தாய்மாமனாகிய காங்கயபூபதி திருவெண்ணெய்நல்லூருக்கு எடுத்து சென்றிருக்க வேண்டும் என்பதும் ஆராய்ச்சியாளர் கருத்தாக உள்ளது.

மெய்கண்டாரது காலம் கி.பி. 1230-லிருந்து கி.பி. 1280 வரை என ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். உமாபதி சிவாசாரியார் இயற்றிய 'சங்கற்ப நிராகரணம்' என்ற நூல் பாயிரத்தில் அகவல் வரி 26,27

ஏழஞ்சு இருநூறு எடுத்த ஆயிரம்
வாழுநற் சகனம் மருவா நிற்ப

என்று அந்த நூல் செய்த காலத்தை சாலி வாகன சகாப்தம் 1235 என்று சொல்கிறார். அதாவது கி.பி. 1313 என்று வருகிறது. இதிலிருந்து, உமாபதி சிவாச்சாரியாருக்கும் அருணந்தி சிவாச்சாரியாருக்கும் நடுவில் வாழ்ந்த மறைஞான சம்பந்த சிவாச்சாரியார் காலத்துக்கு இடையில் சுமார் 30 வருடங்கள் என்று வைத்துக்கொண்டாலும், மெய்கண்டார் காலம் ஏறக்குறைய கி.பி. 1230 முதல் கி.பி 1280 வரையிலான காலம் என்று கருதப்படுகிறது. கி.பி. 1232-இல் மெய்கண்டதேவர் வாழ்ந்தார் என்பதனை திருவண்ணாமலை அருணாசலேசுவரர் திருக்கோயிலின் முதற் கற்றூண் வடபுறச் சுவரில் சோழ அரசனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று உறுதிப்படுத்துகின்றதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எனவே மெய்கண்ட நூல்கள் எல்லாம் 13-ஆம் நூற்றாண்டிலும் 14-ஆம் நூற்றாண்டிலும் தோன்றியவையாகும் என அறியப்படுகிறது.

மெய்கண்டதேவர் திருக்கோயில், திருவெண்ணெய்நல்லூரில், திருஅருட்டுறை ஆலயத்திற்கு மேற்பால் உள்ளது.

பொய்கண்டார் காணாப் புனிதம் எனும் அத்வைத
மெய்கண்ட நாதன் அருள் மேவுநாள் எந்நாளோ

என்று இவரது பெருமையை தாயுமானவ சுவாமிகள் தமது 'குருமரபின் வணக்கம்' என்ற பாடலில் போற்றியுள்ளார். இது பிற்சேர்க்கையில் தரப்பட்டுள்ளது.

காங்கய பூபதி மற்றும் மாதவசிவஞான சுவாமிகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

காங்கய பூபதி—ஸ்ரீமெய்கண்டாரின் அன்னையார் அரச குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்திருக்க வேண்டும் என்று ஓர் ஆராய்ச்சி நூல்

குறிப்பிடுகின்றது. இன்றைக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன்பு இருந்த சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய திருவெண்காடு தலப்புராணத்தில் மெய்கண்ட தேவரின் அம்மான் (தாய்வழி) பெயரை 'வெண்ணெய்நல்லூர் காங்கய பூபதி' என்று குறிப்பிட்டிருக்கிறார். 'பூபதி' என்று குறிப்பிட்டதனால் அவர் அரச வம்சத்தைச் சார்ந்தவர் என்றோ அல்லது அதற்குச் சமானமான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றோ தெரியவருகின்றது. இது குறித்த கல்வெட்டு ஒன்று திருவண்ணாமலை கோயிலில் உள்ளது.

மாதவசிவஞான சுவாமிகள்—பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருநெல்வேலி மாவட்டத்தில் விக்கிரமசிங்கபுரத்தில் தோன்றியவர். இவரது பிள்ளைத் திருநாமம் முக்களாலிங்கர் என்பதாகும். இளமையிலேயே திருவாவடுதுறை ஆதீன இளவரசு சுவாமிகள் வேலப்ப தேசிகரால் தீட்சை பெற்று 'சிவஞானம்' என்னும் தீட்சா நாமம் பெற்றார். இவர் எழுதியருளிய 28 நூல்களுள் தலையானவை, ஸ்ரீமெய்கண்ட தேவ நாயனாரின் 'சிவஞானபோதத்திற்கு' வகுத்துத் தந்த 'சிற்றுரை', 'பேருரை' ஆகிய இரண்டும் ஆகும்.

'மெய்கண்டதேவர் திருவடி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்.'

ஸ்ரீமெய்கண்டார் துதி

பண்டை மறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவர் இதய கமல முகைகள் எல்லாம்
கண் திறப்பக் காசினிமேல் வந்த அருட் கதிரோன்
விண்ட மலர்ப் பொழில் புடை சூழ் வெண்ணை மேவும்
மெய்கண்டதேவன் மிகு சைவ நாதன்
புண்டரிக மலர் தாழச் சிரத்தே வாழும்
பொற்பாதம் எப்போதும் போற்றல் செய்வாம். ✢ [83]



ஸ்ரீஅருணந்தி சிவம்

2 ஸ்ரீ அருணந்தி சிவம்

உண்டு சிவன் என்றும் உயிர் உள்ளும் என்று
உணர்ந்த பண்டிதர் பொற்பாத நினைப்பாம். [83]

திருஅவதாரம்

சந்தானக்குரவர் நால்வரில் இரண்டாவதாக வருபவர் ஸ்ரீஅருணந்தி சிவாசாரியர் ஆவார். புண்ணிய பூமியாகிய தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய நடுநாட்டில், பெண்ணையாற்றின் வடகரையில் உள்ள திருத்துறையூர் என்ற தலத்தில், ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன் ஆதி சைவ மரபிலே இவர் தோன்றினார். இந்தத் தலத்திலேதான், சைவசமயாசாரியர் நால்வரில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள், இறைவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டப் பிறகு, தமக்குத் தவநெறியைத் தந்தருள வேண்டும் என்று இறைவனிடம் வேண்டிப் பெற்றார்.

அருணந்தி சிவாசாரியர், முப்போதும் இறைவனது திருமேனி தீண்டும் பெருவாழ்வு பெற்றவர். சந்தான பரம்பரையாக, ஆசாரியத் தன்மை எய்தும் சிறப்பு வாய்ந்த ஆதிசைவ மரபிலே, சைவ சமயம் தழைத்தோங்குமாறு அவதாரம் செய்தவர்.

சகலாகம பண்டிதர்

இவரது இயற்பெயர் சதாசிவசிவாச்சாரியர். மேலும், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முதலில் பெண் எடுத்த சடங்கவி சிவாசாரியர் மரபில்



இருபத்தோராம் தலைமுறையினர் இவர் என்றும் கூறப்படுகிறது. இவர் உரிய பருவத்திலே, உபநயனம் செய்விக்கப் பெற்று, சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை, ஆசாரிய அபிடேகங்கள் செய்யப்பெற்றார். வேதம், ஆகமம் முதலிய சாத்திரங்களை ஓதி மெய்யறிவுடையவராகத் திகழ்ந்ததால், 'சகலாகம பண்டிதர்' என்ற சிறப்புப் பெயர் இவருக்கு ஏற்பட்டது. இந்த சகலாமபண்டிதர், வேளாளர் மரபினருக்கு, வழிவழியாக குலகுருவாய் விளங்கி வந்தார்.

மெய்கண்டதேவர் அவதாரத்திற்கு
மூலகாரணமாக விளங்கியவர்

மெய்கண்டதேவர் அவதாரத்திற்கே இவர்தான் மூலகாரணமாக, வழிகாட்டியாக இருந்தார். திருப்பெண்ணாகடத்தில் வசித்துவந்த அச்சுதகளப்பாளர், நீண்ட காலமாக தமக்கு புத்திரபாக்கியம் ஏற்படாத

காரணத்தினால், தமது குலகுருவாகிய சகலாகம பண்டிதரை நோக்கி வந்தார். மகப்பேறு வேண்டி, உரிய வழியை தமக்கு உபதேசித்தருளுமாறு இவரிடம் கேட்டார். அப்போது, சகலாகம பண்டிதர், மரபுப்படி, தமிழ் வேதமாகிய தேவாரத் திருமுறையைப் பூசித்து, கயிறு சாத்திப் பார்க்க, 'பேயடையா பிரிவெய்தும்' என்று பாடல் வந்தது.

இந்தப் பாடலுக்கு உரிய தலம் திருவெண்காடு. திருவெண்காட்டு இறைவனை வழிபட்டால் சந்ததி ஏற்படும் என்று சகலாமபண்டிதர் உரைத்தார். இவரது கட்டளைப்படியே வழிபட்ட அச்சுதகளப்பாளருக்கு மகனாகத் தோன்றியவர் தான் மெய்கண்டார்.

சகலாகம பண்டிதர் திருவெண்ணெய்நல்லூர் புறப்படுதல்

ஈராண்டிலேயே சிவஞானம் பெற்றவர் மெய்கண்டார் என்பதை அவரது வரலாற்றில் கண்டோம். அவர் தமது குலவழக்கப்படி, குலகுருவாகிய தம்மைக் காண வரவில்லையே என்ற வருத்தம் சகலாகம பண்டிதருக்கு முதலில் தோன்றியது. அதுமட்டுமல்ல, மெய்கண்டார் இந்த சின்னஞ்சிறு வயதிலேயே, சைவ சித்தாந்த பாடம் சொல்லிக்கொடுக்கிறார் என்பதையும் அறிந்தார். இதனை அறிந்த உடனேயே, அவரிடம் தமக்கு ஏற்பட்டிருந்த வருத்தம், ஆத்திரமாக மாறி, அகங்காரமாகி, அசூயையாக உருவெடுத்தது.

இரண்டு வயது குழந்தை சைவசித்தாந்த பாடம் சொல்லிக் கொடுக்கிறதாமே! அது எப்படி சாத்தியம்? இதனை நேரில் சென்று காண வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டது. உடனே சகலாகம பண்டிதர், திருவெண்ணெய்நல்லூருக்கு, பல்லக்கில் ஏறி, விருதுகள் முழுங்கப் புறப்பட்டார். திருவெண்ணெய்நல்லூரில் வாழும் மக்கள், வீடுதோறும் பூரணகும்பம் எடுத்து, மங்கல வாத்தியங்கள் முழங்க ஆசாரியரை வரவேற்றனர்.

ஊரே அமர்க்களப்பட்ட நிலையில், மெய்கண்டார் மட்டும் தனது நிலையிலிருந்து சிறிதும் மாறாமல், எந்த வித பதைப்பும் இன்றி, தாம் இருந்த இடத்தை விட்டுக்கூட அசையாமல் அமர்ந்திருந்தார். தமக்கு எதிரில்

அமர்ந்திருந்த மாணவர்களுக்கு, சித்தாந்த ஞானத்தை உபதேசித்தவாறே இருந்தார். தமக்கு ஏற்ற ஓர் இடத்தில் வந்து தங்கினார் சகலாமகபண்டிதர். மெய்கண்டதேவரிடம் சென்று, 'குலகுரு அழைக்கிறார்' என்று சொல்லி, அவரை, தாம் இருக்கும் இடத்திற்கு உடனே அழைத்து வருமாறு தமது சீடர்களை ஒவ்வொருவராக அவரிடம் அனுப்பி வைத்தார். சிறிது நேரம் ஆயிற்று. சென்றவர் யாருமே திரும்பவில்லை! உண்மை என்னவென்றால், சகலாகம பண்டிதரால் அனுப்பி வைக்கப்பட்ட சீடர்கள் ஒவ்வொருவரும், மெய்கண்டார் அருளிச்செய்து கொண்டிருந்த சாத்திர உபதேசத்தினால் கட்டுண்டு, தம்மை மறந்த நிலையில், அதனைக் கேட்டுக்கொண்டு, அங்கேயே தங்கிவிட்டனர். ஒவ்வொருவராக தம்மிடமிருந்து சென்ற சீடர்கள் அனைவரும் அங்கேயே தங்கிவிட, இனிமேலும் அனுப்புவதற்கு யாருமே இல்லை என்ற நிலை ஏற்பட்டது.

கடைசியாக, ஆர்வம் தாங்க முடியாமல் தாமே புறப்பட்டு விட்டார் சகலாகம பண்டிதர். சைவசித்தாந்த சாத்திர உபதேசம் செய்துகொண்டிருந்த மெய்கண்டார் முன் விரைந்து வந்து, அவர் காணுமாறு கம்பீர மிடுக்குடன் நின்றார். அப்பொழுதும் மெய்கண்டார் எழுந்திருந்து அவரை வரவேற்கவில்லை. இவர் வந்த தருணத்தில், சிறிதும் சலனமின்றி, ஆணவத்தின் தன்மையைப் பற்றி விரிவான விளக்கம் தந்து உபதேசம் செய்துகொண்டிருந்தார்.

ஆணவம் அழிந்தது

'குல வழக்கப்படி, தம்மைப் பார்க்க தம் இருப்பிடமும் வரவில்லை. சரி அது போனால் போகட்டும் என்று இவன் இருக்கும் இடத்திற்கே தேடி வந்தேன். இவனைத் தேடி வந்த என்னை ஊரே எதிர்கொண்டு வரவேற்ற போதிலும், இவன் மட்டும் என்னை எதிர்கொண்டு வரவேற்கவில்லை. தங்கியிருக்கும் இடத்திற்கு, எம்மை நாடியும் வரவில்லை. எத்தனை அலட்சியம்! இருக்கட்டும்! அனைத்தையும் சகித்துக் கொண்டு, இறுதியாக இதோ இவன் இருக்கும் இடத்திற்கு நானே வந்தேன். இங்கு கண் எதிரில் நேராக வந்து நிற்கிறேன். இப்போதும் கூட என்னை ஒரு சிறிதும் மதிக்கவில்லை! எழுந்திருக்கவும் இல்லை, வந்து வரவேற்கவும்

இல்லை' என்ற ஆத்திரம் சகலாகம பண்டிதரின் தலைக்கு ஏறியது. ஆணவ மேலீட்டினால், திடீரென்று மெய்கண்டாரை நோக்கி, 'இப்போது சொல்லிக்கொண்டிருக்கிறாயே, அந்த ஆணவத்தின் சொரூபம் எது?' என்று இடிபோன்று முழங்கினார்.

இதனை சற்றும் எதிர்பார்க்காத மற்ற சீடர்கள் திகைத்துப் போயினர். என்ன நடக்கப் போகிறதோ என்று குழப்பத்தில் ஆழ்ந்தனர். ஆயினும் பூரண ஞானம் கைவரப்பெற்ற மெய்கண்டார், சிறிதுகூட பதட்டம் அடையவில்லை. சிவஞானத்தில் மூழ்கியவாறே, சகலாகமபண்டிதரை கண்கள் குளிர இன்முகத்தோடு நிமிர்ந்து பார்த்தார். அதே சமயம் அவரது விரல் பண்டிதரையே சுட்டிக்காட்டியது. ஆணவத்தின் சொரூபமாக, மமதையின் வடிவமாக, அகந்தையின் தோற்றமாக அவரையே வடிவெடுத்துக் காட்டியது! அந்தக் கணத்திலேயே, சகலாகம பண்டிதரின் ஆணவம் அழிந்து தவிடுபொடியாகியது! சிவஞானக் கதிரவனுடைய அருள் ஒளி நோக்கம் பட்ட உடனேயே, ஆணவாதி மல இருள் அகன்றது. அவரது உள்ளத்திலிருந்த அஞ்ஞான இருள் நீங்கியது. அங்கே மெய்ஞான ஒளி எழுந்து சுடர் விட்டுப்பிரகாசித்தது! உண்மையை உணர்ந்துகொண்டார் அவர்.

'ஐயனே! என்னை மன்னித்து அருள்வீராக! என்னையும் தங்களது சீடனாக தயவு செய்து ஏற்றருள வேண்டும். எமக்கும் சிவஞானத்தை தந்தருள வேண்டும்' என்று சகலாகம பண்டிதர் அகம் குழைந்து, அவரது திருவடித்தாமரையில் விழுந்து பணிந்து எழுந்து நின்றார்.

ஆணவம் அகன்ற சகலாகமபண்டிதரின் பக்குவ நிலையை அக்கணமே உணர்ந்த மெய்கண்டார், பார்த்த பார்வையிலே சட்சு தீட்சை அளித்து, திருவடி தீட்சையும் தந்தருளினார். உடனடியாக மெய்யுணர்வு அளித்தார். அதுமட்டுமல்ல, 'அருணந்தி' என்ற தீட்சா நாமமும் அருளிச் செய்தார். சிவஞானபோதத்தின் செம்பொருளை விரிவாக உபதேசித்து அருளினார். வரும்போது குருவாக வந்தவர், வந்த இடத்தில் ஞானதீட்சை பெற்று நாற்பத்தொன்பது மாணவர்களுள் முதல் சீடராகும் தகுதியும் பெற்றார்!

1. சிவஞான சித்தியார்

மெய்கண்டாரால் மெய்ஞ்ஞான அறிவு கைவரப்பெற்ற அருணந்தி சிவாசாரியர் இரண்டு நூல்களை இயற்றி உள்ளார். ஒன்று 'சிவஞான சித்தியார்' என்பதாகும். மெய்கண்ட சாத்திர நூல்கள் பதினான்கு எனப்படும். அவற்றில் சிவஞானபோதத்திற்கு விரிவுரையாக அமைந்த நூல் சிவஞான சித்தியார் ஆகும். இது புறச்சமயம் மறுக்கும் பரபக்கமும், அகச்சமயம் விளக்கும் சுபக்கமும் உடையதாக திகழ்கின்றது. சிவஞான களஞ்சியமாகத் திகழ்கின்றது.

இந்த நூலை தாயுமானவர் பாராட்டுகின்றார்.

> பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தம் ஆக உண்மை
> சாதித்தார் பொன் அடியைத் தாள் பணிவது எந்நாளோ. ✣ [79]

மேலும்,


> பார் விரித்த நூல் எல்லாம் பார்த்தறியிற் சித்தியே
> ஓர் விருத்தப் பாதி போதும் ✣ [84]

என்று தருமையாதீன குருமுதல்வராகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரியர் கூறுகின்றார்.

2. இருபா இருபஃது

அருணந்தி சிவாசாரியார் எழுதிய இரண்டாவது நூல் 'இருபா இருபஃது' என்பதாகும். இதுவும் சாத்திர நூல்களுள் ஒன்றாகும். இந்த நூலில், ஒவ்வொருவருக்கும் எழக்கூடிய சந்தேகத்தை தமது கேள்வியாக எழுப்புகின்றார். இதற்கு குரு தரும் விளக்கத்தை தாமே பதிலாகவும் தருகின்றார். இப்படி சித்தாந்த உண்மையை நமக்கு விளக்குகின்றார்.

இப்படி மாபெரும் அருமையான இரண்டு சித்தாந்த நூல்களை அருளிய அருணந்தி சிவாசாரியார், தமது மாணவர்களுள் சிறந்தவராகிய, மறைஞான சம்பந்தர் என்பவருக்கு ஞானோபதேசம் அருளி, தமக்குப் பின் சந்தான வாரிசாக நியமித்தார்.



இறுதியில் புரட்டாசி மாதம் பூர நன்னாளிலே, அகண்ட பரிபூரண சச்சிதானந்த நிலையை எய்தினார் அருணந்தி சிவாச்சாரியர். இவரது திருக் கோயில் திருத்துறையூர் தலத்தில் உள்ளது. இவரது காலம் கி.பி. பதி மூன்றாம் நூற்றாண்டு என்று சொல்லப்படுகிறது.

அருணந்தியார் திருவடி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்.

ஸ்ரீஅருணந்தியார் துதி

முப்பொருளின் ஈரியல்பும் ஓரியல்பாய்
நுவலாது முறை வெவ்வேறாய்ச்
செப்பு சிவாகமங்களின்றதன் பொருளொருமை
பெறவுணர்த்து திறமுன்னூலை
ஒப்பவிரி யாப்பதனாற் சித்தியெனும்
வழிநூலாய் ஒளிர் பிற்காலத்(து)
இப்புவியோர் தெளிந்துய்ய மொழிந்த
அருள்நந்திசிவன் இணைத்தாள் போற்றி. ✣ [84]




ஸ்ரீமறைஞான சம்பந்தர்

3 ஸ்ரீ மறைஞான சம்பந்தர்

இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து-நறவாருந்
தாருலாவும் புயத்துச் சம்பந்த நாதன் என்று
பேரிலா நாதன் ஒரு பேர் புனைந்து-பாரோர் தம்
உண்டி உறக்கம் பயம் இன்பம் ஒத்தொழுகிக்
கொண்டு மகிழ்ந்த குணம் போற்றி.

என்று தமது ஆசாரியனாகிய மறைஞானசம்பந்தர் பற்றி, கொற்றவன்குடி ஸ்ரீஉமாபதிதேவ நாயனார், தமது 'போற்றிப் பஃறொடை' என்ற நூலில் சிவபெருமானாகவே போற்றி வழிபடுகின்றார். 'பிறவா முதல்வனாகிய சிவபெருமான், ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றும் இல்லாத, தனக்கென ஒரு பேர் இல்லாத நாதன், இப்பூவுலகில் ஆசாரிய மூர்த்தியாகப் பிறந்து, தேன் நிறைந்த பூமாலையை தமது தோள்களில் தாங்கி, மறைஞான சம்பந்தன் என்ற திருநாமத்துடன் வந்தான். தம்முடைய இயற்கைத் தன்மையை மறைத்துக்கொண்டு மானிடரைப் போல் உண்டி, உறக்கம், பயம், இன்பம் ஆகியவைக் கொண்டு எம்மை ஆட்கொள்ள வந்த இந்த அதிசய குணத்தைப் போற்றுகிறேன்' என்று இறைவனே தமக்காக, மறைஞான சம்பந்தராக வந்தார் என்பதை அருளிச் செய்கின்றார். சைவப் பேருலகத்தில், சந்தானாசாரியர்களுள் மூன்றாவதாக வருபவர் மறைஞான சம்பந்தர்.



அவதாரம்

சிறப்பு வாய்ந்த நடுநாட்டில் உள்ளது திருப்பெண்ணாகடம் என்னும் திருத்தலம். இத்தலத்தில் அந்தணர் குலத்தில், பராசர முனிவர் கோத்திரத்தில் தோன்றியவர் மறைஞானசம்பந்த சிவாசாரியார். இவர் சாமவேதிகள் குலத்தைச் சேர்ந்தவர். மறைகளை நன்கு ஓதி உணர்ந்தவர். இவர் அருணந்தி சிவாசாரியாரை குருவாக அடைந்து, அவரிடம் சைவசித்தாந்தம் கைவரப்பெற்றார். 'அடிசேர் ஞானம்'* பெற்றவராக தில்லை நகரை அடைந்தார். அங்கு காலம் தவறாமல் சிவபூஜை செய்து கொண்டு வாழ்ந்து வந்தார்.

சம்பந்தர் மூவர்

சைவசமயத்திலே, நம் பந்தம் தீர்க்கவந்த சம்பந்தர் மூவர் எனலாம். கி.பி.7-ஆம் நூற்றாண்டில் அவதரித்து ஞான ஒளி பரப்பி சைவசமயாசாரியராகத் திகழ்ந்தவர் 'திருஞானசம்பந்தர்'.

கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் சந்தானாசாரியர் நால்வருள் மூன்றாமவராகத் திகழ்ந்து, மறைகளெல்லாம் நன்கு ஓதி உணர்ந்திருந்தவர் 'மறைஞானசம்பந்தர்'. மறைஞான சம்பந்தரின் சீடர் உமாபதி சிவாசாரியாருடைய வழிவழியாக வந்த திருக்கயிலாய ஞான பரம்பரையில், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் விளங்கியவர் தருமையாதீனத்தை தோற்றுவித்த குரு முதல்வர் 'குருஞானசம்பந்தர்'.


உமாபதி சிவாசாரியரின் அக இருளைப் போக்கியது

அருணந்தி சிவாசாரியரிடம் சிவஞான உபதேசம் பெற்ற மறைஞான சம்பந்தர், சிவனடியே சிந்தித்து இருந்து, சிவயோகம் நிஷ்டையில் பலகாலம் இருந்தார். இவரது பெருமையை உணர்ந்த சைவ அடியவர்கள் பலர், இவரிடம் வந்து தொண்டு புரிந்து இவரது பெருங்கருணைக்கு பாத்திரர்களாக இருந்து வந்தனர்.

பல்வேறு சிவத்தலங்களுக்கும் சென்று நிஷ்டையில் இருந்து, ஆங்காங்கு சிவனடியார்கள் பலருக்கும் தீட்சை செய்து வைத்தார் மறைஞானசம்பந்தர். இறுதியில் தில்லை சிதம்பரத்தை அடைந்த, அங்கேயே தங்கியிருந்து நிஷ்டையில் இருந்தார்.

தில்லையில் உள்ள அந்தணர்கள் மூவாயிரவர். இவர்களது பெருமை அளவிடற்கரியது. 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று இறைவனே சுந்தரமூர்த்தி நாயனாருக்கு திருத்தொண்டத் தொகை பாட அடியெடுத்துக் கொடுக்கிறார். அத்தகைய அந்தணர்கள் மூவாயிரவர்களுள், உமாபதி சிவாசாரியர் என்பவரும் ஒருவர். இவர் வேத சிவாகமங்களை எல்லாம் கற்றுத் தெளிந்தவர். ஒரு நாள் கோயில் வழிபாட்டை முடித்துக்கொண்டு, தில்லைவாழ் அந்தணர்களுக்கே உரித்தான சிறப்பு விருதுகளுடன் கிளம்பினார். ஒரு சிவிகையில் ஏறிக்கொண்டு தமது வீட்டை நோக்கிப் புறப்பட்டார்.

உமாபதி சிவம் போகும் வழியிலே, சிவஞானியாகிய மறைஞானசம்பந்தர் என்றும்போல சிவகங்கையில் நீராடித் தில்லை நடராஜப்பெருமானை வழிபட்டு, பகற்கால பூஜையைத் தரிசித்து




வணங்கிவிட்டு, வெளியே வந்து, ஒரு புறத்தில் அமர்ந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் உச்சிக்கால பூஜை முடித்து, அந்தகாலத்தில் கடைபிடித்து வந்த மரபுப்படி, தீவட்டிப் பரிவாரங்களுடன், விருதுகள் முழங்க ஆடம்பரமாக பல்லக்கில் ஏறிச்செல்லும் உமாபதி சிவத்தைக் கண்டார். இவருடைய பரிபக்குவ நிலையை அறிந்தார் மறைஞானசம்பந்தர். இவருக்கு அருள் செய்ய வேண்டும் என்று உள்ளத்தில் நினைத்தார். உடனே, அவரது காதில் விழுமாறு தமது அருகில் இருக்கும் சீடர்களை நோக்கி, 'பட்ட கட்டையில் பகல் குருடு ஏகுதல் பாரீர்' என்று உரக்க உரைத்தார்.

இந்த வார்த்தையைக் கேட்டாரோ இல்லையோ, உடனடியாக தமது பல்லக்கிலிருந்து கீழே குதித்து இறங்கினார் உமாபதி சிவம். நேராக மறைஞானசம்பந்தரை நோக்கி ஓடி வந்தார். அவரது திருவடித்தாமரைகளில் அடியற்ற மரம் போல் வீழ்ந்து வணங்கினார். பிறகு மெள்ள எழுந்தார். 'சுவாமி, தாங்கள் சொன்ன வாக்கியத்தின் பொருள் யாது? அடியேன் இதனை அறிந்துகொள்ளலாமா?' என்று மிகுந்த பணிவன்புடன் கேட்டார்.

'பட்ட கட்டை' என்றால் சிவிகை. 'பகல் குருடு' என்றால் பகலில் இயற்கையான ஒளி இருக்கையிலே, இருட்டில் வழி அறியச் செல்வது போன்று, விருதுக்கு வேண்டி தீவட்டி வெளிச்சத்தை உடன் எடுத்துச் சென்றது. அதாவது, சூரிய ஒளி இருக்கும்போது கையில் விளக்கு தேவையில்லை. ஆயினும், தன்னுடைய உயர்ந்த நிலையைக் காட்டுவதற்காக, ஆடம்பர விளம்பரத்திற்காக, அருகில் உள்ள தமது வீட்டிற்கு ஒரு பல்லக்கில் ஏறிச் சென்றது மட்டும் அல்லாது, விருதுகள் முழங்க, தீவட்டியும் ஏந்திச் செல்வது, ஆணவத்தின் பிரதிபலிப்பு. இது வெளிப்படையான பொருள். அது மட்டும் அல்லாது குறிப்பினால் அற்புதமான ஒரு தத்துவத்தையும் வெளிப்படுத்துகிறார். 'பட்ட கட்டை' என்பது இன்பம் இல்லாத உலகம். துன்பமே நிறைந்த பூமி. 'பகல் குருடு' என்றால் கல்வி கற்றும் இதனை அறியாமல் இருப்பது. உலக மாயையுள் சிக்கித் தவிப்பது. மிகுந்த அறிவாளியாக, அனைத்தும் கற்றறிந்தவராக இருந்தும், இந்த உலகத்தின் மாயையில் சிக்கி, உண்மையை அறிந்து உணராத உமாபதி சிவத்தின் நிலையை, அஞ்ஞான இருளின் தன்மையை, மெய்ஞான ஒளியின் உண்மையை இவ்வாறு எடுத்துரைத்தார்.

மறைஞானசம்பந்தரின் இந்த அருள் வாக்கைக் கேட்ட உடனேயே முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் பயனாக, உமாபதி சிவத்தின் உள்ளத்தில் படிந்திருந்த அக இருள் விலகியது. உடனடியாக இவரையே தமது ஆசானாக ஏற்றுக்கொண்டார். தமது புற இருளை நீக்கி ஞான தீபம் ஏற்றிவைக்குமாறு வேண்டினார். சிவஞானபேறு ஒன்றையே விரும்பி, இடைவிடாமல் ஆசாரியத் தொண்டு செய்து வந்தார்.



சீடரின் பக்குவம் காண்பது

ஒருநாள் மறைஞானசம்பந்தர் தமது சீடனது பக்குவத்தை அறிய விரும்பினார். எனவே, செங்குந்தர் வாழும் தெரு வழியாக வேகமாக நடந்துச் செல்லத் தொடங்கினார். இவரை விடாமல் பின்தொடர்ந்து வந்த உமாபதி சிவமும் விரைந்துச் சென்றார். தம்மை பின்தொடர்ந்து உமாபதி சிவமும் வேகமாக வருவதை அறிந்தார் ஆசாரியர். மேலும் இவரை சோதிக்க விரும்பினார் மறைஞானசம்பந்தர். தாம் மிகவும் பசியால் வருந்துபவர் போல் நடித்தார். தாங்க முடியாத தமது பசியைத் தணித்துக் கொள்ள முயல்பவர்போல அங்கு நெசவாளிகள், பாவில்

செலுத்திய கூழினை தமக்கு வார்க்குமாறு அங்கிருந்தவரிடம் கேட்டார். முதலில் தயங்கினாலும், இவர் பசியால் வாடுவதை அறிந்து, மேலும் தாமதியாது, இவரது கரங்களில் கூழை அன்போடு வார்த்தனர். பாவில் செலுத்திய கூழை, தமது இரு கைகளிலும் ஏந்திய மறைஞானசம்பந்தர், 'சிவப்பிரசாதம் சிவப்பிரசாதம்' என்று சொல்லிக்கொண்டே, ஆனந்தமாக உண்டார்.

குருவின் பின்னாலேயே நடந்து வந்துகொண்டிருந்த உமாபதி சிவம், தமது குருவின் செயலைக் கண்டார். உடனே தாமும் அவர் அருகிலேயே நின்று விட்டார். அது மட்டுமா? கூழைக் கையில் வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் தமது ஆசாரியரின் இரு கைகளிலிருந்தும் முழங்கை வழியாக, ஒழுகிக் கொண்டிருந்த மிச்சத்தை, ஒரு சிறிதும் அருவருப்பு இன்றி, சட்டென்று பிடித்து, கீழே சிந்திவிடாமல் தமது இருகைகளினாலும் ஏந்திக்கொண்டு, 'குருப்பிரசாதம் குருப்பிரசாதம்' என்று சொல்லிக் கொண்டே மடமடவென்று பருகிவிட்டார்.

வேண்டுமென்றே தமது மாணவனின் தன்மையை இப்படி பரிசோதித்த மறைஞானசம்பந்தர், அந்தக் கணத்திலேயே இவருடைய பக்குவ நிலையை உணர்ந்துகொண்டார் ஆசாரியர். தமக்கு உகந்த சீடர் இவரே என்று தீர்மானித்து, சிவஞான தீட்சை அளித்தார். உமாபதி சிவத்திற்கு சிவஞானபோதப் பொருளை உபதேசம் செய்தருளினார் மறைஞானசம்பந்தர். சைவ சித்தாந்த கருத்துக்களை மிகத்தெளிவாக போதித்தார்.

மறைஞானசம்பந்தர் இயற்றிய நூல்களைப் பற்றிய குறிப்பு பொதுவாகக் காணப்படவில்லை. ஆயினும், பல்வேறு ஆய்வு நூல்களில் காணப்பட்ட குறிப்புகளிலிருந்து இவர் 'சதமணிக்கோவை' போன்று ஒருசில நூல்களை இயற்றியுள்ளதாக அறிய வருகிறோம். இவர் இயற்றிய நூல்கள் பலவற்றுள்ளும் சிறப்புற்று விளங்குபவை இரண்டு: ஒன்று 'சிவதருமோத்திரம்', மற்றொன்று 'சைவசமய நெறி'.

சைவசமய நெறி 725 குறட்பாக்களால் ஆனது. இதில் ஆசாரியர் இலக்கணம், சீடர் இலக்கணம், பொது இலக்கணம் என்று மூன்று பகுதிகள் உள்ளன.

முதலாவதாக வரும் ஆசாரியர் இலக்கணத்தில், ஆசாரியர் ஆவதற்கு என்னென்ன தகுதிகள் தேவை, ஆசாரியர்களுக்கே உரிய விசேஷ லட்சணங்கள் எவை, என்னென்ன வகை தீட்சைகள் உள்ளன போன்ற பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

இரண்டாவதாக வரும் சீடர் இலக்கணத்தில், எப்படி வெவ்வேறு வகையான சீடர்களுக்கு ஏற்ற வகையில், தனித்தனியான தீட்சை அளிப்பது, சிவாகம விதிப்படி சீடர் மேற்கொள்ளக்கூடிய நித்திய கருமங்கள் என்னென்ன, தமக்கு தீட்சை அளித்த ஆசாரியருக்கு எப்படி பணிவிடை செய்ய வேண்டும், சிவனடியார்களை வழிபடும் முறை என்ன போன்றவை விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

மூன்றாவது அமைப்பான பொது இலக்கணத்தில், ஓர் ஆசாரியருக்கு அவசியமான சைவ நெறி பற்று, சந்நியாசிகளும் இல்லறத்தார்களும் செய்ய வேண்டிய நித்திய கடன், பெண்களுக்கான நித்திய கர்மங்கள் செய்ய வேண்டிய விதிமுறை, சிவபூஜைக்குரிய நியமங்கள், உருத்திராக்கத்தின் (ருத்ராட்சம்) மகிமை, சிவாலயங்களில் வழிபடும் முறை போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

<u>இறைவனடியில் இரண்டறக்கலத்தல்</u>

அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந்திட்டு
அருளில் அழுந்தி இளைப்பாறி மறைந்திட்டு
அருளால் ஆனந்தத்து ஆரமுது ஊட்டி
அருளால் என் நந்தி அகம் புகுந்தானே ✢ [84]

என்ற திருமூலர் (திருமந்திரம், 1800) வாக்கின்படி, சிவனடியே சிந்தித்து, சமயத்தத்துவத்தை, சைவ சித்தாந்தத்தை தகுதியானவருக்கு உபதேசித்து வந்தார் மறைஞானசம்பந்தர். தவறாமல் சிவபூசனை புரிந்து வந்த அவர் தம்முடைய சந்தான வாரிசாக உமாபதி சிவாச்சாரியாரை நியமித்து,

தில்லைக்கு மேற்குப் பகுதியில் உள்ள திருக்களாஞ்சேரி தலத்தைச் சென்றடைந்து, ஆவணி உத்திர நன்னாளிலே சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

வாய்ந்த புகழ் மெய்கண்ட தேவருக்கு
    மாணாக்கர் அருணந்தி தேவர் தம்பால்
ஆய்ந்த பல கலை ஓதித் தமை அடைந்த
    அருள் பெருகு கொற்றவன் குடியில் வாழும்
காய்ந்த பவத்து உமாபதி தேவருக்கு ஞானம்
    கவின உரைத்து அருள் செய்யும் கடந்தை வந்த
ஏய்ந்த தவத்து உயர்ந்த மறைஞான தேவர்
    இணை மலர்த்தாள் எஞ்ஞான்றும் இறைஞ்சுவாமே ✣ [84]

—கடந்தைப் புராணம்

மறைஞானசம்பந்தர் திருவடி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்.

ஸ்ரீமறைஞானசம்பந்தர் துதி

பார்திகழ வளர்சாம வேதம் மல்கப்
    பாராசர மாமுனி மரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி எம்மை ஆண்ட
    சைவசிகாமணி மருதைத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில் புடைசூழ் மதில்மீதே மதியங்
    கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் (கடந்தைச்)
சீர்நிலவு மறைஞான சம்பந்தன் எந்தை
    திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம். ✣ [85]



ஸ்ரீஉமாபதி சிவம்

4 ஸ்ரீ உமாபதி சிவம்

குறைவுஇல்அருள் ஞானமுதல் கொற்றங்குடி அடிகள்
நறைமலர்த்தாட்கு அன்புபெற்று நாம் இருப்பது எந்நாளோ! ✣ [80]
—ஸ்ரீதாயுமானவ சுவாமி

தோற்றம்

சைவ சமய சந்தானாசாரியர்களுள் நான்காவதாக போற்றப் படுபவர் ஸ்ரீஉமாபதி சிவாசாரியர். இவர் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

சைவர்களால் 'கோயில்' என்று அழைக்கப்படும் தில்லை சிதம்பர தலத்திலே, சீர்பெருகு தில்லைவாழ் அந்தணர் குலத்தில், ஸ்ரீவத்ஸ கோத்திரத்தில், உமாபதி சிவாச்சாரியார் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் சம்பு தீட்சிதர். இவரை ஈன்றெடுத்த அருமைத் தாயார் கௌரி அம்மாள். இவர் பிறந்த பொழுது, இவர் முகத்தில், சிவஞான ஒளி திகழ்ந்த காரணத்தினால் உமாபதி சிவன் என்ற நாமத்தைச் சூட்டினர் பெற்றோர். உரிய பருவத்திலே, குலவிதிப்படி உபநயனம் செய்து வைத்தனர். வடமொழியிலும், தென் மொழியிலும் தேர்ந்தவராக இவர் இருந்தார்; சிறு வயதிலேயே சாஸ்திரங்களை அறிந்தவராக இருந்தார். இப்படி வளர்ந்து வந்த உமாபதி சிவம், திருமண பருவத்தை அடைந்தார். சிவாம்சம் பொருந்தியவராகக் கருதப்பட்ட இவருக்கு வாய்த்த மனைவியின்

பெயர் பார்வதி. அந்தணர்களுக்கு உரிய அக்னிஹோத்திரம், முதலான நியமங்களைத் தவறாது கடைப்பிடித்து வந்த இவருக்கு புத்திர சந்தானமும் ஏற்பட்டது.



உமாபதி சிவம் தமது 26-வது வயதிலே 'மஹாவிரதம்' என்ற ஒரு சிறப்பான யாகத்தைச் செய்தார். யாகத்தில் தேவர்களுக்கு ஆகுதி தருவது வழக்கம். அதுபோலவே, யாக முடிவிலே, தேவர்களுக்கான ஆகுதி தரவேண்டிய தருணம் வந்தது. அப்போது, அனைவரும் வியக்கும் வகையில், தேவேந்திரனே நேரில் வந்து காட்சியளித்து அவிசை யாசித்தான். ஆனால், இவரோ, 'யாகாக்கினியில் அவிசைத் தர வேண்டும் என்பது தான் யாகவிதி. இந்த விதியை என்னால் மாற்ற முடியாது. ஆகவே தங்களது கரத்தில் அவிசை தர இயலாது. யாக குண்டத்தில் தான் தங்களுக்குரிய அவிசை ஆகுதி செய்வேன். என்னை தயவு செய்து மன்னித்து விடுங்கள்' என்று பணிவான வணக்கங்களுடன் சொல்லிவிட்டார்.

இதனைக் கேட்ட தேவர் தலைவனாகிய இந்திரன், 'அப்பா! உம்முடைய ஆயுள் விதிப்படி இன்றுடன் முடிவடைந்துவிடுகிறது. ஆகவே, பரமேசுவரனது அருளாணையால், உம்மை பரிசோதிப்பதற்காகவே யாம் இங்கு வந்து, இவ்வாறு நடந்துகொண்டோம். இன்று முதல் உமக்கு மேலும் ஐம்பது ஆண்டுகள் இந்த உலகில் வாழுமாறு அருள் செய்கின்றோம். உலகத்திலே வைதீக தர்மங்களை உண்டாக்கி, சைவ சமயத்தின் மேன்மையை சித்தாந்த ஒளியாக வீசுமாறு செய்வாயாக!



அதற்குத் தேவையான அனைத்து சக்தியும் வழங்குகின்றோம்' என்று அருளி ஆசி கூறி மறைந்தான்.

உமாபதி சிவம், பதஞ்சலி முனிவரது அருளால், யோகாப்பியாச முறையின்* படி திருக்கயிலாயம் சென்று, ஸ்ரீகண்டபரமேசுவரனை தரிசித்து அவரது பேரருளுக்குப் பாத்திரமானார். கயிலாய மலையில் இருந்த எண்ணற்ற யோகிகளையும், முனிவர்களையும், சித்தர்களையும் வழிபட்டு அவர்களது ஆசியும் பெற்றார். இப்படி அனைவரது அருளும் பெற்று, சைவசித்தாந்தத்தை உணர்த்த வேண்டி மீண்டும் பூவுலகு திரும்பி, தில்லைப்பதியை அடைந்தார்.

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் உமாபதி சிவம். இவர் வேத சிவாகமங்களை எல்லாம் நன்கு

கற்றுத் தெளிந்து, மறைஞானசம்பந்தரால் ஆட்கொள்ளப்பட்டு, அவர் காட்டிய தவநெறியில் ஒழுகிவந்தார்.


உமாபதி சிவாசாரியர் கொற்றவன்குடி ஏகுதல்

உமாபதி சிவம், செங்குந்தர் வார்த்த கூழை, மறைஞானசம்பந்தர் கையினின்றும் வாங்கி உண்டதை தில்லை மூவாயிரவர் அறிந்தனர். இவரை குலமுறை தவறியவர் என்று பழித்தனர். தில்லை கூத்தப்பெருமானுக்கு இனிமேல் இவர் பூசனை புரிவதற்கு தகுதியற்றவர் என்று அனைவரும் ஒன்று கூடித் தீர்மானித்தனர். இதனால் உமாபதி சிவம் தில்லைக்கு அருகே இருந்த கொற்றவன்குடி என்ற தலத்திற்குச் சென்று, அங்கேயே ஒரு மடம் அமைத்துத் தங்கினார். தமது அடியார்கள் சூழ அந்தத் தலத்திலே சிவபெருமானை விதிப்படி வழிபட்டு வந்தார். தம்மை நாடிவரும் தகுதி உள்ள சீடருக்கு சைவசித்தாந்தத்தை முறைப்படி போதித்து வந்தார்.

தீண்டிய அரவம் இறந்தது

ஒருநாள் இவரது சீடன் பூசைக்கு உரிய மலர்களை பறித்துக்கொண்டிருந்தான். அந்த வழியாக ஒரு தவமுனிவர் வந்துகொண்டிருந்தார். எதிரே வந்த சீடனது முகத்தைப் பார்த்தார். அங்கே ஒரு தெய்வீக ஒளி வீசுவதைக் கண்டார். உடனே அவனை தடுத்து நிறுத்தினார் முனிவர். 'அப்பா நில்! நான் கேட்கும் கேள்விகளுக்கு நீ விடை தர வேண்டும். அப்படி பதில் சொல்லாமல் சென்றாயானால், நான் உன்னை சபித்து விடுவேன்' என்று எச்சரித்தார்.

சீடன் பார்த்தான். இந்த முனிவர் கேட்கும் கேள்விகளுக்கு விடை சொல்லிக்கொண்டிருந்தால், தமது குருநாதர் செய்யக்கூடிய பூசைக்கு மலர்கள் எடுத்துச் செல்ல காலதாமதமாகிவிடுமே என்று அஞ்சினான். தமக்கு என்ன நேர்ந்தாலும், தமது குருநாதர் தம்மைப் பார்த்துக்கொள்வார் என்ற பூரண நம்பிக்கையுடன் முனிவரது கேள்வியை நின்றுகூட கேட்க நேரமின்மையால், பதில் ஒன்றும் பேசாமல் நடந்துகொண்டே இருந்தான். முனிவருக்கு கடுஞ்சினம் ஏற்பட்டது. 'நான் சொல்லிக்கொண்டே இருக்கிறேன். நீ என்னை அலட்சியப்படுத்தி விட்டு சென்றுகொண்டே



இருக்கிறாயா?' என்று சொல்லி 'நீ யாருக்காக இப்படி நடந்துகொள்ளுகிறாயோ அந்த குருவின் முன்பாகவே, உன்னை அரவம் தீண்டி இறக்கக் கடவாய்' என்று சபித்துவிட்டார்.

இந்த சாபத்தைக் கேட்டும் சிறிதும் மனம் கலங்காத சீடன், ஆசிரமத்தை அடைந்தான். குருவை வணங்கினான். வழியில் நடந்த விஷயங்களை எல்லாம் கூறினான். கொண்டு வந்த மலர்களை பூஜைக்கு சமர்ப்பித்தான்.

சீடன் சொன்ன எல்லாவற்றையும் கேட்ட ஆசாரியர், சிரித்துக் கொண்டே, 'அவ்வளவுதானே! உன்னை அரவம் தீண்டியவுடனேயே அது இறக்கக் கடவது' என்று கூறினார். அந்தக் கணத்திலேயே, எங்கிருந்தோ

வந்த விஷநாகம், முனிவரது சாபத்தின்படியே, குருவின் முன்னாலேயே சீடனை தீண்டியது. ஆனால், ஆசாரியர் வாக்கும் பொய்க்காமல், சீடனை தீண்டிய மறுவிநாடியே, அந்த அரவம் உயிர் நீத்தது. சீடனது விஷம் உடனடியாக நீங்கியது.


இறந்து போன அரவம், ஆச்சரியப்படத்தக்க வகையில், ஒரு சந்நியாசியாக உரு மாறியது. அந்தச் சந்நியாசி, 'சுவாமி, நான் முற்பிறவியில் சைவசமயத்தை நிந்தித்து சில சாத்திரங்களைத் தொகுத்தேன். இதன் காரணமாக சுவேதாசாரியர் என்ற தவசிரேஷ்டரின் சாபத்திற்கு ஆளாகி, அரவு வடிவம் அடைந்தேன். தங்களது பெருங்கருணையால் எனது சாபம் நீங்கப் பெற்றேன். எனக்கு நல்ல கதி அடைய அருள் செய்ய வேண்டும்' என்று மனமுருகி வேண்டி நின்றான். சிவாசாரியரும் அந்த சந்நியாசிக்கு பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசம் செய்து அதையே செபித்து வருமாறு கட்டளையிட்டார். அந்த சந்நியாசியும் அது முதல் தமது ஆசாரியர் சொல்படியே சிவ பஞ்சாட்சரத்தை ஜபித்து சிறந்த சிவபக்தனாக இருந்து, இறுதியில் சிவகதி அடைந்தார்.

மற்றொரு சமயம், ஒரு மந்திரவாதியின் பொல்லாத செயலால், தடைபட இருந்த கோயில் கும்பாபிஷேகத்தை தமது சக்தியால் முறியடித்து, தடையின்றி கும்பாபிஷேகம் நடைபெற அருள் செய்தார் உமாபதி சிவாசாரியர்.

ஓர் அரசகுமாரனின் அலித்தன்மையைத் தன் சக்தியால் நீக்கி அருளினார் உமாபதியார். சிதம்பரம் கோயில் மேலக்கோபுர கற்பக விநாயகர் சன்னிதிக்கு எதிரே, ஒரு வில்வ மரத்தையும், வடக்குக் கோபுரத்திற்கு அருகில், தீய சக்தியை அடக்க வேண்டி, 'ஜடாதரர்' என்ற முனீச்வரரையும் அமைத்தார்.

கோயில் தடையை நீக்கியது

தில்லைத் தலத்தில், உமாபதி சிவாசாரியாருக்கு என்று அமைந்த பூஜைக்குரிய நாளிலே, இவரை கோயிலுள் செல்ல விடாமல் மற்றவர்கள் தடுத்து நிறுத்தினர். இதனால் மனம் வருந்திய உமாபதி சிவம், தமது



மடத்திற்குச் சென்று இதே சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். மற்ற தீட்சிதர்கள் கோயிலுக்குச் சென்று அழகிய சிற்றம்பலமுடையானது பெட்டகத்தைத் திறந்து பார்த்தனர். என்ன ஆச்சரியம்! அங்கே பெருமானது திருஉருவைக் காணாது திகைத்தனர். அப்போது ஆகாசத்தில் அசரீரி வாக்கு கேட்டது. 'நம்மைப் பூஜிக்கத் தகுந்தவன் உமாபதி. எனவே, அவனிடம் யாம் சென்று அமர்ந்தோம்' என்ற ஒலி அனைவருக்கும் கேட்டது. உடனே

அவர்கள் உமாபதிசிவம் இருக்கும் இடம் தேடி ஓடினர். தாங்கள் கேட்ட இறைவனது திருவாக்கினை உரைத்தனர். 'சுவாமி, தயவு செய்து எங்களை மன்னித்து விடுங்கள். தங்கள் பெருமையை இன்றே உணர்ந்தோம். இப்போதே தாங்கள் பூஜை செய்வதற்கு திருக்கோயிலில் எழுந்தருள வேண்டும்' என்று வேண்டினர்.

இறைவனது பெருங்கருணையை எண்ணி வியந்தார் உமாபதி சிவம். உடனடியாக அவர்களுடன் திருக்கோயிலுக்குச் சென்று தில்லைக் கூத்தனை பூஜித்து வழிபாடு ஆற்றிய பிறகு, மீண்டும் தமது திருமடமாகிய கொற்றவன்குடிக்கு வந்து தங்கிவிட்டார். இந்தத் தலம் பஞ்சபாண்டவரில் ஒருவனாகிய பார்த்தன் எனும் அர்ஜுனன் திருவேட்களநாதராகிய ஸ்ரீபாசுபதேசுவரரை நோக்கித் தவம் செய்தது. ஆதலால் 'பார்த்த வனம்' அல்லது 'கொற்றவன் குடித் தோப்பு' என வழங்கப்படுகிறது.

பெற்றான் சாம்பானுக்கும் முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்தது

திருவிடைமருதூரில் ஓர் அந்தணர் வாழ்ந்து வந்தார். இவர் வேதம் வல்லவராக இருந்தார். வைதீக அனுட்டானத்தில்* சிறந்தவராகத் திகழ்ந்தார். இறைவனிடத்தில் அளவிலாத பக்தி உடையவராக இருந்தார். இப்படி நற்குணங்கள் படைத்தவராக இருப்பினும், இவர் செய்த வினையின் காரணமாக தமது அடுத்தப் பிறவியில் 'கௌரிப் பற்று' அல்லது தற்போது 'கவரப்பட்டு' என வழங்கப்படும் திருத்தலத்திலே, நீசர் குலத்தில் வந்து பிறந்தார். 'சூதன்' என்றும் 'பெற்றான் சாம்பான்' என்றும் அழைக்கப்பட்டார். முற்பிறவியின் காரணமாக, உள்ளத்தில் பக்குவம் பெற்ற ஞானியாகத் திகழ்ந்தார்.

திருத்தொண்டர் புராணத்தில் வரும் மூன்று நாயன்மார்கள் இவரைப் போலவே, பிறப்பால் தாழ்ந்திருப்பினும் சிவபக்தியின் சிறப்பால் உயர்ந்து, வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, வானோர்களாலும் போற்றத்தக்க நிலையை அடைந்தனர். இறைவனை 'ஐயன்' என்றும், இறைவனது அடியார்களை 'ஐயர்' என்றும் போற்றிய தெய்வச் சேக்கிழார், தமது திருத்தொண்டர் புராணத்தில் ஒரு பெரும் புரட்சியே செய்துள்ளார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநாளைப் போவார் (நந்தனார்) மற்றும் கண்ணப்ப நாயனார் ஆகிய மூன்று நாயன்மார்களைத்தான் 'ஐயர்' என்று அழைத்து சிறப்பித்துள்ளார்.

முதலாவதாக,

'ஐயர்' நீர் உளமகிழ இங்கண் அணைந்த உறுதி உடையோம்...
'ஐயர்' நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தது ...

என்று அந்தணர் மரபில் வந்த திருஞானசம்பந்தர் வாக்கினாலேயே திருநீலகண்ட யாழ்ப்பாணரைச் சிறப்பிக்கின்றார்.

இரண்டாவதாக,

'ஐயரே!' அம்பலவர் அருளால் இப்பொழுது அணைந்தோம்
வெய்ய அழல் அமைத்து உமக்குத் தரவேண்டி ...

என்று ஆசாரம் தவறாத தில்லைவாழ் அந்தணர்கள் வாயாலேயே அழைக்கப்பட்டவர், திருநாளைப்போவார் என்னும் நந்தனார்.

மூன்றாவதாக,

பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி
ஆணையால் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில். ✢ [85]

என்று சேக்கிழார் தமது தெய்வீக வாக்கினாலேயே, கண்ணப்ப நாயனாரைப் போற்றியுள்ளார்.

இப்படி பிறப்பினால் இன்றி, இறைபக்தி ஒன்றின் மூலமே சிறப்பு பெறுவர் அடியவர் என்பதை விளக்கக்கூடிய வகையில், பெற்றான் சாம்பானும், சிவபக்தியில் சிறந்தவனாக இருந்தான். ஒருநாள் தில்லை நடராஜப்பெருமான் பெற்றான் சாம்பான் கனவில் எழுந் தருளினார். இறைவனது தரிசனத்தால் பெற்றான் சாம்பானது அஞ்ஞான இருள் நீங்கியது. பக்திப்பரவசத்தால், பலமுறை கூத்தப்பெருமானை வணங்கி எழுந்தான். தில்லை அம்பலவாணன் 'சாம்பனே! நீ இன்று முதல், சிதம்பரம் தலத்திற்கு வந்து, அங்குள்ள

புலி மடுவில் நீராடி, திருநீறு தரித்து, உருத்திராக்கம் அணிந்து, திருவீதி வலம் வந்து நம்மை வழிபட்டு, திருக்கோயில் மடைப் பள்ளிக்கு விறகுக் கட்டு போட்டு வருவாயாக' என்று ஆணையிட்டு மறைந்தார்.

கனவில் இருந்து திடுக்கிட்டு விழித்த பெற்றான் சாம்பான் அடைந்த அதிசயத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவேயில்லை. மறுநாள் முதலே, சிதம்பரத்தலம் சென்று, இறைவன் அருளியபடியே, திருக்கோயில் மடைப்பள்ளிக்குத் தவறாமல் விறகுக் கட்டை போட்டு வந்தான். இறைவனிடத்தில் மேலும் அதிகமான பக்தியும் நம்பிக்கையும் கொண்டு வணங்கி வந்தான். இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன.

ஒருநாள் வழக்கம்போல் விறகுக் கட்டைச் சுமந்து கொண்டு தில்லையம்பெருமான் மடைப்பள்ளியை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்த பெற்றான் சாம்பான் முன்பு ஸ்ரீநடராஜப் பெருமானே, காவியுடை அணிந்து சந்நியாசி உருவத்திலே தோன்றினார். 'அன்பனே, இன்று முதல், கொற்றவன்குடியில் வசிக்கும் உமாபதி சிவாசாரியாரின் இல்லத்திற்கும் விறகுக் கட்டை போட்டு வருவாயாக' என்று அன்புக்கட்டளையிட்டு உடனடியாக மறைந்துவிட்டார்.

சொல்லொணாத ஆச்சரியம் அடைந்தான் பெற்றான் சாம்பான். இறைவனது பெருங்கருணையைப் போற்றி, மறுநாள் முதல், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் ஆசிரமத்தின் பாகசாலைக்கும்* விறகுக் கட்டை போட்டு வந்தார். இப்படி இவர் விறகுக் கட்டை அளித்து வரும் விவரம் சமையல் செய்பவனாகிய தபசுப்பிள்ளைக்கு மட்டும்தான் தெரியும். வேறு ஒருவருக்கும் இந்த விஷயம் தெரியாது.

இப்படியே பல ஆண்டுகள் கழிந்தன. ஒருநாள் இறையருளால், கனமழை பெய்துகொண்டிருந்தது. இதனால் பெற்றான் சாம்பான் உரிய நேரத்தில், உமாபதி சிவாசாரியர் மடத்திற்கு விறகுக் கட்டை கொண்டுவர இயலவில்லை. இதனால் தபசுப்பிள்ளை சற்று கால தாமதமாக பூஜைக்கான நைவேத்தியம் கொண்டு வந்து வைத்தான்.



அதிலும் காய்கறிகள் இல்லாமல், வெறும் அன்னம் மாத்திரம் வைத்திருந் தான். இதனைக் கண்ட உமாபதி சிவாசாரியார், 'மற்றைய காய்கறிகள் எங்கே?' என்று வினவினார். தபசுப்பிள்ளை, 'ஐயா! தயவுசெய்து இன்று இந்த அன்னத்தை நிவேதனம் செய்து பூஜையை முடியுங்கள். பிறகு நடந்ததை தெரிவிக்கிறேன்' என்று கூறிப் பணிந்தான். அதுபோலவே, நிவேதனம் செய்து முடித்தாயிற்று. திருவமுது* முடிந்து சீடர்களுக்குப் பாடம் சொல்ல அமர்ந்தார் உமாபதி சிவம். இந்த சமயத்திலே, தபசுப் பிள்ளை அங்கு வந்தான். 'சுவாமி, நந்தனார் அவதரித்த குலத்தில் அவரை ஒத்த நற்குணம் உடைய ஒருவர், நாள்தோறும் தவறாமல் உலர்ந்த விறகுக் கட்டைகளை சமையலுக்காக கொண்டு வந்து தருகிறார். இந்தப் பணியை,

கடந்த ஐம்பத்தைந்து ஆண்டுகளாக தொடர்ந்து செய்து வருகிறார். இன்று மழையினால் இப்பணிக்கு தடை ஏற்பட்டுள்ளது. ஆகவே அன்னம் மட்டும்தான் தயார் நிலையில் உள்ளது' என்று கூறினான். இதனைக் கேட்ட உமாபதி சிவம், 'நாளை அவர் வந்து விறகுக்கட்டு போட்டவுடன், என்னிடம் அழைத்து வாரும்' என்று பணித்தார்.

மறுநாள் காலையில், வழக்கம்போல் விறகுக் கட்டையைச் சுமந்துகொண்டு பெற்றான் சாம்பான் வந்துகொண்டிருந்தான். இந்த சமயத்தில், முன்பு போலவே, இறைவன், ஒரு சந்நியாசி வடிவத்தில் காட்சி தந்தார். தம் கைப்பட எழுதிய ஒரு சீட்டுக் கவியை இவனிடம் தந்தார்.

'அன்பனே! நீ இதனை எடுத்துக்கொண்டு உமாபதி சிவத்தைப் போய் காண்பாயாக!' என்று அருள்செய்தார். அவனும் அந்த சீட்டை எடுத்துக்கொண்டு உமாபதி சிவத்திடம் வந்தான். வழக்கம்போல் விறகுக்கட்டை தபசுபிள்ளையிடம் ஒப்படைத்தான். பிறகு மெதுவாக தயங்கிக்கொண்டே சிவனடியாராகிய துறவியார் தம்மிடம் அளித்த சீட்டை எடுத்து அந்த தபசுபிள்ளையிடம் தந்தான். நடந்த விவரத்தை எல்லாம் சொன்னான். பிறகு எப்படியாவது இந்த சீட்டை உமாபதி சிவாசாரியாரின் பார்வைக்கு வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொண்டான். தபசுபிள்ளையும் இந்தச் சீட்டை மிகுந்த ஆச்சரியத்துடன் வாங்கி எடுத்துச் சென்றான். உமாபதி சிவாசாரியாரின் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தான். பிறகு, மிகுந்த பயபக்தியோடு, அந்தச் சீட்டை உமாபதி சிவத்திடம் அளித்து, இறைவனது கருணையை தெரியப்படுத்தினான்.

திருமுகம் மற்றும் விண்ணப்பம்

இறைவனும், சமயச் சான்றோர்களும் தமது சீடர்களுக்கும், பக்தர்களுக்கும் எழுதுவது 'திருமுகம்' எனப்படும். சீடர்களும், பக்தர்களும், இறைவனுக்கோ அல்லது பெரியவர்களுக்கோ எழுதித் தெரிவிப்பது 'விண்ணப்பம்' எனப்பெறும்.

'பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்' என்பது திருநாவுக்கரசரது அருள்வாக்கு. ஒரு கடிதத்தைக் கண்ட உடனேயே, அது

யாரிடமிருந்து வந்துள்ளதோ அவரது முகம் நம் கண் முன்னால் காட்சி தரும். அதனால்தான் அந்த மடலைத் 'திருமுகம்' என்றனர்.

இறைவனது திருமுகம்

சிவபெருமான் தமது அடியவர்களுக்காக எழுதிய திருமுகம் இரண்டு உள்ளது. ஒன்று மதுரையில் எழுந்தருளியிருக்கும் இறைவனாகிய சோமசுந்தரமூர்த்தி, சேரமான் பெருமானுக்கு எழுதிய திருமுகம். மற்றொன்று, தில்லை நடராஜப்பெருமான், கொற்றவன்குடி உமாபதி சிவத்திற்கு எழுதியது. ஒன்று வெள்ளியம்பலவாணராலும், இன்னொன்று பொன்னம்பலவாணராலும் எழுதப்பட்டிருப்பினும் கூட, இரண்டுக்கும் வேறுபாடு உண்டு. அது என்ன என்றால், வெள்ளியம்பலவாணராக சேரமான் பெருமானுக்கு எழுதிய திருமுகத்தில் பெருமிதப் பண்பும், பொன்னம்பலவாணராக தமது அடியவராகிய உமாபதி சிவாசாரியாருக்கு எழுதிய திருமுகத்தில், எளிமைப் பண்பும் இழையோடுவதைக் காணலாம்.

ஆலவாய் அண்ணல், சேரமான் பெருமாளுக்கு எழுதிய திருமுகம் 'மதிமலி புரிசை மாடக் கூடல்' என்று தொடங்கும் பாடல்.

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவும் பால் நிற வரிச்சிறகு
அன்னம் பயில் பொழில் ஆலவாயின்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப்படி எனப்பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக் கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாணபத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே ✣ [85]

இதனை தனது அன்பன் பாணபத்திரருக்காக எழுதி, அவன் மூலமாகவே சேரமன்னனுக்கு கொடுத்தனுப்பினார் சிவபெருமான். சிவனடியாராகிய பாணபத்திரன் ஏழ்மை நீங்க ஏராளமான பொன்னும் பொருளும் தந்தருளுமாறு உத்தரவிட்டு எழுதிய திருமுகம் இது.


தில்லைக்கூத்தப்பெருமான், ஸ்ரீஉமாபதி சிவத்திற்கு எழுதிய திருமுகத்திலே,

அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன் கொற்றங்
குடியாற்கு எழுதிய கைச் சீட்டுப்-படியின் மிசைப்
பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கை செய்து,
முத்தி கொடுக்க முறை ✣ [86]

என்று எழுதியிருந்தது.

'அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன்' என்று தொடங்குகிறது இந்தப் பாடல். இதனை பெற்றான் சாம்பானுக்காக எழுதி, அவன் மூலமாகவே உமாபதி சிவத்திற்கு அனுப்பி வைத்தார். இதில் தமது அடியவன் பெற்றான் சாம்பானுக்கு தீட்சை தந்து, முக்தி கொடுக்க வேண்டும் என்று கருணையுடன் அருளியுள்ளார் இறைவன்.

வழக்கம்போல், பூஜை, நைவேத்தியம், போஜனம் முடிந்த பிறகு, சீடர்களுக்குப் பாடம் சொல்ல அமர்ந்தார் சிவம். அப்போது, இந்த சீட்டுக்கவி கண்ணில் பட்டது. உடனே இதனை எடுத்து படித்தார். இறைவனின் கருணையை எண்ணி எண்ணி வியந்தார். கைச்சீட்டினை பலமுறை படித்து ஆனந்தக் கண்ணீர் வடித்தார் உமாபதி சிவம். தலையில் வைத்துக்கொண்டு மெய்சிலிர்த்தார். கைகூப்பித்தொழுதார். சாதாரண ஒரு விறகுவெட்டியிடம் இறைவனுக்கு இவ்வளவு கருணையா என்று உள்ளம் உருகிப் போற்றினார். பிறகு, இறைவனது கட்டளைப்படியே, பெற்றான் சாம்பானை உடனடியாக தம்முன் அழைத்துவர உத்தரவிட்டார். அதன்படியே தபசுபிள்ளையும் அவரை அழைத்து வந்தான். பெற்றான் சாம்பானைக் கண்டவுடன் மகிழ்ச்சி பொங்கியது. இறைவன் தமக்கு இட்ட கட்டளையை நினைத்தார். அந்தக் கணத்திலேயே தம்முடைய




ஞானக்கண்ணால், அவனைப் பார்த்து தீட்சையும், உபதேசமும் செய்தருளி, அப்பொழுதே பெற்றான் சாம்பானுக்கு முக்தியும் தந்தருளினார்.

அன்றிரவு, வழக்கம்போல் வீடு திரும்பாத பெற்றான் சாம்பானது நிலையைத் தெரிந்துக் கொள்வதற்காக அவனது மனைவி மற்றும் சுற்றத்தார், உமாபதி சிவத்தின் மடத்தை அடைந்தனர். நடந்ததை அறிந்தனர். இவர்கள் பக்குவம் அடையாததால், உண்மையை உணராமல் சோழ அரசனிடம் சென்று முறையிட்டனர். அரசனும் உமாபதி சிவத்திடம் சென்றான். 'சுவாமி, உண்மையில் நடந்தது என்ன என்பதை அனைவரும் அறியத் தெளிவுபடுத்த வேண்டும்' என்று வேண்டிப் பணிந்தான்.



உமாபதி சிவாசாரியார், நடராஜப்பெருமானின் திருமஞ்சன நீர்* தினமும் பட்டு, பரிபக்குவம் அடைந்திருந்த முள்ளிச் செடியை (கண்டங்கத்திரி செடி எனவும் கூறுவர்) கருணைக் கூர்ந்து, அன்புடன் பார்த்தார். சாபத்தினால் முள்ளிச் செடியாக இருந்தது, இவரது அருட்பார்வை பட்ட அதே கணம், இறைவனது அருளால், சாபம் நீங்கி எரிந்த அந்த முள்ளிச் செடி, அந்தணன் ஆகி, அப்போதே முத்தியும் அடைந்தது. இறைவனது அருளால், இவருடைய பார்வை யால் ஒரு முள்ளிச்செடியே முத்தி அடையும்போது, பெற்றான் சாம்பான் முத்தி அடைந்ததில் ஆச்சரியமேயில்லை என்று அரசன் உள்ளிட்ட அனைவரும் தமது சந்தேகம் தீர்ந்தனர்.


மேலும், சிதம்பரம் சன்னிதிக்கு அனைவரும் சென்று நடராஜப் பெருமானைத் தரிசித்தபோது அங்கு இரண்டு ஜோதி தென்படக் கண்டனர். அதில் ஒன்றில் சாம்பனின் உருவமும் மற்றதில் முள்ளிச்



செடியும் தென்பட்டன. அனைவரும் இவரது பெருமையைப் போற்றினர். சோழ மன்னனும் உமாபதி சிவாசாரியாரின் மகிமையை உணர்ந்து, வேண்டிய நன்மைகளைச் செய்து தந்தான்.

ஏறாத கொடியை ஏற்றுவித்தது

ஒருசமயம் தில்லை நடராஜப்பெருமானின் திருவிழா நடக்கையில் உமாபதி சிவாசரியாரது முறை வந்தது. அன்று தில்லைவாழ் அந்தணர் வேறொரு சிவாசாரியாரைக் கொண்டு திருவிழாவுக்குரிய கொடியை ஏற்றுவிக்க முயன்றனர். ஆனால் கொடி மேலே ஏறாமல் கீழே விழுந்தது. பல முறை முயன்றும் கொடி ஏறாததைக் கண்ட அந்தணர்களும் அடியவர்களும் துயருற்றனர். என்ன குற்றம் நேர்ந்தது என்று புரிய வில்லையே என்று அனைவரும் வருந்தினர். செய்வதறியாது திகைத்தனர். அந்த சமயத்திலே 'உமாபதி சிவத்தைக் கொண்டு கொடியேற்றுமாறு



பணியுங்கள்' என்று இறைவனது அசரீரி ஒலித்தது. தில்லைவாழ் அந்தணர்கள் கொற்றவன்குடி சென்று நிகழ்ந்ததைக் கூறி கொடியேற்ற வருமாறு அவரை அழைத்தனர்.

உமாபதி சிவாசாரியார் உடனே அங்கு வந்தார். இறைவனை வணங்கி 'கொடிக்கவி' பாடினார். அனைவரும் அதிசயிக்கும் வகையில் கொடி தானாகவே ஏறியது.

இதுபோல அரிய பல நிகழ்ச்சிகளை தமது வாழ்க்கையில் நடத்திக் காட்டியருளினார் உமாபதி சிவம். மேலும் அநேக சீடர்களுக்குச் சிவ

தீட்சை செய்து வைத்தார் அவர். பல மன்னர்களாலும் மக்களாலும் போற்றப்பெற்ற மிகச்சிறந்த ஆசாரியராக விளங்கிய உமாபதி சிவாசாரியார் தமது 76-ஆம் வயதில் சித்திரை ஹஸ்த நன்னாளிலே இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

உமாபதி சிவம் அருளிய நூல்கள்

திருச்சிற்றம்பலமுடையானின் அம்சமாகவே போற்றப்படும் உமாபதி சிவாசாரியார், வடமொழியில் பௌஷ்கர ஆகமத்திற்கு விரிவான உரை எழுதியுள்ளார். சிவ தத்துவங்களை விளக்கும் பல அரிய கிரந்தங்களை இயற்றியுள்ளார். சிதம்பர தத்துவங்களையும் மகிமைகளையும் நடராஜர் ஆலய அமைப்பின் விசேஷ மகத்துவங்களையும் விரிவாகக் கூறும் 'குஞ்சிதாங்கிரிஸ்தவம்' என்ற ஓர் அரிய தோத்திர நூலும் எழுதியுள்ளார். மேலும், கோயிற்புராணம், திருமுறைகண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராணசாரம், திருப்பதிக்கோவை என்னும் தமிழ் நூல்களையும் இயற்றியுள்ளார்.

சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் பதினான்கினுள் சிந்தாந்த அட்டகம் எனப்படும் எட்டு நூல்கள் இயற்றியுள்ளார்.

1. சிவப்பிரகாசம் 2. திருவருட்பயன் 3. வினா வெண்பா 4. போற்றிப் பஃறொடை 5. உண்மை நெறிவிளக்கம் 6. கொடிக்கவி 7. நெஞ்சுவிடு தூது 8. சங்கற்பநிராகரணம்

இப்படி சைவ சமயத்திற்கும் தெய்வத் தமிழிற்கும் அரிய பல தொண்டு ஆற்றியுள்ளார் உமாபதி சிவம்.

இவருடைய பெருமையை,

குறைவு இல் அருள் ஞான முதல் கொற்றங்குடி அடிகள்
நறைமலர்த்தாட்கு அன்பு பெற்று நாம் இருப்பது எந்நாளோ

என்று தமது குருமரபின் வணக்கத்தால் தாயுமான சுவாமி சிறப்பித்துள்ளார்.

உமாபதி சிவம் திருவடி வாழ்க; வாழ்க சீர் அடியார் எல்லாம்.

ஸ்ரீஉமாபதி சிவம் துதி

அடியார்க் கெளியன் எனத்தில்லை
அண்ணல் அருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி அப்பொழுதே
உடலுங் கரைவுற் றறைந்திடுவான்
உயர்தீக் கையினை அருள்நோக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரின் கழல்போற்றி. ✣ [86]

சந்தானாசாரியர் முத்தித் திருநாட்கள்

சித்திரை அத்தம் உமாபதி ஆவணித் திங்கள் தனில்
உத்திரம் சீர்கொள் மறைஞான சம்பந்தர் முது கன்னிச்
சுத்த மெய்ப்பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதி தனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

பிற்சேர்க்கை

1. சைவ சித்தாந்தக் கருத்துக்கள்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவர்கள், உலகு, உயிர், இறை என்ற மூன்று பெரும் பொருள் குறித்து ஆராய்ந்து, ஒரு வரையறை வகுத்து வெளிப்படுத்திய நெறியே 'சைவசித்தாந்தம்' என்று வழங்கப்படுகிறது.

சைவசித்தாந்தம் என்ற சொல், திருமந்திரத்தில் (1421) காணப்படுகிறது:

> கற்பன கற்று கலை மன்னு மெய் யோகம்
> முற்பத ஞான முறை முறை நண்ணியே
> தொற்பதமேவி துரிசற்று மேலான
> தற்பரங் கண்டுளோர் **சைவசித்தாந்தரே.** [86]

பன்னிரு திருமுறைகளிலும் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பரவியுள்ளன. சைவசித்தாந்தத்தை ஆகமசாரமாகவும் கூறுவது உண்டு. இதனால், 'ஆகமாந்தம்' என்ற பெயரும் இதற்கு உரியதாயிற்று. கி.பி. 12-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை இருந்த மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கில் சைவசித்தாந்தம் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது.

<u>சைவசித்தாந்த ஆசாரியர்கள்</u>

சந்தானாசாரியர்களாகிய மெய்கண்டார், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய நால்வரும் சைவசித்தாந்தத்தின் தலைமை ஆசாரியர்களாகப் போற்றப்படுகின்றனர். இவர்கள் அருளிய நூற்களில், சிவஞான போதம், சிவஞான சித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகியவை முதன்மையான நூற்களாகப் பேசப்படுகின்றன.

மெய்கண்டாருக்கு முந்தியவர்களான திருவியலூர் உய்யவந்த தேவர் அருளிய திருவுந்தியாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவர்

அருளிச்செய்த திருக்களிற்றுப்படியாரும் அனுபவ அடிப்படையில் சித்தாந்தத்தை விளக்கும் உபதேச நூல்களாகும். இவற்றின் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு. இவற்றைத் தவிர வேறு பல ஆசாரியர்கள் இயற்றிய சைவசித்தாந்த நூற்களும் உள்ளன.

சித்தாந்தம் என்றால் என்ன?

சித்தம் + அந்தம் = சித்தாந்தம். 'சித்தம்' என்ற சொல் 'நிலை நாட்டப் பெற்ற உண்மை' என்றும், 'அந்தம்' என்பது 'முடிவு' என்றும் பொருள் தரும். ஆகவே 'சைவ சித்தாந்தம்' என்பது 'முற்றும் முடிந்த முடிவாகிய மெய்ப்பொருள் கொள்கை' என்ற கருத்தை உணர்த்துகின்றது.

சைவசித்தாந்தம் உணர்த்தும் முப்பொருள் என்னென்ன?

பதி, பசு, பாசம் என்ற முப்பெரும் கொள்கைகளை விரிவாக எடுத்துக் கூறுவது சைவசித்தாந்தம்.

பதி என்பது அனைத்துப் பொருள்களிலும் கலந்து நின்றும் அனைத்தையும் கடந்து நின்றும் திகழும் முழுமுதற்கடவுள்.

பசு என்பது எண்ணற்ற உயிர் வகைகள்.

பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்று மூவகையாகப் பொருள்படுகின்ற பந்தங்கள் அல்லது மலங்கள் ஆகும்.

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றை யாரும் தோற்றுவிக்கவில்லை. இவை எக்காலத்தும் இருந்து வருகின்றன. 'பதியினைப் போல் பசு பாசம் அநாதி' என்று திருமூலர் திருமந்திரத்தில் (115) குறிப்பிடுகின்றார்.

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்று அணுகா பசு பாசம்
பதி அணுகில் பசு பாசம் நிலாவே. ✢ [87]

பதி, பசு, பாசம் ஆகிய மூன்றுமே உண்மைகள். இவற்றுள் பதி, பசு ஆகிய இரண்டும் சத்துச்சித்து உண்மைகள். பதி ஒன்று தான் சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் இருக்கும் பரம்பொருள்.

பசு என்பது பாசங்களால் கட்டுப்பட்டு இருப்பதால் இதன் அறிவு ஒரு வரம்புக்கு உட்பட்டது. தாம் அறிந்ததை மறந்து போவதும் பாசப் பிணைப்பினால் தான். அனாதி காலமாக தன்னை ஒட்டியிருக்கும் ஆணவம் என்னும் அழுக்கை நீக்கவே, முன்பு செய்த வினைக்கு ஏற்ப மாயை நிறைந்த உடல், உறுப்பு, இவற்றிற்கு ஏற்ற உலகம், இதில் உள்ளதை அனுபவிப்பது ஆகியவற்றை இறைவன் வழங்குகிறான். உயிர்கள் மும்மலம் நீங்கி பக்குவம் அடையும் வரையிலும் உலக நிகழ்ச்சிகள் அமைகின்றன. முற்றிலும் பக்குவம் அடைந்த உயிர், மலங்களின்றும் விடுபட்டு, இறையுணர்வு பெறுகின்றது.

உண்மைகளை அறிவு, அனுபவம் என்ற இரண்டின் மூலமாக சித்தாந்த கருத்து வெளிபடுகின்றது.

கடவுளிடம் நம்பிக்கை

ஒரு கோயில் கட்டி அங்கே இறைவனை எழுந்தருளச் செய்து வழிபடுகின்றோம். நமது சிந்தனைகளையும் செயல்களையும் நடத்து விப்பது இறையருளே என்ற நம்பிக்கை உடையவர்களாக வாழ்கிறோம். மெய்ஞானியர்களும், விஞ்ஞான மேதைகளும் தோன்றுவதற்கு முன்பே சாதாரண மனிதனும் தெய்வ நம்பிக்கை உடையவனாக இருந்திருக்கிறான். பாண்டித்தியம் உடையவனை விட பாமர மனிதனால் கடவுள் தன்மையை எளிதில் உணரமுடியும் என்பது சித்தாந்த நம்பிக்கை.

அனுபவமும் ஆராய்ச்சியும்

இறைவனை தங்களது அனுபவத்தினால் அறிந்துக்கொண்டவர்கள் அருளாளர்கள். தாங்கள் பெற்ற இறை அனுபவத்தை தங்கள் வாக்கி னாலேயே இவர்கள் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளனர். இறைவன் இருக்கிறான் என்பதை நம்பினவர்களுக்கு எந்த ஒரு சான்றும் தேவை யில்லை.

மனிதராகப் பிறந்தவர், எப்போதும் எதையும் துருவி ஆராயும் தன்மை உடையவர்கள் என்பது அறிந்ததே. உள்ளத்தில் எழும்

கேள்விக்கான பதிலை பல்வேறு கோணங்களிலும் ஆராய்ந்து தமக்கேற்ற வகையில் உணரும் தத்துவஞானிகள் உலகெங்கும் பரவியுள்ளனர். இப்படி ஆராய்ந்து சிந்தித்த அறிவினால் முடிவில் இறையுணர்வை ஏற்றுக்கொள்பவர் ஆராய்ச்சியாளர்.

இறைவன் இருக்கிறானா என்ற கேள்விக்கு, இருக்கிறான் என்ற பதிலைச் சொல்லாமல், இருக்கத்தான் வேண்டும் என்று இவர்கள் கூறுகின்றனர். இறைவன் இருக்கத்தான் வேண்டும் என்ற ஆராய்ச்சியாளர்களின் முடிவுக்கு, தகுந்த காரணங்கள் சொல்லவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அப்போதுதான் அதனை ஏற்றுக்கொள்ள முடியும். இதற்கு எத்தனையோ விளக்கங்கள் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து கொடுத்துள்ளனர்.

இறைவனே அனைத்துக்கும் ஆதாரம்

உலகத்திலே நாம் பார்க்கும் அனைத்துப் பொருட்களும் ஓர் ஆதாரத்தின் மேல்தான் நிற்கின்றது. மரம், செடி கொடிகள், விலங்குகள், மனிதர்கள் எல்லாவற்றுக்கும் ஆதாரம் உண்டு. இவை அனைத்தையும் தாங்கக்கூடிய ஒரு மேலான மூல ஆதார சக்தியாக இருப்பது இறைவனே. இறைவனே ஆதாரம் என்றும், அண்ட சராசரங்கள் அனைத்தும் அவனால் இயக்கப்படும் ஆதேயம் என்பதும் முடிவாகும்.

இறைவனே அனைத்திற்கும் தலைவன், அனைத்திற்கும் முதல்வன்

உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகிய அனைத் திற்கும் மூல ஒலியாக இருப்பது 'அ' என்ற எழுத்து ஆகும். இதனை ஒட்டியே அனைத்து எழுத்துக்களும் அமைகின்றன. இதுபோலவே, உலகத் திற்கும் ஒரு முதல்வன் இருக்கத்தான் வேண்டும். அகரம் மற்ற உயிர் எழுத்துக்களையும் மெய் எழுத்துக்களையும் இயக்குவது போலவே, இந்த முதல்வனும் உலகத்தில் உள்ள உயிர்களை இயக்குகிறான். அகரம் தனித்து இயங்குவது போல, இந்த முதல்வனும் தனித்து இயங்குகிறான்.

அனைத்து எழுத்துக்களுக்கும் ஒரு முதல் எழுத்து இருப்பது போல, ஒரு பள்ளிக்கூடத்திற்கோ அல்லது கல்லூரிக்கோ ஒரு முதல்வன்

இருப்பது போல, ஒரு நாட்டுக்கு ஒரு தலைவன் இருப்பது போல, உலகம் முழுவதற்கும் ஒரு முழுமுதற்பொருள் இருக்கத்தான் வேண்டும் என்பது அறிய முடிகிறது.

இதனையே மிகத்தெளிவாக, எளிய நடையில் உணர்த்தியுள்ளார் திருவள்ளுவர்:

அகர முதல எழுத்தெல்லாம்; ஆதி
பகவன் முதற்றே உலகு

இறைவனே அனைத்தையும் இயக்குகின்றான்

உலகத்திலே நாம் காணும் ஒவ்வொரு பொருளும், ஒவ்வொரு செயலும், வேறு ஒரு பொருளாலும், வேறு ஒருவராலும் இயக்கப்பட்டு வருவதை கண்கூடாகக் காண்கிறோம்.

உயிருள்ள பொருட்கள் மட்டும் இன்றி, ஜடப்பொருள்கள்கூட ஏதோ ஒரு வகையில், யாரோ ஒருவரால் இயங்கி வருகிறது. இதனால், ஒவ்வொரு பொருளும் இயங்குகிறது, அதனை இயக்குபவரும் ஒருவர் உண்டு என்று அறிய முடிகிறது.

இயங்கும் பொருள், இந்தப் பொருளை இயக்குபவர் என்பதை மேலும் ஆழ்ந்து பார்க்கும் போது ஒவ்வொரு பொருளையும் இயக்குவதற்கு முதன்மை ஆற்றல், துணை ஆற்றல் என்று இருவகை ஆற்றல் உண்டு. உதாரணமாக, ஒரு புத்தகம் எடுக்கப்படுகிறது அல்லது பிரித்துப் பார்க்கப் படுகிறது என்றால் புத்தகம் தானாகவே நகராது. புத்தகத்தை எடுப்பது ஒரு கை. இது இரண்டாம் நிலையில் உள்ளதால் துணை ஆற்றலாகும். அடுத்து, உயிர் இருந்தால்தான் கை வேலை செய்யும். ஆகவே உயிர் முதன்மை ஆற்றல் எனப் புரியவருகிறது. இதுபோலவே, அண்டசராசரங்களையும் இயக்கும் துணை சக்தியை ஈர்ப்பு ஆற்றல் என்றும், இந்த ஈர்ப்பு ஆற்றலையும் இயக்கும் முதன்மை சக்தி இறைவனே என்பது உண்மையாகும்.

மூல சக்தி அல்லது முதன்மை ஆற்றலாக உள்ள இறைவன், தன்னை மற்றொருவர் இயக்க வேண்டிய அவசியம் ஏதும் இன்றி, தானே

தனித்து இயங்கும் ஆற்றல் படைத்தவர். இது மட்டுமின்றி, அனைத்துப் பொருட்களையும் இயக்கிக் கொண்டிருப்பவனும் இறைவனே.

இறைவனே அனைத்துக்கும் நிமித்த காரணன்

கண்ணால் கண்டு அனுபவிக்கும் ஒவ்வொரு பொருளும், ஏதோ ஒரு காரணத்தில் இருந்து உற்பத்தி ஆகிறது. உதாரணமாக, நாம் உடுத்தும் ஆடைக்கு மூல காரணம் பஞ்சு, பட்டு போன்றவை. மண் சட்டி, குடம் போன்றவற்றிற்கு மண் மூல காரணம். நாற்காலி, மேஜை, கட்டில் போன்ற பொருட்களுக்கு மரம் மூல காரணம்.

பஞ்சு, பட்டிலிருந்து ஆடை நெய்வதற்கும், மண்ணில் இருந்து குடம் போன்றவை செய்வதற்கும், மரத்திலிருந்து நாற்காலி முதலானவை செய்வதற்கும், அறிவு படைத்த மனிதன் ஒருவன் இருக்கத்தான் வேண்டும்.

பஞ்சு, மண், மரம் போன்ற மூலப் பொருள் இருந்தாலும், அதனை ஒரு உபயோகமுள்ள பொருளாக உருவாக்குவதற்கு, அறிவுள்ள மனிதன் இருந்தாலும், இதனை வடிவமைப்பதற்குத் தேவையான கருவிகள் இருப்பதும் அவசியம்.

ஆகவே, மூலப் பொருள், துணைக்கருவி, இதனை இணைத்துப் படைப்பவன் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் ஒரு பொருள் உருவாக முடியும். இவையே முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம்.

இந்த உலகம் என்பது இறைவனால் உருவாக்கப்பட்ட ஒரு பெரிய பொருள். இந்தப் பொருள் தோன்ற வேண்டும் என்றால், இதற்கு மூலப்பொருள்தான் 'மாயை'. இயக்கும் கருவிதான் 'சக்தி'. இதனைச் செயல்படுத்தும் அறிவுப்பொருள்தான் 'இறைவன்'. ஆகவே, பஞ்சபூதங்களால் ஆன இந்த உலகத்தை தோற்றுவிப்பதும், இயக்குவிப்பதும், ஒடுக்குதலைச் செய்வதும் மூலமுதல்வனாகிய இறைவன். உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளன. ஆனால், இன்ப துன்பங்களுக்கு அப்பாற்பட்டு, எந்த ஒன்றையும் சாராமல்,

தனித்து இருக்கும். அநாதியாக உள்ள இறைவனிடம்தான் அனைத்தும் போய் ஒடுங்குகின்றன.

இவ்விதம் உயிர், உலகு, இறைவனைப்பற்றி சைவ சித்தாந்த சாத்திரங்கள் விளக்குகின்றன. இனி, அந்த சாத்திரங்களைப் பற்றிய சிறு குறிப்புகளை காண்போம்.

மெய்கண்ட சாத்திரம்

சந்தானக் குரவர்களால் அருளிச் செய்யப்பட்ட பதினொரு நூல்களும், திருவதிகை மனவாசகங்கடந்தார் அருளிய 'உண்மை விளக்கம்' என்ற நூலும், இவர்கள் காலத்திற்கு முன்பே சிவானுபவம் பெற்ற ஆசிரியர்களால் இயற்றப்பெற்ற உபதேச நூல்களாகிய 'திருவுந்தியார்', 'திருக்களிற்றுப் படியார்' என்னும் நூல்களும் ஆகப் பதினான்கு நூல்கள் மெய்கண்ட நூல்கள் என்றும் சித்தாந்த சாத்திரம் என்றும் வழங்கப்படுகின்றன.

ஞானாமிர்தம்

திருவுந்தியாருக்கும், திருக்களிற்றுப்படியாருக்கும் முற்பட்டதாகக் கருதப்படும் சைவசித்தாந்த சாத்திர நூல் 'ஞானாமிர்தம்'. இதன் ஆசிரியர் வாகீசமுனிவர். இது 75 அகவற்பாக்களால் ஆனது. இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது என்று சொல்லப்படுகிறது. இந் நூலை இயற்றிய வாகீச முனிவர், கோளகி மடம் என்று அக்காலத்தில் விளங் கியிருந்த சைவ சித்தாந்த மடத்தைச் சார்ந்தவர் என்றும் அறியவருகிறோம்.

இனி, சைவசித்தாந்த நூல்கள் பதினான்கும் என்னென்ன என்பதைப் பார்க்கலாம்.

இவை முறையே,

1. திருவுந்தியார் 2. திருக்களிற்றுப்படியார் 3. சிவஞானபோதம் 4. சிவஞான சித்தியார் 5. இருபா இருபஃது 6. உண்மை விளக்கம் 7. சிவப்பிரகாசம் 8. திருவருட்பயன் 9. வினா வெண்பா 10. போற்றிப் பஃறொடை 11. கொடிக்கவி 12. நெஞ்சுவிடு தூது 13. உண்மைநெறி விளக்கம் 14. சங்கற்ப நிராகரணம்

உந்தி களிறொடு உயர் போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்தவருள்
பண்பு வினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சு விடு
உண்மை நெறி சங்கற்பம் உற்று

என்ற வெண்பா இதனைக் கூறுகின்றது.

1. திருவுந்தியார்

சைவ சித்தாந்த சாத்திரங்களை உபதேச முறை என்றும் ஆராய்ச்சி முறை என்றும் பகுத்தல் உண்டு. சிவஞானபோதத்திற்கு முற்பட்ட திருவுந்தியாரும், திருக்களிற்றுப்படியாரும் உபதேச முறையில் ஞானத்தை விளக்குகின்றன. பிற நூல்கள் ஆராய்ச்சி முறையில் அமைந்தவை என்றும் கூறப்படுகிறது.

திருவுந்தியார் அருளிய ஆசாரியர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார். சாலி வாகன 1070 (கி.பி. 1148-ல்) இதனை அருளிச் செய்துள்ளார். 'உந்தீ' என்பது மகளிர் பலர் சேர்ந்து, தங்கள் கால்களை ஒருசேர அசையாது வைத்து, பறவைகள் பறக்கும்போது சிறகுகளை அடித்துக் கொள்வதுபோல கைகளை அசைத்து விளையாடும் ஒரு வகை விளையாட்டு ஆகும். உம் - உன்னுடைய, தீ - தீமைக்குக் காரணமான மும்மலங்களும், பற - உன்னை விட்டுப் போகும்படி; 'உன்னுடைய தீமைக்குக் காரணமான மும்மலங்களும் உன்னை விட்டுப்போகும்படி, ஞானச் சாத்திரத்தின் கருத்தை உமது குறிக்கோளாகக் கொள்வாயாக' என்று ஆசிரியர் மாணாக்கனுக்கு உபதேசிப்பதாக, அறிவுறுத்துவதாக அமைந்த நூல் திருவுந்தியார் ஆகும்.

அகளமாய் யாரும் அறிவரிது அப் பொருள்
சகளமாய் வந்ததென்று உந்தீபற
தானாகத் தந்ததென்று உந்தீபற ✣ [87]

என்ற முதல் பாடலில், முதல்வனாகிய இறைவனே ஞானாசிரியனாகத் தோன்றி அருள் ஞானம் நல்குவான்; இறையருளால் அருள் ஞானம்

பெற்ற பின்னர், சிந்தித்து ஆராய்ந்து, தெளிந்து பின்னர், சிவபோகப் பயனை எப்படிப் பெற முடியும் என்பதனை திருவுந்தியார் விளக்குகின்றது.

வைய முழுதும் மலக்கயம் கண்டிடும்
உய்ய வந்தான் உரை உந்தீ பற;
உண்மை உணர்ந்தார் என்று உந்தீபற ✢ [87]

—'உலக மக்கள் யாவருக்கும் பாசநீக்கத்தைச் செய்யவல்ல, உய்யவந்த தேவநாயனாரது நூலினை உணர்ந்தவர்கள் உண்மையை உணர்ந்தவராவர்' என்று இந்த நூலின் பயனைக் கூறுகின்றார் இதன் ஆசிரியர்.

2. திருக்களிற்றுப்படியார்

திருக்களிற்றுப்படியார் இயற்றிய ஆசிரியர், திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார். திருவுந்தியார் இயற்றிய ஆசிரியராகிய திருவியலூர் உய்யவந்த தேவரின் சீடர் ஆளுடைய தேவநாயனார். ஆளுடைய தேவநாயனாரின் சீடர், திருக்கடவூர் உய்ய வந்த தேவ நாயனார் ஆவார். திருக்களிற்றுப்படியார், திருவுந்தியார் நூலுக்கு விரிவுரையாக அமைந்துள்ளது. இது 100 வெண்பாக்களால் ஆனதாகும். இதனை சாலி வாகன 1100 (கி.பி. 1178-ல்) இயற்றியதாக அறிகிறோம். திருக்கடவூர் உய்யவந்த தேவர் இந்த நூலை எடுத்துச் சென்று தில்லை நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் பேரம்பலத்தின் பஞ்சாட்சரப் படியில் வைத்து வணங்கியபோது, அந்தப் படியில் அமைந்திருந்த கல்யானை, தனது துதிக்கையால் இந்த நூலை எடுத்து தில்லையம்பலவாணன் திருவடியில் சேர்த்தது. இதனை கண்ட அனைவரும் வியந்து, நூலின் பெருமையை உணர்ந்தனர். இதனால், இந்த நூலுக்கு 'திருக்களிற்றுப்படியார்' (களிறு=யானை) என்ற பெயர் ஏற்பட்டது என்பதும் வரலாறு.

இந்த நூல், தான் விளக்கும் சிவானுபவப் பயன்களைத் திருக்குறள், திருமுறை ஆகியவற்றில் இருந்து மேற்கோள் காட்டி விளக்குகின்றது.

வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை என்றமையால்
வேண்டினஃதொன்றுமே வேண்டுவது - வேண்டினது
வேண்டாமை வேண்ட வரும் என்றமையால் வேண்டிடுக
வேண்டாமை வேண்டும் அவன் பால் ✣ [87]

என்பதில் திருக்குறள் பொதுமறையாகக் கருதப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றது.

அன்பே என் அன்பே என்று அன்பால் அழுது அரற்றி
அன்பே அன்பாக அறிவழியும் - அன்பு அன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்வது எல்லாம்
சாற்றும் பழமன்றே தான் ✣ [88]

என்பதில் தேவார, திருவாசக, திருமுறையின் சிறப்பு வெளிப்படுவதைக் காணலாம்.

சுந்தரமூர்த்தி நாயனார் புராணத்தில் இருந்து, ஓர் அருஞ்செயலை திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் குறிப்பிடுகின்றார். மோகத்தை முழுவதும் நீக்கியவருக்கே முத்தி கிடைக்கும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. ஆகமத்தைத் தந்தவர் சிவபெருமான். அத்தகைய இறைவனையே, தமது மனைவிக்காகத் தூதாகச் செல்லுமாறு வேண்டினார் சுந்தரர். அவரும் இசைந்து சென்றார் என்றால் இதில் அமைந்த அதிசயத்தை என்ன என்று சொல்வது என்று ஆச்சரியப்படுகிறார். பரவையாரிடம் சிவபிரானை தூதாக அனுப்பிய வன்தொண்டர் தொண்டினை மிகவும் அற்புதமான செயலாக, வியந்து வியந்து போற்றுகின்றது திருக்களிற்றுப்படியார். இதோ! அந்தப் பாடல்,

மோகம் அறுத்திடில் நாம் முக்தி கொடுப்பது என
ஆகமங்கள் சொன்ன அவர் தம்மை தோகையர் பால்
தூதாகப் போகவிடும் வன்தொண்டர் தொண்டு தனை
ஏதாகச் சொல்வேன் இனி யான்! ✣ [88]

இவை போன்று சுவை மிகுந்த பாடல்களைக் கொண்டது திருக்களிற்றுப்படியார்.

மிக மிகச் சுருக்கமான ஆனால் மிக விரிவான உயர்ந்த கருத்தை உணர்த்தும் நூல் 'சிவஞானபோதம்'.

சிவஞானபோதம் 624 எழுத்துக்களில், 216 சொற்களில் 40 வரிகளில் மெய்கண்டதேவரால் இயற்றப்பெற்றது. பல்வேறு சமயக்கொள்கைகளையும் தம்முள் அடக்கி, மேலான தத்துவஞானப் பெருநூலாக விளங்குவது சிவஞானபோதம்.

சிவஞானபோதம், இறை, உயிர், உலகு அதாவது பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் பற்றி பன்னிரண்டு நூற்பாக்களில் மிகச் சிறந்த முறையில் சித்தாந்தக் கொள்கையை விளக்குகின்றது.

நாற்ப தடியால், இருநூற்றுப் பதினாறு எளிய நற்சொல்லால்
ஏற்ற அறுநூற்று இருபான நான்கு எழுத்தால், சமயக் கொள்கை எலாம்
தேற்றித் தெருட்டும் சிவஞானபோதச் செழுநூல் போல் எங்கும்
வேற்று ஓர் நூல் இன்றென உரைப்பின் மிக்க அதன் சீர் விளம்புவர் யார்? ✣ [88]

—'சித்தாந்தப் புலவர்மணி' ந.ரா. முருகவேள்

i. பொது அதிகாரம்

முதல் சூத்திரத்தால் பதி உண்மையும், இரண்டாம் சூத்திரத்தால் பாச உண்மையும், மூன்றாம் சூத்திரத்தால் பசு உண்மையும் கூறப்பட்டதால் இந்த மூன்று சூத்திரங்களும் 'பிரமாண இயல்' எனப்படும்.

நான்காம் சூத்திரத்தில் உயிரின் இலக்கணமும், ஐந்தாம் சூத்திரத்தில் பாச இலக்கணமும், ஆறாம் சூத்திரத்தில் பதி இலக்கணமும் கூறுவதால் இந்த மூன்று சூத்திரங்களும் 'இலக்கண இயல்' எனப்படும்.

ii. உண்மை அதிகாரம்

ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய மூன்று சூத்திரங்களும் இறைவனை அறியும் உபாயம் உணர்த்துவதால் 'சாதன இயல்' எனப்படும்.

பத்தாம் சூத்திரம் பாச நீக்கத்தையும், பதினொன்றாம் சூத்திரம் சிவப்பேற்றினையும், பன்னிரண்டாம் சூத்திரம் சீவன் முத்தி என்பதையும் எடுத்துரைப்பதால் 'பயன் இயல்' எனப்படும்.

iii. பன்னிரண்டாம் சூத்திரம்

செம்மலர் நோன் தாள் சேர வொட்டா
அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே. ✣ [88]

—சிவந்த தாமரை மலர்போல் மென்மை உடையதும், அன்பராய் வந்து அடைந்தவரது மும்மலத்தைக் கெடுக்கும் வலிமையுடையதுமான இறைவனது திருவடியை சேரவொட்டாமல் தடுப்பது மும்மலம்! ஞானத்தை உணர்த்தாது அஞ்ஞானத்தை உணர்த்தும், ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மலங்களையும் அன்றாடம் ஞான நீரால் கழுவிக் களைய வேண்டும்.

இத்தகைய ஞானம் எப்படி ஏற்படும் எனில், இறைவனை உணர்ந்த சிவனடியார்களோடு எப்போதும் இணைந்து இருக்க வேண்டும். அது மட்டுமின்றி, சிவனடியாரது திருவேடத்தையும், சிவாலயத்தில், கருவறையில் உறையும் சிவலிங்கத் திருமேனியையும், சிவபெருமானாகவே கருதி வழிபட வேண்டும்.

இத்தகைய நிலையை அடைந்தவர்களே சீவன் முத்தர் என்று போற்றப்படுகின்றனர்.

இப்படி, 1. இறை இயல்பு 2. உயிர் இயல்பு 3. தளை இயல்பு 4. உயிரது தகவும் தன்மையும் 5. இறைவனை அடையத்தக்க வழி 6. பயனும் பண்பும் ஆகியவைப் பற்றிக் கூறுகிறது சிவஞானபோதம்.

சிவஞானபோதத்திற்கு வழிநூலாக சிவஞானசித்தியாரும், சார்பு நூலாக சிவப்பிரகாசமும் விளங்குகின்றன.

மெய்கண்டான் நூல் சென்னியில் கொண்டு
சைவத்திறத்தினைத் தெரிக்கலுற்றாம்

என்று அருள்நந்திசிவாசாரியர் அருளியுள்ளார்.

4. சிவஞான சித்தியார்

சிவஞான சித்தியாரை இயற்றிய ஆசிரியர் அருணந்தி சிவாசாரியர். இந்த நூல் சிவஞானபோதத்தின் வழிநூலாக விளங்குகிறது. மெய்கண்ட சாத்திர நூல்களிலேயே மிகவும் விரிவான நூல் சிவஞானசித்தியார் ஆகும். இது 'பரபக்கம்', 'சுபக்கம்' என்று இரண்டு பெரிய பிரிவுகளை உடையது.

பரபக்கத்தில், சைவ சித்தாந்தம் அல்லாத பிற மதங்களின் கொள்கைகளை எடுத்துக்கூறி, அவற்றிற்கு தக்க வகையில் மறுப்பு சொல்லப்படுகிறது.

சுபக்கத்தில் சைவசித்தாந்தக் கொள்கைகள் விரிவாக எடுத்துச் சொல்லப்படுகின்றன.

பரபக்கத்தில் மறுப்புகள் சித்தாந்த நோக்கிலும், சுபக்கத்தில் சித்தாந்த விளக்கம் பிறமத நோக்கிலும் சொல்லப்படுவதால், இரு பிரிவு களிலும், பிற மதக் கொள்கைகளும், சித்தாந்தக் கொள்கைகளும் ஏற்ற பெற்றியால் இடம் பெறுகின்றன.

5. இருபா இருபஃது

இருபா இருபஃது நூலில் வெண்பாவும் ஆசிரியப்பாவும் மாறிமாறி வருகின்றன. இந்த நூல் இருபது பாடல்களைக் கொண்டது. எனவே 'இருபா இருபஃது' என்ற பெயர் எழுந்தது. இது பாவகையாலும், தொகை வகையாலும் சிறப்புப்பெற்ற நூலாகும். அந்தாதித் தொடையில்* அமைந்திருப்பதும் தனிச்சிறப்பாகும். இருபா இருபஃதின் ஆசிரியர், அருள்நந்தி சிவாசாரியர் ஆவார்.

தமது உள்ளத்தில் எழுந்த ஐயங்கள் சிலவற்றை தமது ஆசிரியராகிய மெய்கண்டாரை வினவுவதாகவும் அவற்றுக்கு உரிய விடைகளை குருநாதர் வழங்குவதாகவும் இந்த நூல் அமைந்துள்ளது. சிலவற்றில் வினா மட்டுமே உள்ளது. இந்நூலில் அமைந்துள்ள பாடல்களைப் பொருள் வகையில் ஐந்தாகப் பிரிக்கலாம். 1. குருவழிபாடு 2. இறைக்கொள்கை 3. உயிர்க்கொள்கை 4. தளைக்கொள்கை 5. குருவருள்.

இது போன்று வினா விடையாக அமைந்த வேறு இரு நூல்கள் வினா வெண்பாவும் உண்மை விளக்கமும் ஆகும்.

இந்த நூலில் அமைந்துள்ள ஓர் அரிய பாடலின் கருத்தை மட்டும் சிறிது சிந்தித்துப் பார்க்கலாம்:

அப்பரின் அரிய தேவாரமும் இருபா இருபஃதும்

மின்சாரம், மின்சார கம்பி முழுவதும் பரவி இருந்தாலும் சொடுக்கி (switch)யினைத் தட்டும்போது மட்டுமே மின்னாற்றல் வெளிப்படும். சொடுக்கியினைத் தட்டாதபோது மின்னாற்றல் வெளிப்படாது. ஆனால் அப்போது இங்கு மின்சாரம் இல்லை என்று சொல்லமுடியாது. அது போல, இறைவன் ஒவ்வொன்றிலும் வியாபித்து இருக்கிறான். தன்னை நினைக்கும் பொழுது கூடியும், நினையாதபொழுது நீங்கியும் நின்று, உயிர்களுக்கு அருள்புரிந்து வருகின்றான். எனவே இறைவனை எண்ணெய் ஒழுக்குபோல இடைவிடாமல் சிந்தித்துத் தியானித்தல் வேண்டும்.

யான் உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

என்று மணிவாசகர் திருவாசகத்தில் கூறுகிறார்.

இத்தகைய இறைவனது அருள் இயல்பினை திருநாவுக்கரசர் ஒரு தேவாரப்பாடலில் விளக்குகிறார்:

பண்ணில் ஊறும் பழத்தினும் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே களிதரும்
உன்னில் உன்னும் உனாவிடில் விட்டிடும்
என்னுள் ஈசன் இருந்த இயற்கையே ⁜ [89]

இந்தப் பாடல் அச்சில் இடம் பெறாமல் விடுபட்டுப் போயிருக்கின்றது. ஆயினும் கி.பி. 1908-ஆம் ஆண்டில் வெளிவந்த 'சைவ சமய சரபம்' என்ற நூலில் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள், இதனை எடுத்தாண்டுள்ளார். 'தகரவித்தை' என்னும் அரிய பொருள் பற்றி விளக்கிக் கொண்டு வரும்போது, அப்பரின் இந்த தேவாரத் திருப்பாடலை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். இதன் பிறகு 1911-ஆம் ஆண்டில்

யாழ்ப்பாணம் திரு சுவாமிநாத பண்டிதர் அவர்கள் வெளியிட்ட அடங்கன்முறைப் பதிப்பில் இந்தப் பாடல் பிற்சேர்க்கையாகத் தரப்பெற்றிருக்கின்றது. கி.பி. 1610-1661-இல் வாழ்ந்த வேதாந்த சித்தாந்த சமரச ஞான வித்தகச் செல்வர் ஆகிய தாயுமானவ சுவாமிகள், திருநாவுக் கரசர் அருளிச் செய்த இந்த அரிய பாடலை எடுத்து சிறப்பித்துள்ளார். இவரது 'அறிஞருரை' என்ற பகுதியில்,

> உன்னில் உன்னும் என்ற உறு மொழியால் என் இதயம்
> தன்னில் உன்னி நன்நெறியைச் சாரும் நாள் எந்நாளோ ✣ [89]

என வரும் 'எந்நாட் கண்ணியில்' இந்தப் பாடலை எடுத்தாண்டுள்ளார். இதனையும் நமக்கு எடுத்து விளக்கியிருப்பவர் பாம்பன் சுவாமிகளே யாவார்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் தாம் பாடியருளிய இருபா இருபஃது என்ற சைவ சித்தாந்த சாத்திர நூலில் இந்தப் பாடலை மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார் அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள்.

> எண்திசை விளங்க இருட்படாம் போக்கி
> முண்டகம் மலர்த்தீ முதறிவு; அருளும்
> மேதினி உதய மெய்கண்ட தேவ!
> கோதில் அமுத! குணப்பெருங் குன்ற!
> என்னின் ஆர்தலும் அகறலும் என்னைகொல்?
> **உன்னில் துன்னி உனாவிடிற் பெயர்குவை**
> **என்னும் அதுவே நின் இயல்பு எனினே,**
> வியங்கோள் ஆனெனும் ஆகி இயங்கலும்
> உண்டெனப் படுவை .... ✣ [89]

எனவரும் இருபா இருபஃது நூலின் 12-ஆம் பாடலில், 6 மற்றும் 7-ஆம் வரிகளில் 'உன்னில் உன்னி உனாவிடிற் பெயர்குவை என்னம் அதுவே நின்னியல்பு என்னே' என அருள்நந்தி சிவாசரிய சுவாமிகள் மேற்கோளாகக் காட்டி எடுத்தாண்டுள்ளார்.

மேலும் பின்னாளில், திருவாவடுதுறை ஆதீனம் நமச்சிவாயத் தம்பிரான் அவர்கள் தாம் இயற்றிய இருபா இருபஃது உரையிலும் இந்த தேவாரப்பாடலை முழுவதுமாக எடுத்துக்காட்டியுள்ளார்.

6. உண்மை விளக்கம்

உண்மை விளக்கத்தின் நூலாசிரியர் திருவதிகை மனவாசகங் கடந்தார். இதனை உண்மை விளக்கத்தின் இறுதியில் 54-ஆவது பாடலாக அமைந்துள்ள 'மன்னதிகை வாழும்' என்று தொடங்கும் பாடலால் அறியலாம்.

> மன்னதிகை வாழும் மனவாசகங் கடந்தான்
> மின்னனையார் வாழ்விலுறா மெய்கண்டான் - பன்மறைகள்
> வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
> உண்மை விளக்கஞ் செய்தான் உற்று. ✣ [89]

திருவதிகை மனவாசகங் கடந்தார், மெய்கண்டாரின் காலமாகிய கி.பி. 1232-ஐ ஒட்டிய காலப்பகுதியினர் என்று கூறப்படுகிறது. இவருடைய ஞானாசிரியர் மெய்கண்டதேவர்.

முப்பத்தாறு தத்துவங்களையும் முதன்மையாக விரித்துரைக்கும் நூல் உண்மை விளக்கம். மேலும், வேதம், ஆகமம், திருமுறைகள் மற்றும் தம் காலத்துக்கு முன்னர் தோன்றிய நூல்களில் காணப்படும் சைவசமய உண்மை விளக்கங்களைத் தொகுத்து விளக்கியதாலும் இந்நூல் உண்மை விளக்கம் என பெயர் பெற்றது. வினா-விடை அமைப்பில் உள்ளது. இந் நூலில், 36 தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன. மேலும், ஆணவம், கன்மம், மாயா மலங்கள் குறித்தும், பசு, பதியின் இலக்கணம், நடராஜ தத்துவம், இருவகை நடனம், திருவைந்தெழுத்து, முத்தி நிலை குறித்தும் அரிய பெரிய தத்துவங்களை மிகவும் விரித்துரைக்கின்ற நூல் உண்மை விளக்கம்.

> ஆறாறு தத்துவம்ஏது ஆணவம்ஏது அன்றேதான்
> மாறா வினையேது மற்றிவற்றின் - வேறாகா
> நான்ஏது நீஏது நாதன்நடம் அஞ்செழுத்துத்
> தான்ஏது தேசிகனே சாற்று. ✣ [90]

என்று இந்த நூலின் பொருளை கூறுகின்றார் மனவாசகங் கடந்தார். மேலும்,

'வண்மை தருமாகம நூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம்' என்று தொடங்கி, 'வண்மை தருமாகம நூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம்' என்று கூறி முடிக்கின்றார். எனவே, இந்த நூலில் உள்ள அனைத்தும் சிவாகமங்களுள் கூறியவாறே அருளப்பெற்றது என்று உணர்த்துகின்றார்.

7. சிவப்பிரகாசம்

மெய்கண்டார் அருளிய முதல் நூலாகிய சிவஞானபோதத்தினையும் அதன் வழிநூலாக அருணந்தி சிவாசாரியார் இயற்றிய சிவஞான சித்தியாரையும் பின்பற்றி, உமாபதி சிவாசரியர் எழுதிய சார்பு நூல் 'சிவப்பிரகாசம்'. உமாபதி சிவாசாரியார் அருளிய சித்தாந்த அட்டகத்தில் அமைந்த ஒன்று 'சிவப்பிரகாசம்'. சிவஞானபோதத்தின் பன்னிரு சூத்திரங்களின் பொருளும், சிவஞான சித்தியாரின் பொருளும் இந்த சிவப்பிரகாசத்தில், நூறு விருத்தங்களால் விரித்துரைக்கப் பட்டுள்ளது.

> ஒளியான திருமேனி உமிழ் தான மிகமேவு
> களியார வரும் ஆனை கழல் நாளும் மறவாமல்
> அளியாளு மலர் தூவும் அடியார்கள் உளமான
> வெளியாகும் வலிதாய வினை கூட நினையாவே ✢ [90]

என்ற காப்புச் செய்யுளில் 'ஒளி' என்ற சொல், 'சிவப்பிரகாசம்' என்னும் இந்த நூற்பெயருக்கு தகுந்த மங்கலச் சொல்லாகவும் விளங்குகிறது.

இந்த நூலில் பதி, பசு, பாசம் ஆகியவற்றின் பொது இயல்பினை, முதல் ஐம்பது விருத்தங்களிலும் தொடர்ந்து வரும் ஐம்பது விருத்தங் களில் சிறப்பியல்பினையும் விரிவாகக் கூறுகிறார் சிவாசாரியார். மேலும், இதன் விரிவுரையின் தன்மை பொறுத்து, முற்பகுதி பொது அதிகாரம் என்றும் பிற்பகுதி உண்மை அதிகாரம் எனவும் வழங்கப்படுகிறது.

8. திருவருட்பயன்

சிவப்பிரகாசத்தைக் கற்பவருக்கு உதவியாக அந்த நூலின் பொருட்களை சுருக்கமாகத் தொகுத்து விளக்கும் முறையில் எழுந்தது 'திருவருட்பயன்'. உமாபதி சிவம் எழுதிய சைவசித்தாந்த அட்டகத்தில் அடங்கிய இரண்டாவது நூலாகும்.

இது தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளை ஒட்டி எழுந்த சித்தாந்த நூலாகும். 'அகர முதல எழுத்து எல்லாம்' என்று திருவள்ளுவர் தொடங்கியது போலவே, இங்கு உமாபதி சிவமும்,

அகர உயிர் போல் அறிவாகி எங்கும்
நிகரிலிறை நிற்கும் நிறைந்து

என்று திருவருட்பயன் நூலைத் தொடங்குகிறார். 'அகரமாகிய உயிர் எழுத்து எல்லா எழுத்துக்களோடு கூடியும் தனித்தும் நிற்றல் போல ஒப்பற்ற இறைவன் அறிவு மயமாகி எங்கும் நிறைந்து, ஒன்றாய், வேறாய். உடனாய் நிற்பான்' என்பது பொருள்.

இந்த நூல்—

1. பதிமுதுநிலை 2. உயிரவை நிலை 3. இருள்மல நிலை 4. அருளது நிலை 5. அருளுருநிலை 6. அறியும் நெறி 7. உயிர் விளக்கம் 8. இன்புறு நிலை 9. அஞ்செழுத்து அருள்நிலை 10. அணைந்தோர் தன்மை என்ற பத்து தலைப்புகளில், நூறு பாடல்களில், இறை, உயிர்கள், உலகு பற்றிய உண்மைகளை மிகச் சிறப்பாக விளக்கியுள்ளது. உமாபதி சிவம், திருஞானசம்பந்தர் அருளிய திருக்கடைக்காப்பு, திருநாவுக்கரசர் அருளிய தேவாரம், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய திருப்பாட்டு ஆகியவற்றிலிருந்து சித்தாந்த சாத்திர நுட்பங்கள் நிறைந்த நூறு பாடல்களைத் தொகுத்து, அதற்குத் 'தேவார அருள்முறைத் திரட்டு' என்று பெயரிட்டுள்ளார். இந்தப் பாடல்கள் 'மெய்ந்நெறித் திருக்குறள்' என்ற போற்றப்படும் 'திருவருட்பயன்' நூலை எளிதில் உணர உதவுகின்றன.

9. வினா வெண்பா

உமாபதி சிவாசாரியர் அருளியுள்ள சித்தாந்த அட்டகத்தில், அடுத்து வருவது 'வினா வெண்பா' என்ற நூலாகும்.

'வினா வெண்பா', வெண்பா யாப்பினால்* அமைந்த நூலாகும். மொத்தம் 13 வெண்பாக்களை உடையது. உமாபதி சிவம், தமது ஞானாசிரியனாகிய மறைஞானசம்பந்தரிடம், சைவசித்தாந்தத்தின் நுண்ணிய கருத்துக்களை, 12 வெண்பாக்களிலே வினாக்களாகக் கேட்டுத் தெளிவது போல இந்த நூலை அருளிச்செய்துள்ளார். 13-வது வெண்பா நூலின் பயனை உரைக்கின்றது.

> அருளால் உணர்வார்க்கு அகலாத செம்மைப்
> பொருளாகி நிற்கும் பொருந்தித் - தெருளா
> வினா வெண்பா உண்மை வினாவாரேல் ஊமன்
> கனாவின் பால் எய்துவிக்கும் காண்.

'ஆசாரியனது அனுக்கிரகத்தினால் ஞானம் பெற்றவர்களுக்கு, அவர் களை விட்டு நீங்காத உண்மைப் பொருளாக வெளிப்பட்டு, அவர்களது அறிவில் கலந்து சிவம் பிரகாசிக்கும். இப்படி அருள் பெறாதவர், அறி வதற்கு உபகாரமாகிய இந்த 'வினா வெண்பா'வில் உள்ள வினாக்களுக்கு, விடைகளை தெரிந்துக்கொள்ளாவிடில், அவரது வித்தை, ஊமையன் ஒருவன் கனவில் குடிக்கின்ற பாலைப் போல பயன் இன்மையைத் தரும் என்பதை நீ அறிவாயாக!' என்பது இந்தப் பாடலின் பொருளாகும். அதாவது 'இந்த நூலில் உள்ள வினாக்களுக்கு விடை உணர்ந்தவரே, சித்தாந்த சைவ நூற்களை நன்கு பயின்றவர் ஆவர்' என்று இதில் சிவாசாரியர் அறிவுறுத்து கின்றார்.

10. போற்றிப் பஃறொடை

உமாபதி சிவாச்சாரியர் தமக்கு ஞான குருவாக அமைந்த மறை ஞானசம்பந்தரை சிவப்பரம்பொருளாகவே கருதி போற்றிய நூலாகும். சித்தாந்த அட்டகத்தில் அடங்கியது. இது ஒரு சித்தாந்த நூலாக மட்டு மின்றி, தோத்திரப் பாடலாகவும் அமைந்துள்ளது.

பஃறொடை வெண்பா யாப்பில் அமைந்து இருப்பதால் 'போற்றி பஃறொடை' எனப் பெயர் பெற்றது.

பிறவா முதல்வனாகிய இறைவன், தம்மை இறவாத பேரின்பத்து இருத்துதல் வேண்டி 'மறைஞான சம்பந்தர்' என்னும் அருட்குருவாக எழுந்தருளி, தமக்கு, சமயம், விசேடம், நிர்வாணம், அபிடேகம் என்னும் நான்கு வகைத் தீட்சையும் தந்து ஆட்கொண்டு, சைவ சித்தாந்த மெய் நூற்பொருள்களை உபதேசித்து அருளிய பாங்கினை உமாபதி சிவாசாரியார் இந்த நூலில் விரிவாகக் கூறியுள்ளார்.

உமாபதி சிவம், தமது ஞானாசிரியராகிய மறைஞானசம்பந்தரைப் போற்றிப் பரவிய இப்போற்றிப் பஃறொடை, கற்போர் நெஞ்சை உருக்கும் பக்திப்பனுவலாகவும் திகழ்கின்றது.

11. கொடிக்கவி

சித்தாந்த அட்டகத்தில் ஒன்று 'கொடிக்கவி'. மறைஞான சம்பந்தரின் சீடரானவுடன், உமாபதி சிவம், தமது குலத்தவரான தில்லைவாழ் அந்தணர்களால் புறக்கணிக்கப்பட்டார். கொற்றவன் குடியில் திருமடம் அமைத்து தங்கியிருந்தார். தம்மிடம் வரும் அன்பவருக்கு தீக்கை அளித்து சைவ சித்தாந்த உண்மைப்பொருளை உபதேசித்து வந்தார். இந்நிலையில், தில்லையில் தொடங்கிய திருவிழாவில் கொடி ஏறாது தடைப்பட்டது. 'உமாபதி சிவம் வந்தால் கொடியேறும்' என்று அசரீரி ஒலித்தது. தில்லைவாழ் அந்தணர்கள், உமாபதி சிவாசாரியாரை அழைத்து வந்தனர். அவர் வந்து 'கொடிக்கவி' பாடியவுடன், கொடி தானாகவே ஏறியது.

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடமொன்று மேவிடிலொன்று
ஒளிக்குமெனினும் இருளடராதுள்ளுயிர்க்குயிராய்த்
தெளிக்குமறிவு திகழ்ந்துள தேனுந் திரிமலத்தே
குளிக்கும் உயிரருள் கூடும் படிக் கொடி கட்டினனே.

—'ஒளியாகிய ஞானத்திற்கும் இருளாகிய மலத்திற்கும் உயிராகிய இடம் ஒன்றே. ஒன்று மிகுந்தபோது மற்றொன்று மறையும். என்றாலும்,

இருள் மலம் தாக்காதவாறு, உயிருக்கு உயிராய் நின்று இறைவன் தெளிவுற விளக்கும் உண்மை அறிவு விளங்கியபோதும், வாசனை பற்றி மும்மலத்தே மூழ்குகின்ற உயிர்கள் திருவருளைக் கூடும்படி கொடி கட்டினேன்' என்பது பொருள்.

இப்படி கட்டளைக் கலித்துறையும், தொடர்ந்து மூன்று வெண்பாக்களும் பாடிய உடனே அனைவரும் அதிசயிக்கும் வண்ணம், தில்லையில், கொடி தானாகவே ஏறியது. கோயிலில் கொடியேறும் பொருட்டுப் பாடப்பெற்றதால், இந்த நூல் 'கொடிக்கவி' என வழங்கப் பெற்றது.

12. நெஞ்சுவிடு தூது

சித்தாந்த அட்டகத்தில் ஒன்றாக வருவது 'நெஞ்சுவிடு தூது'. உமாபதி சிவம், தம்மைத் தலைவியாகவும், தமது ஆசிரியராகிய மறைஞானசம்பந்தரைத் தலைவனாகவும் வைத்து, பிரிந்த தலைவனாகிய அவரிடம் சென்று, அவர் அணிந்துள்ள கொன்றைமலர் மாலையை வாங்கிவரும்படி தமது நெஞ்சத்தை தூதாக விடுக்கும் முறையில் பாடியது 'நெஞ்சு விடு தூது'. கலிவெண்பா யாப்பில் அமைந்த இப்பிரபந்தத்தில், குருவே சிவம் என்ற தெளிவுடன் மறைஞான சம்பந்தரை உமாபதி சிவாசாரியார் உளம் கசிந்து போற்றியுள்ளார்.

'தூது' என்பது தமிழ் மொழியில் வழங்கும் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். தலைவி தலைவனிடம், உயர்திணைப் பொருளை அல்லது அஃறிணைப் பொருளை தூதாக அனுப்பித் தன் குறையைச் சொல்லும் அமைப்பினை உடையது. தலைவன் பெருமையையும், தூதுக்குரிய பொருளின் தன்மையையும் விவரித்து, உவமை உருவகம் முதலிய அணிநலன்களோடு, கலிவெண்பாவினால் பாடப்படுவதாகும்.

தலைவன் தனது மாலையைத் தலைவிக்கு கொடுத்து அனுப்பு வானாயின், அவளிடத்தில், தான் தவறாது வந்து சேர்வான் என்பது அக் காலத்து நம்பிக்கை. அதனாலேயே, தூது அனுப்பும் தலைவி, தலைவனது

மாலையை எப்படியாவது கேட்டு வாங்கி வந்துவிடவேண்டும் என்று சொல்லி அனுப்புவது வழக்கம். இதே முறையிலேயே இந்த நூலிலும் கூறப்பட்டுள்ளது. இறைவனிடம் தமது உள்ளத்தை கிளி போன்றவற்றின் உருவமாகக் கருதி தூது அனுப்புவது வழக்கம். இங்கு ஆசாரியர், தமது நெஞ்சையே தூது அனுப்புகிறார். உமாபதி சிவம் அருளிச் செய்த நெஞ்சுவிடு தூதின் கருத்து முழுவதையும், மிகச் சுருக்கமாகக் கொண்டு அமைந்தது இதன் இறுதியில் காணப்படும் ஒரு தனி வெண்பா:

வெம்பும் பிறவி அலை வீழாமல் வீடளிக்கு
சம்பந்த மாமுனிவன் தார் வாங்கி - அம்புந்தும்
வஞ்சமேவும் விழியார் வல்வினை எல்லாம் அகல
நெஞ்சமே வாராய் நினைந்து. ✝ [90]

13. உண்மைநெறி விளக்கம்

சித்தாந்த அட்டகத்தில் இந்நூலும் அடங்கும். இந்த நூல் சீகாழித் தத்துவநாதரால் செய்யப்பெற்றது என்று சிலர் கூறுவர். ஆயினும் உமாபதி சிவம் அருளிச் செய்ததாகவே கொள்ளப்பட்டு வருகிறது.

சைவ சித்தாந்த நுண்பொருளை நன்கு உணர்ந்த மெய்த் தொண்டர்கள் தங்கள் அருளனுபவத்தில் வைத்துப் பயன்படுவதற்குரிய பத்து அருட் செயல்களை சுருக்கமாகக் கூறுவது இந்நூல்.

1. தத்துவ ரூபம் 2. தத்துவ தரிசனம் 3. தத்துவ சுத்தி 4. ஆன்ம ரூபம் 5. ஆன்ம தரிசனம் 6. ஆன்ம சுத்தி 7. சிவரூபம் 8. சிவதரிசனம் 9. சிவயோகம் 10. சிவபோகம் ஆகிய பத்து காரியங்களையும் இனிது விளக்குவது 'உண்மை நெறி விளக்கம்' ஆகும். இங்கு, அப்பர் பெருமானும் 'பத்து கொலாம் அடியார் செய்கை தானே' என்று கூறுவதும் சுவைத்து உணரத்தக்கதாகும்.

14. சங்கற்ப நிராகரணம்

சித்தாந்த சாத்திரம் பதினான்கில் நிறைவாக உள்ளது 'சங்கற்ப நிராகரணம்'. உமாபதி சிவம் இயற்றிய சித்தாந்த அட்டகத்தில்

எட்டாவதாக வருவது இது. அருணந்தி சிவம் இயற்றிய சிவஞான சித்தியாரின் சுபக்கத்தை ஒத்த நூலாகும். சங்கற்பம் என்றால் கொள்கை. நிராகரணம் என்றால் மறுப்பு. சுருக்கமாக, சமயங்களை கொள்கையாகவும், மறுப்புகளை, ஒவ்வொரு சமயத்திற்கும், அடுத்து, மேல் நிலையில் உள்ள சமயத்தவர், மறுத்துக்கொண்டே வருவதாகவும் முறையாக வைத்து, முடிவிலே, சித்தாந்தத்தைக் கூறியுள்ளார். இது இயற்றப்பட்ட காலம் சாலி வாகன சகம் 1235 (கி.பி. 1313) என்று அறிகிறோம்.

இந்த நூல் எழுந்ததற்கு ஒரு வரலாறு கூறப்படுகிறது.

கி.பி. 1313-ல், தில்லைப் பெருங்கோயிலில், ஆனித்திருவிழா ஆறாம் நாள் தேர்மண்டபத்தில், அடியார்கள் வரிசையாக அமர்ந் திருந்தனர். அவர்களுள் மாயாவாதிகள் ஒரு பக்கத்திலும், மெய்கண்டார் சீடர் ஆகிய சைவசித்தாந்தத் தவச்செல்வர் மற்றொரு பக்கத்திலும் அமர்ந்திருந்தனர். ஐக்கியவாதி முதல், சைவவாதி வரை எண்மர் அமர்ந்திருந்தனர். அப்போது, பிறவித் துயர் நீங்க நன்னெறி அடைய விரும்பிய ஒருவன் அவர்களை அணுகினான். 'வீடு பேறு அடைவதற்குரிய நெறி யாது?' என்று அவர்களிடம் கேட்டான். அப்போது, மாயாவாதி, அவனை அழைத்துத் தன் மதக் கொள்கையைக் கூறினார். அவர் அருகில் இருந்தவர், மாயாவாதியின் கொள்கையை மறுத்துத் தமது கொள்கையைக் கூறினார். இப்படியே அங்கு வீற்றிருந்த எண்மரும் தங்களுக்குள் மாறி மாறி வாதத்தில் ஈடுபட்டனர். அமைதியாக அனைத்தையும் கேட்டு அமர்ந்திருந்த சைவசித்தாந்தத் தவச்செல்வர், அவர்களது கொள்கையில் இருந்த குற்றங்களை சுட்டிக் காட்டி, சைவ சித்தாந்த உண்மையை வலி யுறுத்தினார். இவ்வாறு, பிரமாணப் பொருள் விளக்கம், பிறர் கொள்கை மறுத்துத் தம் மதம் நாட்டல், பிறர் கோள் மறுத்தல், ஏதுக் கூறல், உவமை யால் விளக்கம் என்பவற்றுக்கு இணங்க, அருளை அடைய விரும்பும் அன்பர் மருள் அடையாது, தெளிவான வகையில் அறிவுறுத்தும் நூல் 'சங்கற்ப நிராகரணம்'.

> தராவலயத்ததுள்ளோர்கள் தந்த சங்கற்ப
> நிராகரணம் என்னால் நிகழ்த்தும் - பிராணைஇனி

வெம்பந்தம் நீங்கத் தொழுமின் வியன் மருதச்
சம்பந்தன் வந்தருளுந் தான்.

—'பூவுலகில் வாழும் சமயவாதிகள் கூறும் கொள்கைகளையும் அவற்றின் மறுப்புக்களையும் அடியேனைக் கொண்டு ஒரு நூலாக வெளியிட்ட பெருமான் எனது குருவாகிய மறைஞான சம்பந்தராவார். உங்கள் பிறவிப் பிணி அகல அவரை வணங்கிப் போற்றுங்கள். அப்படித் தொழுதால், மருதூர் தலைவராகிய குரு முதல்வர் எழுந்தருளி உங்கள் ஐயங்களை அகற்றி மெய்யுணர்வு வழங்கி அருள்வார்', என்று நூலின் இறுதியில் அமைந்த வெண்பாவின் மூலமாக நமக்கு உணர்த்துகிறார் உமாபதி சிவம்.

ஞானாமிர்தம் என்னும் சைவ சித்தாந்த நூல் வாகீச முனிவரால் இயற்றப்பட்டது. ஆனால் 14 சைவ சித்தாந்த நூல் வரிசையில் இது சேர்க்கப்படவில்லை.

அடுத்தப் பக்கத்தில் 14 சைவ சித்தாந்த நூல்கள், அவற்றை இயற்றிய ஆசிரியர்கள், நூல் எழுந்த காலம், அந்நூல்களில் அமைந்துள்ள பாக்களின் எண்ணிக்கை மற்றும் யாப்புவகைப் பற்றிய ஒரு அட்டவணை தந்துள்ளோம்.

பின்குறிப்பு:

சுவாமி விவேகானந்தர், சிகாகோ சென்று திரும்பியவுடன், சென்னையில் திரு ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை மற்றும் சோமசுந்தரநாயகர் ஆகியோருடன் சைவசித்தாந்த மெய்ப்பொருள்களைப் பற்றி பேசி மகிழ்ச்சி அடைந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஆக, இது வரையிலும் கூறப்பட்டுள்ள சைவசித்தாந்த கருத்துக்கள் அனைத்தும், சைவசித்தாந்த அறிஞர் பெருமக்கள், ஆராய்ந்து அறிந்து எழுதிய, கட்டுரை தொகுப்புகள் பலவற்றிலும் இருந்தும், தொகுக்கப்பட்டவை ஆகும். இது குறித்து மேலும் அறிய, அந்தந்த நூற்களை தகுந்த சைவ சித்தாந்த ஆசாரிய பெருமக்கள் மூலமாக நன்கு கற்றுணர்ந்து பயன் அடைய வேண்டுகிறோம்.

தொடர் எண்	சித்தாந்த நூல் பெயர்	சித்தாந்த நூலாசிரியர் பெயர்கள்	நூலெழுந்த காலம் (கி.பி)	நூல்களில் அமைந்துள்ள பாக்களின் எண்ணிக்கை	யாப்புவகை
1	திருவுந்தியார்	திருவியலூர் உய்யவந்ததேவ நாயனார்	1148	45	கலித்தாழிசை
2	திருக்களிற்றுப்படியார்	திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்	1178	100	வெண்பா
3	சிவஞானபோதம்	மெய்கண்டதேவர்	1232	12+1+1+81=95	(அகவல்) நூற்பா + வஞ்சிப்பா+வெண்பா
4	சிவஞான சித்தியார்	அருணந்தி தேவர்	1253	602+27=629	ஆசிரியவிருத்தம் + கலிவிருத்தம்
5	இருபா இருபஃது	அருணந்தி தேவர்	1253	10+10=20	வெண்பா + ஆசிரியப்பா
6	உண்மை விளக்கம்	திருவதிகை மனவாசகங் கடந்தார்	1255	54	வெண்பா
7	சிவப்பிரகாசம்	உமாபதி சிவாசாரியர் (சித்தாந்த அட்டகம்)	1313	100	ஆசிரியவிருத்தம்
8	திருவருட்பயன்		1313	101	குறள் வெண்பா
9	வினா வெண்பா		1313	13	வெண்பா
10	போற்றிப் பஃறொடை		1313	190 அடிகள்	பஃறொடைவெண்பா
11	கொடிக்கவி		1313	3+1=4	வெண்பா + கட்டளைக் கலித்துறை
12	நெஞ்சுவிடு தூது		1313	258 அடிகள்	கலிவெண்பா
13	உண்மைநெறி விளக்கம்		1313	6	ஆசிரியவிருத்தம்
14	சங்கற்ப நிராகரணம்		1313	21	ஆசிரியப்பா

௨. திருக்கயிலாய மெய்கண்டார் சந்தானப் பரம்பரை

ஸ்ரீகண்ட பரமேசுவரன்

↓

திருநந்திதேவர்

↓

சனற்குமாரர்

↓

சத்திய ஞான தரிசனிகள்

↓

பரஞ்ஜோதி முனிவர்

(திருநந்திதேவர் முதல் பரஞ்ஜோதி முனிவர் வரை) — அகச்சந்தானாசாரியர்

பரஞ்ஜோதி முனிவர்

↓

மெய்கண்டதேவர்

↓

அருணந்தி சிவம்

↓

மறைஞான சம்பந்தர்

↓

உமாபதி சிவாசாரியர்

(மெய்கண்டதேவர் முதல் உமாபதி சிவாசாரியர் வரை) — புறச்சந்தானாசாரியர்

இவர்களைத் தொடர்ந்து, திருக்கயிலாயப் பரம்பரையாக, சைவ ஆதீன மடங்கள் தோன்றி, சைவ சமயக் கொள்கைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும், இன்றளவும் போற்றி பாதுகாத்து வருகின்றன.

3. தாயுமானவ சுவாமிகள் அருளிய குரு மரபின் வணக்கம்

துய்ய கரமலரால் சொல்லாமல் சொன்னஉண்மை
ஐயனைக்கல் ஆல்அரசை யாம்அணைவது எந்நாளோ!

தூய்மையான கர மலர்களைக் கொண்டு, வாயால் சொல்லாமல், சின்முத்திரைக் குறிப்பினால் காட்டி, உண்மையை அருளிச்செய்த தட்சிணா மூர்த்தியை, கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளியிருக்கும் தலைவனை நாம் அடைவது எந்நாளோ!

சிந்தையினுக்கு எட்டாத சிற்சுகத்தைக் காட்டவல்ல
நந்தி அடிக் கீழ்க்குடியாய் நாமணைவது எந்நாளோ!

சிந்தைக்கு எட்டாத சிவ பரம்பொருளை அடையத் தக்க ஞானத்தை அருளக்கூடிய நந்தியம்பெருமான் திருவடியின்கீழ் அடிமையாய் இருக்க நாம் அணைவது எந்நாளோ!

எந்தை சனற்குமரன் ஆதிஎமை ஆட்கொள்வான்
வந்த தவத்தினரை வாழ்த்தும்நாள் எந்நாளோ!

எம் தந்தையான சனற்குமாரர் முதலாக எம்மை ஆட் கொள்ளும் பொருட்டு வந்த தவ முனிவர்களை வணங்குவது எந்நாளோ!

பொய்கண்டார் காணாப் புனிதம்எனும் அத்துவித
மெய்கண்ட நாதன்அருள் மேவும்நாள் எந்நாளோ!

பொய்யான நெறியினர் காண இயலாத தூயது என்னும் அத்துவித உண்மையை உணர்ந்த மெய்கண்ட சிவனாரின் திருவருளைப் பொருந்துவது எந்நாளோ?

பாதிவிருத்தத்தால் இப்பார்விருத்தம்ஆக உண்மை
சாதித்தார் பொன்அடியைத் தான்பணிவது எந்நாளோ!

'சிவஞான சித்தியார்' என்ற நூலின் எட்டாம் சூத்திரம் முப்பதாம் செய்யுளின் முதல் இரண்டடியான பாதி விருத்தத்தினால் இவ்வுலகம் பயன் அற்றது என்று தோன்றும்படி உண்மையை எடுத்துக் கூறிய சகலாமபண்டிதர் என்னும் அருணந்தி சிவாசாரியாரின் அடிகளை வணங்குவது எப்போது?

சிற்றம்பலம் மன்னும் சின்மயர்ஆம் தில்லைநகர்க்
கொற்றம் குடிமுதலைக் கூறும்நாள் எந்நாளோ!

சிற்றம்பலத்தில் நிலைபெற்ற ஞானவடிவினரான மறைஞான சம்பந்த தேசிகரை வணங்குவது எந்நாளோ!

குறைவுஇல்அருள் ஞானமுதல் கொற்றங் குடிஅடிகள்
நறைமலர்த்தாட்கு அன்புபெற்று நாம்இருப்பது எந்நாளோ!

குறைவில்லாத திருவருள் ஞானத்திற்கு முதலான 'கொற்றவன் குடி உமாபதி சிவத்தின்' தேன் நிரம்பிய தாமரை மலர் போன்ற திருவடிக்கு அன்பு செய்தலைப் பெற்று நாம் இருப்பது எப்போது?

நாள்அவங்கள் போகாமல் நன்னெறியைக் காட்டிஎமை
ஆளவந்த கோலங்கட்கு அன்புவைப்பது எந்நாளோ!

எம் நாட்கள் வீணே கழியாமல் நல்ல நெறியைக் காட்டி எம்மை அடிமையாகக் கொள்ள எழுந்தருளிய மெய் கண்ட பரம்பரையில் வந்த திருக்கோலங்களுக்கு அன்பு செலுத்துவது எந்நாளோ!

என்அறிவை உள்அடக்கி என்போல் வரும்மவுனி
தன்அறிவுக்கு உள்ளேநான் சாரும்நாள் எந்நாளோ!

என் அறிவை ஐம்பொறிகளின் வழியே செல்ல விடாது அடக்கி என்னைப் போலவே மனித வடிவம் கொண்டு வந்த மவுன குருவின் திருவருள் நிறைவிலே அடியேன் கலந்திடும் நாள் எந்நாளோ!

ஆறுஒன்றை நாடின்அதற்கு ஆறும்உண்டாம் என்றுஎமக்குக்
கூறும் மவுனிஅருள் கூடும்நாள் எந்நாளோ!

ஆறுவகைப்பட்ட சமயங்களில் ஒன்றைச் சார்ந்தால், அதற்கேற்ப பயன் உண்டாகும் என்று எனக்கு உரைத்தருளிய மவுன குருவின் திருவருளை அடையும் நாள் எந்நாளோ!

நில்லாமல் நின்றுஅருளை நேரேபார் என்றஒரு
சொல்லாமல் மவுனிஅருள் தோற்றும்நாள் எந்நாளோ!

'தன்னறிவு முனைப்புடன் நில்லாது அருள் முனைப்பாம் அறிவு மயமாய் நின்று திருவருளைக் குறிப்பாய் நோக்குவாய்' என்பதைச் சொல்லாமல் மவுன குரு அருளும் நாள் எந்நாளோ?

வைதிகம்ஆம் சைவ மவுனிமவு னத்துஅளித்த
மெய்திகழ்ந்துஎன் அல்லல் விடியும்நாள் எந்நாளோ!

வைதீக சைவ நெறியுடைய மவுன குரு மோன நிலையில் நின்று உணர்த்திய உண்மைப் பொருள் விளங்கித் துன்பம் ஒழியும் நாள் எந்நாளோ?

வாக்குமனம் அற்ற மவுனி மவுனத்து அருளே
தாக்கவும் என் அல்லல்எல்லாம் தட்டுஅழிவது எந்நாளோ!

உலகியலைப் பற்றிக்கொண்டு ஐம்பொறி வழியாய்ச் செல்லும் மனமும், சொல்லும் இல்லாத மவுன குரு மவுன நிலையினின்று அருளிய திருவருள் ஒன்றே என்னிடம் முற்றிலும் பொதிந்து, என் துன்பம் எல்லாம் அழிவது எந்நாளோ?

4. இந்நூலில் வரும் பாடல்களின் பொருள்

பாடல்: அருட்குழகன் .... (பக்கம் v)

பொருள்: அருட்பெரும் இறைவன் சிவபிரான் உறையும் எழில்மிக்க திருக்கயிலையினை முற்றிலும் காவல்புரியும் நந்திபிரானின் திருவடிகள் போற்றி. இறையருளை நந்திபிரானிடம் நேரடியாகப் பெற்று அவரது திருத்தாள்னை தமது உள்ளத் தாமரையில் எப்போதும் வீற்றிருக்கச் செய்தருளும் சனற்குமார முனிவரது இரு திருத்தாள்களும் போற்றி. மலமாகிய இருட்டினை அகலச் செய்யும் சத்திய ஞான தரிசன சுவாமிகளின் இரு சரணங்கள் போற்றி. மயக்கத்தினை அறுக்கும் அரும்சீலரான பரஞ்சோதி குருபரரின் இரு திருத்தாள் மலர்களும் போற்றி.

பாடல்: ஈராண்டில் .... (பக்கம் v)

இரண்டு வயதிலேயே சிவஞானம் பெற்று தெய்வநிலையில் திளைத்த மெய்கண்டாரின் இணைத் தாள்கள் போற்றி தம்மை நாடி வந்த பல்வேறு அடியார்களுக்கு அருள்புரிந்த அருணந்தியாரின் நற்றாள்கள் போற்றி. நீரால் சூழப்பட்ட கடந்தை நகரில் எழுந்தருளிய மறைஞானசம்பந்தர் திருத்தாள்கள் போற்றி. மிகவும் பெருமைமிக்க சைவர்களின் கோயில் என்று போற்றப்படும் தில்லை நகரில் எழுந்தருளிய உமாபதியாரின் சிவந்த தாமரை திருத்தாள்கள் போற்றி.

பாடல்: சிந்திப்பாம் ... (பக்கம் 1)

பொருள்: திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளிய மெய்கண்டதேவரின் திருவடிகளை சிந்தித்து வாழ்த்தி மகிழ்வோம்.

பாடல்: பேயடையா ... (பக்கம் 1)

பொருள்: மூங்கில் போன்ற தோள்கள் கொண்ட உமை அன்னையை இடதுபாகமாகக் கொண்ட திருவெண்காட்டு இறைவனின் திருத்தலத் தீர்த்தமாக விளங்கும் முக்குள நீரில் பக்தியுடன் மூழ்கி நீராடி எழுவார்க்கு

தீயவினைகள் அழியும், பேய்கள் முதலான தீய சக்திகள் பற்றாது, அஞ்ஞானம் அகலும், மக்கட்பேறு கிட்டும், மேலும், அவரவர் விரும்பும் வரங்களையும் பெறுவர், இவற்றில் எவ்வித ஐயமும் வேண்டாம்.

பாடல்: நல் வியாதமுனி ... (பக்கம் 4)

பொருள்: வேதவியாசர் வகுந்தருளிய வேதம் நான்கின் சிறப்பை சீரிய, எளிய முறையில் அனைவரும் உணரும் பொருட்டு புறச்சமயத்தாரும் வியக்கக் கூடிய வகையில் சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தமது முன்னோர்கள் காட்டியருளிய பாதை வழியே சிவஞானபோதம் என்னும் அருமையான நூல் மூலமாக தந்தருள வேண்டி இறையருளால் இந்நிலவுலகத்திலே திரு அவதாரம் செய்தவர் ஸ்ரீமெய்கண்டார்.

பாடல்: பண்டை ... (பக்கம் 13)

பொருள்: பண்டைய மறைகள் மற்றும் இறைவனது திருவடித் தாமரை என்னும் மலர்களிலிருந்து ஒழுகும் பசுந்தேனை சிவனடியார் கூட்டமெனும் வண்டு சூழ்ந்துகொள்ள, அதனின்று பரவும் ஞானம் என்னும் சிவ கந்தம் எங்கும் விரிந்து மணம் வீசி ததும்ப, இதனை உணர்ந்த அடியவர் இதயத் தாமரை மொட்டலர்ந்து அழகாக இதழ்விரிந்து குளிர்ச்சி தரும் வண்ணம், இந்த நிலவுலகில் கதிரவன் உதிக்க தாமரை மலர்வதுபோல, ஞான ஒளி வீச, புத்தம்புதிய அன்றலர்ந்த மலர் சூழும் திருவெண்ணெய் நல்லூரில், அஞ்ஞான இருள் நீக்கும் ஞானக் கதிவரனாக திரு அவதாரம் செய்த சைவசமயக் காவலன், மெய்கண்ட தேவன், தாமரைப் பாதக் கமலங்களை தம்முடைய தலையில் சூடி மகிழும் அடியவர்களுடைய பொற்பாதங்களை எப்போதும் போற்றி வழிபடுவோமாக!

பாடல்: உண்டு சிவன் ... (பக்கம் 15)

பொருள்: உலகிற்கெல்லாம் இறைவனாக சிவபெருமான் விளங்குகிறார் என்பதையும் அவர் உயிர்கள் அனைத்தினுள்ளும் உறைகிறார் என்பதையும் உணர்ந்த அருணந்தி சிவத்தின் பொற்பாதங்களை நினைப்போமாக.

பாடல்: பார் விரித்த ... (பக்கம் 20)

பொருள்: இவ்வுலகிலுள்ள நூல்கள் அனைத்தையும் கற்றுணர்வதைக் காட்டிலும் சிவஞான சித்தியில் ஒரு விருத்தத்தின் பாதியினை கற்றுணர்வதே மேன்மையை தந்துவிடும்.

பாடல்: முப்பொருளின் ... (பக்கம் 21)

பொருள்: உயிர், உலகம், இறைவன் ஆகியவற்றின் இயல்பை ஒன்றாகச் சொல்லாது, தனித்தனியே பிரித்தெடுத்து, அதன் தன்மைகளை, சிவாகமங்களின் பொருள் விளங்க, வெவ்வேறு முறையாக, விரிவாக எடுத்துரைத்து, மெய்கண்டாரது சிவஞானபோதத்தின் பொருள் விளங்க, அனைவரும் உய்த்து உணர, யாப்பிலக்கண முறை வழுவாமல், சிவஞான சித்தியார் என்னும் அற்புதமான வழிநூலைப் படைத்தளித்து, பின்னாளில் சாத்திரம் கற்க விரும்புபவருக்கு ஒரு முன் நூலாகத் தெளிவாகப் படைத்தருளிய அருணந்தி சிவனாரின் அடித்தாமரை மலர்களை வணங்கி போற்றி வழிபடுவோமாக!

பாடல்: அருளில் ... (பக்கம் 30)

பொருள்: திருவருள் துணையினாலேயே பிறவி வாய்த்தது. அவ்விதம் வாய்த்தப் பிறவி வளர்ந்ததும் திருவருளாலேயே ஆகும். இவ்விதம் திருவருளால் பிறந்த உடம்பு திருவருளின் ஆணைப்படி வாழ்ந்து மறைந்து மடிகிறது. இவ்விதம் தோன்றி வளர்ந்து வாழ்ந்து மறையும் ஆறு உயிர்களுக்கு திருவருள் பேறாகிய சிவானந்த அமுதத்தை ஊட்டிவிடும் பரம்பொருள் திருவருள் துணையாலேயே என் உள்ளம் புகுந்தார்.

பாடல்: வாய்ந்த புகழ் ... (பக்கம் 31)

பொருள்: தெய்வ மகிமை பெற்ற மெய்கண்ட தேவரின் சீடரான அருணந்தி தேவர், கொற்றவன் குடியில் வாழ்கின்ற, பல கலைகளைக் கற்று ஓதி, தம்மிடம் வந்து சரணடைந்த உமாபதி தேவருக்கு ஞானத்தை அருளியவர். அவர் திருக்கடந்தையில் எழுந்தருளியவர். மேலும், தவத்தால் உயர்ந்தவர். அத்தகைய மறைஞான சம்பதரின் இருமலர் தாள்களை எப்போதும் வழிபடுவோம்.

பாடல்: பார்திகழ ... (பக்கம் 31)

பொருள்: பராசர மாமுனிவர் வழிமரபில், சாமவேதியர் குடிப்பிறப்பில், உலகம் உய்ய அவதரித்தவர் மறைஞானசம்பந்தர். மரபுவழி வந்த சித்தாந்த இயல் கருத்துக்களைத் தெளிவர எனக்குத் தந்தருளி ஆட்கொண்ட சைவ சிகாமணி. மேகங்கள் சூழ இறைத் தென்றல் வாசம் வீச, நெடிதுயர்ந்த மதில் சூழ்ந்த, கடந்தை நகர் திருக்கோயில் வளாகத்தை என்றென்றும் விட்டகலாத, இறைவன் என்னும் பற்றினை விடாமல் கொடிபோல் பற்றிக்கிடந்த, எம் ஞான தந்தையான மறைஞானசம்பந்தர் திருவடி என்னும் பொற்பாதக் கமலங்களை விடாது பற்றி, எம் தலைமேல் வைத்து, சிரம்தாழ்ந்த வணங்கிப் போற்றுவாம்!

பாடல்: பேணு தத்துவங்கள் ... முழுப் பாடல் வரிகள் கீழே தரப்பட்டுள்ளன (பக்கம் 41)

நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
பேணு தத்துவங்கள் என்னும் பெருகு சோபானம் ஏறி
ஆணையால் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீள்நிலை மலையை ஏறி நேர்படச் செல்லும் போதில் (752)

பொருள்: நாணனும் (கண்ணப்பநாயனார்) தம்மிடம் உண்டான பேரன்பும் குளிர்ச்சிப் பொருந்திய அம்மலையின் முன்பாக ஏறிச்செல்ல, அவற்றின் பின்னே ஆன்மாக்களால் விரும்பப்படும் தத்துவங்கள் என்று சொல்லப்படுகின்ற பெரியப் படிகளின் வழியே ஏறி, இறையருளால் சிவபெருமானைச் சென்றடைய, சிற்பரச் செல்வர்களான 'ஐயர்' போன்று கண்ணப்பநாயனார், திருக்காளத்தி ஈசன் வீற்றிருக்கின்ற, நீண்ட தொடர்களைக் கொண்ட அத்திருமலையின்மீது ஏறி, நேராகச் சென்றார்.

பாடல்: மதிமலி புரிசை ... (பக்கம் 45)

பொருள்: சந்திரனைத் தலையில் கொண்டு விளங்கும் சிவபெருமானை போன்று அந்த சந்திரனையே முட்டுமளவு தவழும் மதில்களும் மாடங்களும் கூடி விளங்கும் நகராகிய மதுரையில் நிலவின் கதிர்கள் பயில்கின்ற பொழிலில் குற்றம் களைந்து குணம்கொள்ளும் அன்னப் பறவை போன்று

வெண்ணீறு அணிந்து வாழ்கின்ற அடியார்கள் மிகுந்துள்ள ஆலவாயில் உறையும் சிவனாகிய யாம் தரும் மொழி மாற்றம் யாதெனில்,

கார்கால பருவகாலத்து மேகம் பொழிவதுபோல் நீயும் உரிமையோடு, உரிமையாய்ப் புலவர்களுக்குக் கைமாறு கருதாமல் உதவுகின்ற உயர்ந்த பணிகளை வாரி வழங்கிடும் ஒளிபொருந்திய சந்திரன் போன்ற குடையின் கீழ் போரில் யானையைச் செலுத்துகின்ற சேரமான் காண்க! 'பண்பால் யாழ்பயிலும் பாணபத்திரன் உன் போல் என்பால் அன்பு கொண்டவர். உன்னைக் காண வருகின்றார். அவர் மகிழும் வண்ணம் மிகுதியான பொருள் கொடுத்து அனுப்புவதே உன் கடன்'.

பாடல்: அடியார்க்கு ... (பக்கம் 46)

பொருள்: அடியார்களுக்கு எளியவனாகிய தில்லை சிற்றம்பலவன் கொற்றங்குடியில் வாழும் உமாபதி சிவத்திற்கு எழுதிய கைசீட்டு என்னவெனில், இந்த சீட்டில் உள்ளபடி பெற்றான் சாம்பானுக்கு பேதங்கள் காணாமல் தீட்சை அளித்து, முக்தி கொடுப்பதே முறை.

பாடல்: அடியார்க் கெளியன் ... (பக்கம் 52)

பொருள்: 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு அடியேன்' என்று சுந்தரருக்கு அடியெடுத்து அருளிய பெருமான், உமாபதி சிவத்திற்கு அளித்த ஓலையில் 'அடியார்க்கு எளியன்' என்றே குறிப்பிட்ட எளியத் தன்மையை, பெருங்கருணையாளன் தந்தருளிய திருமுகத்தின் பெருமையை என்னென்பேன்! இந்தத் திருமுகத்தில் குறித்தருளியபடியே, பெற்றான் சாம்பன் என்னும் அடியவருக்கு அந்தக் கணத்திலேயே முத்திபதம் தந்தருள, உடல் ஒளியாகி இறைவனோடு கலந்திட, மேலானதொரு அருட்பார்வையினாலேயே சட்சு தீட்சையைத் தந்தருளிய, கொற்றங்குடி வாழ் சந்தானாசாரியராகிய உமாபதி சிவத்தின் திருக்கமல பாத மலரை வணங்கிப் போற்றுவோமாக!

பாடல்: கற்பன கற்று ... (பக்கம் 53)

பொருள்: கற்க வேண்டிய ஞான நூல்களைக் கற்றறிந்து, பதினாறு சந்திரக் கலைகள் பொருந்திய உண்மையான சிவயோகம் முதலான பத ஞானங்களை

முறைப்படி அடையப் பெற்று, சமாதி நிலைகூடப் பெற்று, மல மயக்கங்கள் நீங்கப் பெற்று, மேன்மை தருவதான சிவப்பரம்பொருளை உள்ளத்துள்ளே கண்டு உணர்ந்தவர்களே சைவ சித்தாந்திகள் என்று கூறக் தக்கவர்.

பாடல்: பதி பசு பாசம் ... (பக்கம் 54)

பொருள்: தலைவன், உயிர்க்குலம், உயிர்க்குலத்தைப் பற்றியிருக்கும் பந்தங்கள், என்று சொல்லப்படும் மூன்றுள், இறைவனைப் போலவே, அவன் படைத்த உயிர்களும், அவற்றைப் பற்றியிருக்கும் பந்த பாசங்களும், மிகப் பழமையானவை. ஆனால் தலைவனாகிய இறைவனை ஆன்மாக்கள் அணுகுவதில்லை; காரணம்- அவற்றைப் பற்றியுள்ள பந்தங்கள். ஆனால், இந்த ஆன்மாக்கள் தலைவனாகிய பதியை நெருங்கினால், அவற்றைப் பீடித்த பாசம் நிற்காது. விலகிப் போகும்.

பாடல்: அகளமாய் ... (பக்கம் 60)

பொருள்: திருவுருவம் இல்லாததும் ஒருவராலும் அறிய முடியாத அருளை உடையதாகவும் விளங்குகின்ற சிவம் ஆசாரியர் வடிவமாக எழுந்தளியுள்ளது என்று கருதி உந்தீ பற. அத்தகைய எழுந்தருளியுள்ள தன்மை தானாகவே அருள் வழங்குவதற்காகக் கருணையினால் வந்தது என்று உந்தீ பற.

பாடல்: வைய முழுதும் ... (பக்கம் 61)

பொருள்: உய்ய வந்த தேவனார் அருளிச்செய்த இந்த நூல் ஆன்மாக்களைப் பாசக்கடலில் இருந்து கரையேற்றி இறைவனின் திருவடிப் பேற்றில் செலுத்தும் தோணியாகும். எனவே இந்நூலை நல்லாசிரியர் மூலம் கேட்டு உணர்ந்தவர்கள் மெய்பொருள் உணர்ந்தவர்கள் ஆவர்.

பாடல்: வேண்டுங்கால் வேண்டும் ... (பக்கம் 62)

பொருள்: வேண்டின் வேண்டும் பிறவாமை என்று திருவள்ளுவர் கூறியபடி இறைவனிடத்தில் வேண்டுவது பிறவாமை மட்டுமே. அப்பிறவாமையும் ஆசை அறுப்பதினால் உண்டாகும் என்று திருவள்ளுவரே கூறியிருப்பதால் இறைவனிடத்தில் வேண்டும்போது ஆசையற்ற நிலையையும் சேர்த்து வேண்டிக்கொள்ள வேண்டும்.

பாடல்: அன்பே என் ... (பக்கம் 62)

பொருள்: சிவபெருமானை நோக்கி அன்பே என்றும் என் அன்பே என்றும் அன்பினாலே அழுது அரற்றி, அச்சிவபெருமானின் அன்பே தனக்கு அன்பாகக் கொண்டு தன்போதத்தைக் கெடுத்து வழிபடுவது அன்பு வழிபாடு. அந்த அன்பு இன்றி தீர்த்தங்கள் ஆடியும் தியானங்கள் செய்தும் சிவார்ச்சனைகள் செய்தும் வழிபட்டாலும் பயன் அளிக்காது.

பாடல்: மோகம் ... (பக்கம் 62)

பொருள்: 'பெண்ணாசை அறுத்தால் நாம் முக்தி அளிப்போம்' என்று தம்மால் முன்பு கூறப்பட்ட ஆகமங்கள் முழுமையிலும் கூறிய சிவபெருமானையே தன் மனைவியாகிய பரவையின் பால் தூதாக அனுப்பிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தொண்டினை, நன்று என்று சொல்லுவதா அல்லது தீது என்று சொல்லுவதா, எவ்விதம் சொல்வது!

பாடல்: நாற்பதடியால் ... (பக்கம் 63)

பொருள்: நாற்பது அடியால் இருநூற்றுப் பதினாறு எளிமையான நன்மை தரும் சொற்களால் அறுநூற்று இருபத்தி நான்கு எழுத்துக் களால் சமயக் கொள்கைகள் அனைத்தும் ஒன்றுபடுத்தி அமைந் திருக்கும் 'சிவஞான போதம்' என்னும் செம்மை நூல் போன்று வேறொரு நூல் எங்கும் இல்லை என்று சொன்னால், அது தவறு என்று சொல்பவர் யார் உள்ளார்?

பாடல்: செம்மலர் ... (பக்கம் 64)

பொருள்: அன்பர்களை தாங்குகின்ற, சிவந்த தாமரை மலர்போன்ற, இறைவனின் திருவடிகளை அடைய விடாமல் தடுக்கின்ற, மும்மலங்களின் அழுக்கினை, ஞான நீரால் கழுவி, மெய்யடியார்களுடன் கலந்துகூடி, மலங்களால் விளையும் மயக்கம் நீங்க, இறையன்பர்களாகிய அடியார்களின் சிவவேடத்தையும், சிவாலயத்தையும், இறைவன் எனக் கண்டு ஜீவன் முக்தர்களாகிய உயிர்கள் வழிபடும்.

பாடல்: பண்ணில் ... (பக்கம் 66)

பொருள்: பண்ணில் ஊறிய இசை, பழத்திலும் இன்சுவையாக எனக்கு விளங்குவது போன்று, என்னுள்ளே ஊறி, எனக்கே ஆனந்தத்தை அளிக்கும் நின்னை, அடியவன் நினைக்க நினைக்க எண்ணினால் நீயும் என்னை நினைந்து நினைந்து அருளுகின்றீர். அவ்விதம் அடியவன் நினையாவிட்டால் நீங்களும் என்னை நினையாமல் விட்டுவிடுகின்றீர். அத்தகைய ஈசன் என்னுள் இருந்த இயற்கையை என்னவென்பது!

பாடல்: உன்னில் உன்னும் ... (பக்கம் 67)

பொருள்: அடியார்கள் உன்னை நினைத்தால் நீயும் அவர்களை நினைத்து அருள்கின்றாய். இந்த உண்மையை அந்த அடியார்கள் மூலம் உரைத்து அருளியுள்ளாய். அத்தகைய மொழியை நான் மறைமொழியாக என் உள்ளத்தில் கொண்டு அந்த நல்ல நெறியை சேர்வது எந்த நாளோ!

பாடல்: எண்திசை ... (பக்கம் 67)

பொருள்: எட்டு திசைகளும் விளங்குமாறு என்னிடத்தில் உள்ள மலமாகிய இருள் திரையை நீக்கி என்னுடைய மனத்தாமரையையும் மலர்வித்துக் கால எல்லைக்கு அப்பாற்பட்ட உன்னுடைய திருவருளையும் அடியேனுக்குத் தந்து இவ்வுலகில் தோன்றி அருளிய மெய்கண்ட தேவரே, குற்றமற்ற அமுதக் குணப் பெருங்குன்றே, எல்லா இடத்திலும் நீக்கமற நிற்கின்ற நீர் என்னோடு ஒரு நேரத்தில் கூடியும், பிரிதோர் நேரத்தில் பிரிந்தும் இருப்பது எதனாலோ? கூறியருளுங்கள். நீ நினைக்கும்போது கூடியும், நீ நினையாதபோது நீங்கியும் இருப்பது எம்முடைய இயல்பு என்று நீங்கள் கூறுவீர்களேயானால் நீங்கள் எனக்கு ஏவல் தொழிலைச் செய்கின்றவராக ஆகிவிடுவீர்கள்.

பாடல்: மன்னதிகை ... (பக்கம் 68)

பொருள்: மண்ணில் சிறந்த திருவதிகை தலத்தில் வாழும் மனவாசகம் கடந்தார், இவ்வுலகமாகிய மண்ணில் உலக வாழ்க்கை வாழாத மெய்கண்டாரின் சீடர். பன்மறைகளுக்கு வளமைத் தருகின்ற ஆகம நூலிலே

இறைவன் அருளிச் செய்து வைத்த பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளின் உண்மை வழுவாமல் இந்த உண்மையை விளங்கச் செய்தார் என்பதைக் காண்.

பாடல்: ஆறாறு ... *(பக்கம் 68)*

பொருள்: முப்பத்தாறு தத்துவம் யாது? அனாதியிலிருந்து உயிரைவிட்டு நீங்காத ஆணவ மலம் யாது? மாறாத வினை யாது? இம்மலங்களுக்கு வேறாகாமல் ஒன்றுபட்டு நிற்கும் என்னுடைய நான் என்னும் இயல்பு யாது? குருவாகிய உன் இயல்பு யாது? இறைவன் இயற்றும் நடனத்தின் இயல்பு யாது? ஐந்தெழுத்தின் இயல்பு யாது? முக்தியின் இயல்பு யாது? தேசிகரே இதற்கு விடை அருளுங்கள்.

பாடல்: ஒளியான திருமேனி ... *(பக்கம் 69)*

பொருள்: ஒளி பொருந்திய திருமேனியும், முகத்தில் ஒழுகுகின்ற மதநீரும், மிகுதியான மகிழ்வும் பொருந்தி, வணங்குகின்ற அடியவர் முன் எழுந்தருளுகின்ற, யானை முகத்து விநாயகரின் திருவடிகளை, நாளும் மறவாமல், வண்டுகள் ஒலிக்கின்ற, மலர்கள் தூவி வழிபடுகின்ற, அடியவர்களின் உள்ளம், அஞ்ஞானமாகிய இருள் நீங்கி ஞானத்தைப் பெறும். அவர்களுக்கு கொடியதான வினை சேரவும் நினையாது.

பாடல்: வெம்பும் பிறவி ... *(பக்கம் 74)*

பொருள்: பிறவியாகிய அலையில் வெந்து வீழாமல் முக்தியினை அளிக்கும் மறைஞான சம்பந்த மாமுனிவரின் மாலையினை வாங்கி வருவாயாக. மேலும், வஞ்சனையில் தோய்ந்த அம்புபோன்ற மகளிர் விழியில் விழுந்துவிடாமல் கொடிய வினையெல்லாம் அகல, மனமே அவரை நினைப்போம் வாராய்.

5. துணை நூல்கள்

1. தருமையாதீனம் 26-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது அருளுரைகள்.

2. 'ஞானசம்பந்தம்' (தருமை ஆதீனம் ஆன்மீகத் திங்கள் வெளியீடு) இதழில் வெளியான சைவசித்தாந்த கட்டுரைகள் (ந.ரா. முருகவேள், கா.சு. பிள்ளை, வை. இரத்தின சபாபதி, இரா. செல்வகணபதி, சி. அருணைவடிவேலு முதலியார், கா. வெள்ளைவாரணனார், சொ. சிங்கார வேலன், மு. குஞ்சிதபாத தேசிகர், வை. முருகேசன், கு. சுந்தரமூர்த்தி, சோ. ந. கந்தசாமி, மு. சிவச்சந்திரன், திருநெல்வேலிப்பேட்டை ஆ. ஈசுவரமூர்த்திப் பிள்ளை, கோமதி சூரியமூர்த்தி, ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் மற்றும் பல சைவ சித்தாந்த சாத்திர முனைவர் அறிஞர் புலவர் பெருமக்கள் எழுதியவை)

3. சைவ சமய சந்தானக் குரவர் வரலாறு (பல்வேறு நூல்களின் தொகுப்பு)

4. சைவ சித்தாந்த நூல்கள் (பல்வேறு வெளியீடுகள்)

5. மெய்கண்டார் வரலாறு (ச. அரங்கசாமிப் பிள்ளை, விருத்தாசலம்-1954 வெளியீடு)

6. சிவஞான பூஜா மலர் (ஆங்கீரஸ சு. வேங்கடேச சர்மா)

7. சிதம்பரம் தேவஸ்தான அறங்காவலர் பூஜாஸ்தானீகர் அருள்திரு சி. சிவராஜ தீட்சிதர் அவர்கள் தொகுத்தருளிய சைவசமய சந்தானாசாரியர் புராணச் சுருக்கம்.

8. அனைத்துலக வைச சித்தாந்த முதல் கருத்தரங்கம் விழா மலர் (தருமையாதீனம்—1984)

6. கலைச்சொற்கள்

அடங்கன்முறை: பன்னிரு திருமுறைகளில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரப்பதிகங்கள் முதல் ஏழு திருமுறைகள் ஆகும். இவை முறையே கீழ்வரும் வகைகளாக அமைக்கப்பட்டுள்ளன.

1. **பண்முறை**—பண் வரிசை வாரியாகத் திரட்டப் பெற்று ஒன்று முதல் ஏழு திருமுறையாகத் தொகுக்கப்பட்டது முதலாவதாகும். இது பண்முறை எனப்படும்.

2. **அடங்கன் முறை**—திருத்தலங்கள் வாரியாக மூவர் தேவாரம் தொகுக்கப்பட்ட முறை இரண்டாவதாகும். இது அடங்கன் முறை எனப்படும்.

3. **தலமுறை**—மூவரில் ஒவ்வொருவர் பதிகங்களையும் தனித்தனியாக வைத்து, தலங்கள் வாரியாகத் தொகுத்த முறை மூன்றாவதாகும். இது தலமுறை எனப்படும்.

அடிசேர் ஞானம்: குருவின் மூலமாக பரிபூரணஞானம் அடையப் பெறுதல்.

அனுட்டானம்: மனம், வாக்கு, காயம், அறிவு ஆகிய நான்கும் இணைந்து வைதீக கருமங்களை, அக்கினி வளர்த்து ஆகுதி இடுவது முதலான நித்ய கடமைகளைத் தவறாமல் செய்வது.

அந்தாதி தொடை: முதல் பாடலின் இறுதி வரியும் அடுத்த பாடலின் தொடக்க வரியும் ஒன்றாக அமைவது அந்தாதி தொடை.

தீட்சை: தீட்சை என்பது உயிருக்குப் பாசத்தை (பற்றை) கெடுத்து மெய்யுணர்வை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை அளிப்பது. இதில் ஏழுவகை தீட்சைகள் உள்ளன. அவை மனம், வாக்கு, காயம், அறிவினால் செய்யப்படுகின்றன.

1. *சட்சு தீட்சை (திருநோக்கு)*—மீன் தன் முட்டைகளைப் பார்த்தல் போல பக்குவமுற்ற உயிரை தன்னைப் போலவே ஆக்கும் ஆசானது அருட்பார்வை.

2. ஸ்பரிச தீட்சை (பரிசம்)—முட்டையை தம் சிறகால் பறவை தொடுதல் போல சீடனைத் தம் கரசரணங்களால் தொடும் முறை.

3. மானச தீட்சை (மனம்)—ஆமை கரையில் இட்டிருந்த முட்டையை நினைத்தல்போலச் சீடனைத் தம் ஞான சொரூபமாகக்கொள்ளும் குருபாவனை.

4. வாக்கு—பஞ்சாட்சர முதலிய மந்திரங்கள் பொருளுடன் உபதேசித்தல்.

5. நூல்—சித்தாந்த சாத்திரங்கள் வாயிலாக முப்பொருள் இயல்பை விளங்கச் செய்து அவற்றால் அக இருளைத் தீர்த்தல்.

6. யோகம்—ஆறாதார யோகம், அட்டாங்க யோகம் முதலியவற்றை பண்ணுவித்தல்.

7. ஔத்திரி—தீ வளர்த்து ஓமத்தோடு செய்யக்கூடிய தீட்சை. ஹோதம் என்றால் ஓமம். ஹுதத்தோடு கூடியது ஔத்திரி.

இந்த ஔத்திரி சமயம், விசேடம், நிருவாணம் என்று மூன்று வகைப்படும்.

(அ) சமய தீட்சை: வேள்விச் சாலை அமைத்து, தீ உருவாய் விளங்கு கின்ற இறைவனை சீடன் வழிபடும்படி செய்து, அவனை ஓமத்தால் தூய்மைப்படுத்துவது. இதன்மூலம் சீடன் திருவைந்தெழுத்து ஜபித்தல் முதலிய சரியை நெறியினை பின்பற்றுவதற்கு தகுதி பெறுவான். இறைவனுடையத் திருப்பெயரைக் கேட்டுச் சிந்திக்கும் வாய்ப்பு அளிப்பதால் இந்த தீட்சை 'மந்திராதிகாரை' எனப்படும்.

(ஆ) விசேட தீட்சை: சமய தீட்சை பெற்ற சீடனை சிவபுத்திரன் ஆகச் செய்வது. இதனால் சீடன் கிரியை நிலைக்கும் பிறகு யோக நிலைக்கும் தகுதி பெறுகிறான். திருமுறைகள் முதலிய தூய அருள்நூல்களை ஓதுதல் அவற்றின் நுண்பொருள்களைச் சிந்தித்தல் முதலியவை ஞானபூசை எனப்படும். அதற்கானத் தகுதியை இந்த விசேட தீட்சை அளிக்கும். இதனால் இந்த தீட்சை 'அர்ச்சனாதிகாரை', 'யோகாதிகாரை' என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

(இ) நிருவாண தீட்சை: சரியை, கிரியை யோகங்களில் வழுவாமல் நின்ற சீடனது வினைகளை வறுத்த விதைபோல வலியிழக்கச் செய்து, ஆணவ, கன்ம மலங்களின் வலிமையையும் நீக்கி முப்பொருள் பற்றிய மெய்யுணர்வை விளங்கச் செய்வது. இதன்மூலம் சாஸ்திரங்களின் உண்மைப் பொருளின் ஆராய்ச்சிக்கான தகுதியை சீடன் பெறுகிறான். இந்த தீட்சைப் பெற்றோர் மேற்கொள்ளும் நெறி ஞானநெறி. மேலும், இவர்கள் சிவபூஜையினையும் யோகப் பயிற்சியினையும் விடாமல் மேற்கொள்வர்.

திருமஞ்சன நீர்: இறைவனுக்குச் செய்யப்படும் அபிசேக நீர்.


திருவமுது: நைவேத்தியம் செய்த பிரசாதம்.

பாகசாலை: சமையல் செய்யும் இடம்.


யோகாப்பியாசம்: ஏழுவகை தீட்சைகளில் ஒன்று யோகம்.

வெண்பா யாப்பு: ஆசிரியர் அறிவுறுத்திய பொருளை அவர்பால் ஐயமறக்கேட்டு தெளிந்துக்கொள்வதற்காக மீண்டும் வினவும் முறையில் வினா அமைப்பில் வினாவெண்பா இயற்றப்பெற்றது. யாப்பிலக்கண முறைப்படி அமைந்துள்ளது.











9 788178 835716

புத்தகங்கள் இணையதளம் மூலம் ஆர்டர் செய்ய

ஸ்ரீராமகிருஷ்ண

சென்னை - 4. Email

publicati

ase contact:

lission

apore 539784

Fax: 62885798

ramakrishna.org.sg

www.ramakrishna.org.sg

S$ 5/-

Saiva Samaya Santana Kuravar

ISBN : 978-81-7883-571-6